பக்கங்கள்: இருபத்திநான்கு +XVI=40

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 23 செவ்வாய்க்கிழமை (06.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 131

# தமிழர் தாயகத்தில் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வே தேவை

## கூட்டமைப்பின் நல்லூர்க் கூட்டத்தில் மாவை அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 06

தமிழ் மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்-

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில்-

தமிழ் பேசும் மக்கள் ஆட்சி செய்யும் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கும் வகையிலான -

அரசியல் தீர்வு ஒன்றே இன்றைய தேவை.

அதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது. அதனை நாடியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உழைக்கும்; அதற்காகவே பாடுபடும்.

*யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் உள்ள வாக்காளர்கள் அதனை மனத்தில் இருத்தி தமது முழு ஆதரவையும் எமக்கு வழங்கவேண்டும்.*

(24ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாக்காளர்கள் நூறு வீதம் தமிழர்களாக இருக்க மாட்டார்கள்

### சுட்டிக்காட்டுகிறார் கூட்டமைப்பின் வேட்பாளர் சரவணபவன்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ். மாவட்டத் தேர்தலில் இம்முறை மட்டுமே நூற்றுக்குநூறு வீதமான தமிழர்கள் வாக்காளர்களாக இருப்பார்கள். அடுத்து வரும் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் மூன்று தொடக்கம் ஐந்து வீதமானோர் ஏனைய (கலப்பு) இனத்தவர்களாகவே இருப்பார்கள் என்பது நிச்சயம்.

இவ்வாறு கூறினார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான ஈ. சரவணபவன். தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட கிளைத் தலைவர் பொ. கனகசபாபதி தலைமையில் நல்லூர் சட்டநாதர் கோயிலுக்கு அருகில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு உரையாற்றியபோது மேலும் கூறியதாவது:-

நாளை மறுதினம் நடைபெறவுள்ள தேர்தலில் வெற்றி யாருக்கு? ராஜபக்ஷவுக்கா, தமிழருக்கா என்பதே கேள்வி ஆகும்.

இன்று அரசியல் வாதிகள் பலரும் அகதி முகாம்களில் வாழும் மக்களின் வாக்குகளைப் பணத்திற்கு விலைபேசிச் செல்கின்ற

(24ஆம் பக்கம் பார்க்க)

## அரியநேத்திரனின் பிரசார அணியின் மீது களுவாஞ்சிக்குடியில் நேற்றுத் தாக்குதல்!

மட்டக்களப்பு, ஏப். 06

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளரும் அக்கட்சியின் முன்னாள் எம்.பியுமான பா. அரியநேத்திரன் மற்றும் அவரது ஆதரவாளர்கள் களுவாஞ்சிக்குடியில் வைத்து நேற்று தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இத்தாக்குதலில் அரியநேத்திரனின் ஆதரவாளர்கள் மூவர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் அரியநேத்திரன் பயணித்த வாகனம் மற்றும் அவரின் பிரசார அணியினர் புறப்பட்டு வந்த இரு வாகனங்கள் சேதமடைந்து விட்டன. பொதுமகன் ஒருவரின் ஓட்டோவும் சேதமாகி விட்டது.

இறுதிக்கட்டத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக அரிய நேத்திரன் சுமார் 30 பேர் கொண்ட ஆதரவாளர்கள் சகிதம் மூன்று வாகனங்களில் களுவாஞ்சிக் குடிக்கு புறப்பட்டு வந்திருந்தார். அவர்கள் முன்னாள் எம்.பி இராசமாணிக்கம் சிலைக்கு முன்பாக மதியம் 2.30 மணியளவில் பிரசாரங்களில் ஈடுபட்டனர். அவர்கள் பிரசாரங்களில் ஈடுபட்ட இடத்துக்கு

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதம் வைத்திருப்போர் மீது கடும் சட்ட நடவடிக்கை

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்போருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் தனிப்பட்ட நபர்கள் ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாது எனவும், அவ்வாறு வைத்திருக்கும் நபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

கட்சி ஆதரவாளர்கள் ஆயுதங்களைப் பயன்படுத்துவதனை வேட்பாளர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் தடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள் பாவனை தொடர்பில் தங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பில் இதுவரையில் 274 முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும், இந்த சம்பவங்கள் தொடர்பில் இதுவரையில் 244 சந்தேக நபர்கள் கைது

(24ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலின் பின் ஒரு வார காலத்துக்கு ஆர்ப்பாட்டம் பேரணிகளுக்குத் தடை!

### பாதுகாப்பு மற்றும் தீவிர கண்காணிப்புக்கு 2,584 நடமாடும் பிரிவுகள் நாடெங்கும்

கொழும்பு, ஏப்.06

எதிர்வரும் பொதுத் தேர்தல் முடிவடைந்து ஏழு நாள்கள் வரை ஊர்வலங்கள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல் களுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

இன்று நள்ளிரவு முதல் பாதுகாப்பு மற்றும் தீவிர கண்காணிப்புப் பணிகளுக்கென நியமிக்கப்பட்டுள்ள 2,584 நடமாடும் பாதுகாப்புப் பிரிவுகளும் செயற்பட ஆரம்பித்துள்ளன. (21 ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Samastha Lanka Government General Employees Union

## அரச பொது ஊழியர் சங்கம்



எமது சங்கம் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் நேரடியாக நியமிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் கலாநிதி.ந.யோகராஜன் அவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைக்கு அமைய

(1) படித்த இளைஞர்கள் அனைவருக்கும் உயர்கல்வியும், உடனடி வேலைவாய்ப்பும்
(2) வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் உடனடியாக அரசபணிகளில் நியமனம்
(3) கிராம சேவையாளர் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை நியமனக் கடிதம் கிடைக்காதவர்களுக்கு உடனடியாக அவர்கள் விரும்பும் இடத்தில் நியமனம்
(4) முன்பள்ளி ஆசிரியர்களில் ஆசிரியர் நியமனத்துக்கு தகுதி உடையவர்களுக்கு அரச ஆசிரியர் நியமனத்துக்கு உள்வாங்குவதுடன் ஏனையோருக்கு ஒப்பந்த அடிப்படையில் (சேமலாப நிதி வசதியுடன்) நியமனமும், தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடி நிரந்தர நியமனம்
(5) அரச வைத்தியசாலை உத்தியோகத்தர்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி நியமனத்திற்கு காத்திருப்போருக்கு உடனடி நிரந்தர நியமனம்
(6) அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு அதே திணைக்களத்தில் வேலைவாய்ப்பிற்கு முன்னுரிமை வழங்குவதுடன் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுக்கு வாய்ப்பளித்தல்
(7) அரச உத்தியோகத்தர்களுக்கு வசதிக்கேற்ப விரும்பும் இடத்தில் உடனடி இடமாற்றம், பதவியுயர்வு, நிரந்தர வீடு மற்றும் தொடர்மாடி வீட்டு வசதி

என்பவற்றை உடனடியாக ஜனாதிபதி அவர்களின் மூலம் உடனடித் தீர்வு காண அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்பதை அனைத்துத் தரப்பினருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருவதுடன் ஜனாதிபதி அவர்களைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்மாவட்ட வேட்பாளரும் கல்வி நிர்வாகப்பின்புலத்தையும் கொண்டவரும் எந்நேரமும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சுதந்திரமாக தொடர்பு கொள்ளக் கூடியவரும் சமாதான விரும்பியுமான கலாநிதி.ந.யோகராஜன் அவர்களுக்கு வெற்றிலைச் சின்னத்திற்கு நேரே புள்ளடி இடுவதுடன் இலக்கம் 5 ற்கு மேலேயும் புள்ளடியிட்டு அவரை பெருவெற்றிபெறச் செய்வதன் மூலம் எமது அவசரத் தேவைகளை உடன் நிறைவு செய்வோம். எமது தீர்மானத்திற்கு அனைவரும் பேராதரவு தாருங்கள்.



X

வளமான வாழ்வு

1 2 3 4 5 6 7 8 9 10
11 12

District Co-Ordinator
Samastha Lanka Government General Employees Union


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா
**மகாதேவன்** (தேவன்)

தோற்றம் 24.05.1950 — மறைவு 19.03.2009

திதி: 06.04.2010

அன்பின் உறைவிடமே பாசத்தின் பிறப்பிடமே
உம் இனிய வதன முகமும் நினைவுகளும்
எம்மைவிட்டு என்றுமே நீங்காதையா

உம் நினைவுடன்:
மகாதேவா அற்புதம் (அக்கா).

பழம் வீதி,
கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம். (96562)

## மரண அறிவித்தல்

### *சின்னத்தம்பி அன்னப்பிள்ளை*



சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், கண்டி வீதி, பெரிய ரசடி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அன்னப்பிள்ளை 03.04.2010 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், கணேசு (சுவிஸ்), விக்னேஸ்வரன் (சுவிஸ்), நடேசு(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சூரியகலா, மாலினி, லிங்கேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சபாரத்தினம் நாகேஸ்வரி, சுப்பிரமணியம் சகுந்தலா, சந்திரசேகரம் சோதிமலர் ஆகியோரின் பெரியதாயாரும், நிரோசா, நிவேதன், வினோத், வினிபந், கிசோக், கஸ்மினி, அசோக், சசிகுமார், பவானி, சகிலன், கௌசிகா, தயாபரன் சோபனா, கஜந்தன், கிரிசாந், ரொமியா, திசாந் ஆகியோரின் பேர்த்தியாரும், மதுசியா, நிதர்சன், பவித்திரா, வானுசா, வத்சலா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டி வீதி,
பெரியரசடி, சாவகச்சேரி.

தகவல்:
**பிள்ளைகள்.**

(அ/566477)


# எமது இறுதி மூச்சுவரை தமிழ்த் தேசியத்திற்காக குரல் கொடுப்போம்



எமது தமிழ்த் தேசியம் என்பது பல்லாயிரக் கணக்கான எமது உறவுகளின் தியாகத்தால் கட்டி வளர்க்கப்பட்டது.

அளப்பரிய தியாகத்தாலும் கடின உழைப்பாலும் வளர்க்கப்பட்ட தமிழ்த் தேசியத்தை பாதுகாக்க எம் இறுதி மூச்சுவரை உழைப்போம்.

இத்தனை தியாகத்துக்கும் எமது மக்களின் நின்மதியான வாழ்வுக்காகவும் அர்த்தமுள்ள நிரந்தரமான கௌரவமான அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.

அது தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணயம், தனித்துவமான இறைமையுள்ள தேசமாக அமையவேண்டும்.

## தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க எம்மோடு அணிதிரளுங்கள்

பாராளுமன்றப் பொது தேர்தல் 2010

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

எம் உயிர் இருக்கும்வரை தமிழ்த் தேசியக் கொள்கைகளை கைவிடப்போவதில்லை

## செல்வராஜா கஜேந்திரன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர்

X 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழ் மக்கள் ஒன்றுபட்டுத் தீர்ப்புக் கூற வேண்டிய வேளை இது

இலங்கையின் புதிய நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நாளை மறுதினம் நடைபெறப் போகின்றது. பிரசார நடவடிக்கைகள் நேற்றிரவுடன் முடிவடைந்து விட்டன. சுமார் 48 மணி நேர ஓய்வுக்குப் பின்னர் மக்கள் தங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக நாளை மறுதினம் காலை முதல் வாக்களிக்கத் தொடங்குவார்கள்.

தென்னிலங்கை மக்களைப் பொறுத்தவரை இது அடுத்த ஆறு ஆண்டுகளுக்குத் தம்மை ஆட்சி செய்யப் போகும் அரசுப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான ஒரு வாக்களிப்பு மட்டுமே. அதுவும் நாட்டின் அடுத்த ஆறரை ஆண்டுகால நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியில் நீடிக்கப் போகின்றவர் மஹிந்த ராஜபக்ஷவே என்பது உறுதியாக்கப்பட்ட நிலையில் இந்தப் பொதுத் தேர்தலில் அவர்களது தீர்மானம் அதிகம் சர்ச்சைக்குரியதாக இருக்க மாட்டாது.

ஆனால், வடக்கு - கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை, தமிழ்த்தேசத்தைப் பொறுத்தவரை, இத்தேர்தல் வெறுமனே அடுத்த ஆறு ஆண்டுகளுக்கான தமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளை அவர்கள் தேர்வு செய்யும் தேர்தல் மட்டுமல்ல. வரலாற்றுத் திருப்புமுனையில் தடுமாறித் துவண்டு, எதிர்காலப் பாதை குறித்து தெளிவற்று, அவலப்பட்டுக் கிடக்கும் ஈழத் தமிழினத்தின் எதிர்காலத் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகும் - அதன் தடத்தையே நிச்சயிக்கப்போகும் - ஒரு தேர்தலாகவே இது கட்டவிழ்கின்றது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலும், பிற தமிழர் தாயகப் பிரதேசங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிப் பெரும் கட்சியாக - சக்தியாக மேலெழுந்து வருவதற்கான தன்மை காணப்படுவதாக 'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை ஞாயிறன்று தெரிவித்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய வாதத்தை வரித்துக் கொண்டிருக்கும் கட்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே நம்பகத் தன்மை அதிகளவு உள்ளது என்றும் அப்பத்திரிகை தெரிவித்திருக்கின்றது.

தமிழ்த் தேசியத்தின் தலைவிதியை - செல்நெறியை - எதிர்காலத் தடத்தை - நிர்ணயிக்கப்போகும் இந்தத் தேர்தலில், எந்தத் தரப்புக்கு வாக்களிப்பதன் மூலம் தங்களின் அரசியல் போக்கைச் சரியான பாதையில் நிலைநிறுத்திக் கொள்ள முடியும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கும் தமிழர்கள், 'இந்துஸ்தான் ரைம்ஸ்' போன்றவற்றின் மேற்படி கருத்தை உள்வாங்கிக் கொள்வதும் அவசியமாகும்.

'இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தனும் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

*''தமிழ் மக்கள் இன்றைய கால கட்டத்தில் தமது வாக்குரிமையை முழுமையாகப் பயன்படுத்தி, தமது அரசியல் தீர்மானம் எதுவென்பதை இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஐயப்பாடின்றி - ஏகோபித்த குரலில் - தெளிவாக - வெளிப்படுத்த வேண்டும், எமது மக்கள் இதைக்கட்டாய, புனித கடமையாகக் கருதி நிறைவேற்ற வேண்டும். எமது மக்களுடைய தீர்ப்பு பலம் வாய்ந்ததாக - தெளிவானதாக - இருக்குமானால் அதனை மதிக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஏற்படும். அத்தகைய தாக்கத்தை ஏற்படுத் தக்கூடிய தீர்ப்பை இத்தேர்தலில் நமது மக்கள் முன்வைக்க வேண்டும்''* - என்று சம்பந்தன் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

இந்த தேர்தலில் தமிழர்களின் ஐக்கியத்தைச் சிதறடிக்கச் செய்வதன் மூலம் அவர்களின் உரிமைக் குரலை அடக்க வேண்டும் என்று ஆட்சிப்பீடம் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது என்பது வெளிப்படை.

அதற்காகவே, தமிழர் தாயகத்தின் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பல டசின் சுயேச்சைக் குழுக்களும் அணிகளும், தென்னிலங்கையின் ஆசீர்வாதம் மற்றும் அனுசரணையுடன் களம் இறங்கப்பட்டுள்ளன என்பது வெளிப்படையான இரகசியம்.

தென்னிலங்கையின் இந்த சாணக்கிய தந்திரோபாயத்தை - சதியை - முறியடிப்பதாயின், இலங்கைத் தமிழர்கள் மத்தியில் அவர்களின் தேசிய உறுதியை வெளிப்படுத்தியபடி, மக்கள் செல்வாக்குப் பெற்று மிளிரும் தரப்பை வலுப்படுத்துவதே ஒரே வழியாகும். அதைவிடுத்து உதிரித் தரப்புகளுக்கு தமது வாக்குகள் சிதறிப்போகத் தமிழர்கள் இடமளிப்பார்களாயின், அது தமிழர்கள் தம் தலையில் தாங்களே மண்ணை அள்ளிப் போடுவதாகிவிடும்.

முப்பது ஆண்டுகாலப் போரின் முடிவில் பேரனர்த்தங்களை எதிர்கொண்டு, பேரிழப்புக்களைச் சந்தித்து, அவலப்பட்டு, அல்லற்பட்டு, எதிர்காலம் பற்றிய தெளிவின்றி, துவண்டு கிடக்கும் ஈழத்தமிழினத்துக்கு இன்று தேவை ஐக்கியம். அதன் மூலம் கிட்டும் ஒன்றுபட்ட தலைமை. அந்த ஒளிக்கீற்றே நொடித்துக்கிடக்கும் தமிழினத்தை நிமிர்ந்து நிற்க வழிகாட்ட முடியும்.

அதற்கு, ஏற்கனவே வலுப்பெற்று நிற்கும் சக்தியை - தரப்பை - மேலும் வலுப்படுத்தி நமது ஐக்கிய உறுதியைக் காட்டுவதே ஒரே மார்க்கம்.

இந்த விடயங்களை கவனத்தில் எடுத்து [illegible]களை ஓரங்கட்டி தீர்ப்புக்கூற வேண்டிய வேளை நெருங்கிவிட்டது.

# கிளிநொச்சி பஸ்கள் ஆஸ்பத்திரி வரை செல்ல அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பொதுமக்கள், நோயாளர்கள் வேண்டுகோள்

கிளிநொச்சி, ஏப். 06

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிச் செல்லும் போக்குவரத்துச் சபையின் பயணிகள் பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் கிளிநொச்சி தபால் நிலையத்துக்கு முன்பாக தற்காலிகமாக இயங்கும் பஸ் நிலையத்துடன் நிறுத்தப்படுவதால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி, இராணுவ சிவில் அலுவலகம், கிளிநொச்சிச் செயலகம் போன்றவற்றுக்குச் செல்லும் மக்கள் இதனால் பெரும் சிரமம் அடைகின்றனர். தற்காலிக பஸ் தரிப்பிடத்தில் இருந்து நீண்ட தூரம் நடந்துசென்றே ஆஸ்பத்திரி மற்றும் அலுவலகச் சேவைகளைப் பெற முடிகிறது.

கிளிநொச்சி பொதுமருத்துவமனை ஏ-9 வீதியில் ஆனந்தபுரம் பகுதியில் உள்ளது. அங்கு செல்வதற்கு மக்கள் ஒட்டோவை வாடகைக்குப் பிடிக்க வேண்டும். அல்லது கால்நடையாகவே செல்ல வேண்டும். இதனால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மீள்குடியேற்றம் மற்றும் பதிவுகளுக்கான இராணுவ சிவில் அலுவலகம் இயங்கிவருகின்றது. எனவே மக்கள் அதிகமாக அந்தப்பகுதிகளுக்கே செல்ல வேண்டியுள்ளது. ஆனால் பஸ்கள் தபால் நிலையத்துடன் நிறுத்தப்படுவதால் தாம் வீணாகப் பணத்தைச் செலவிட வேண்டி ஏற்படுவதாகவும் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

எனவே தமது அன்றாட அத்தியாவசிய சேவைகளை ஈடுசெய்ய வசதியாக இந்த பஸ் சேவைகளை கிளிநொச்சி ஆஸ்பத்திரி வரையிலும் நீடிக்க வேண்டும் என்று போக்குவரத்துச் சபை அதிகாரிகளையும், தனியார் சிற்றூர்திச் சங்கத்திடமும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(ஒ-10)

# தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு இன்றேல் நாடு மீண்டும் மோசமான குழப்பத்தில்

## அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 6

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வென்று ஆட்சியைக் கைப்பற்றுபவர்கள் அதிகளவு சுயாட்சி கோரும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என வலியுறுத்தியுள்ள அரசியல் ஆய்வாளர்கள், இதனை நிறைவேற்றுவதற்கு தவறும் பட்சத்தில் நாடு மீண்டும் மோசமான குழப்ப நிலைக்குள்தள்ளப்படலாம் என்று எச்சரித்துள்ளனர்.

'ஏ.எவ்.பி.' செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் 'ஏ.எவ்.பி'க்கு மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

எதிர்க்கட்சிகளைத் துன்புறுத்துகிறார் என்றும் அரசை விமர்சிப்பவர்களை அடக்கி ஒடுக்குகிறார் என்றும் விமர்சகர்களால் குற்றம் சாட்டப்படும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் தனது அதிகாரத்தை மேலும் பலப்படுத்திக்கொள்ளவுள்ளார்.

கடந்த ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று மீண்டும் தெரிவுசெய்யப்பட்ட அவரின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத் தேர்தலில் தெளிவான பெரும்பான்மையைப் பெறும் சூழல் தென்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பின்னால் அணிதிரண்டிருந்த எதிர்க்கட்சிகள் தற்போது பிளவுபட்டதன் காரணமாக ஜனாதிபதியின் கட்சி இலகுவாக வெற்றி பெறும் நிலையில் உள்ளது.

ராவய ஆசிரியரும், அரசியல் விமர்சகருமான விக்டர் ஐவன் தெரிவிக்கையில், பெரும்பான்மையை அதிகரிப்பதே அரசின் முன்னால் உள்ளபிரதான சவால் என்று தெரிவித்துள் ளார்.

விடுதலைப் புலிகளின் பிரிவினைப் போராட்டத்துக்கு காரணமாக இருந்த தமிழ் மக்களின் அதிகளவு சுயாட்சிக்கான விருப்பத்துக்குப் புதிய அரசு தீர்வுகாண வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய நல்லிணக்கத்துக்கான பரந்துபட்ட நிகழ்ச்சித் திட்டம் அவசியம் எனத் தெரிவிக்கும் விக்டர் ஐவன், ஜனாதிபதி எதிர்க்கட்சிகள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் இந்த விடயத்தில் ஐக்கியப்பட வேண்டும் என்கிறார்.

அவர்கள் இந்த விடயத்தில் தோல்வி அடைந்தால், நாடு பாரிய குழப்ப நிலையை எதிர்கொள்ளும் என மேலும் குறிப்பிட்டுள்ள விக்டர் ஐவன், விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவடைந்துள்ளமை புதிய ஆரம்பம் ஒன்றுக்கான வாய்ப்பை அரசியல் கட்சிகளுக்கு வழங்கி உள்ளது என்கிறார்.

நாடு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை குறித்து தேர்தல் பிரசாரங்களில் எவ்வித விவாதங்களும் இடம் பெறவில்லை என்கிறார் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து.

அடுத்த நாடாளுமன்றத்தில் சிறுபான்மைக் கட்சிகளுக்கு கிடைக்கும் ஆசனங்களைப் பொறுத்தே சுயாட்சிக்கான கோரிக்கையின் வேகமும் அமைந்திருக்கும் என்கிறார் அவர். (அ-சி)

# பொன்சேகாவை ஒழித்துக் கட்டும் தேவை கருணாவுக்கும் கே.பிக்கும்

## மஹிந்த அரசு துணைபோகிறது என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப். 06

கருணா அம்மான் மற்றும் கே.பி. உள்ளிட்ட புலித்தலைவர்களுக்கு ஜெனரல் சரத் பொன்சேகாவைக் கொலை செய்யவேண்டிய தேவை ஒன்று உள்ளது என்றும், அந்தத் தேவையை நிறைவேற்றும் வகையில் மஹிந்தவின் அரசு செயற்படுகிறது என்றும் பொன்சேகாவின் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டுஉரையாற்றிய அக்கட்சியின் செயலாளர் விஜித ஹேரத்தே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

அரசில் உள்ள அரசியல்வாதிகளை விடவும் ஜெனரல் சரத் பொன்சேகாவே புலிகளின் முதல் இலக்காக இருந்தார். அதனால்தான் புலிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் அவரைக் கொலை செய்ய முற்பட்டனர். தேசத்தின் அதிஷ்டம் காரணமாக அவரின் உயிர் பிழைத்தது. புலிகளை ஒழித்துக்கட்டினார்.

இருப்பினும், பொன்சேகாவை எப்படியாவது இல்லாது ஒழிக்க வேண்டிய தேவை யுத்தத்தால் எஞ்சியுள்ள கருணா அம்மான் மற்றும் கே.பி. போன்ற புலித் தலைவர்களுக்கு உள்ளது. அவர்களின் தேவையை நிறைவேற்றும் விதமாகவே அரசு செயற்படுகிறது. கே.பியிடம் இருக்கும் பணம் மற்றும் தங்கம் போன்றவற்றைச் சுருட்டி எடுப்பதற்காக கே.பியின் விருப்பத்துக்கு ஏற்ப அரசு செயற்படுகிறது.

அரசின் சதி வலையில் இருந்து பொன்சேகாவைக் காப்பாற்றுவதற்காக இந்நாட்டு மக்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சியின் சின்னமான வெற்றிக் கிண்ணத்துக்கே வாக்களிக்க வேண்டும்.

இத் தேர்தலில் பொன்சேகா கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்று அடுத்த மாதம் 22ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு வந்து அவரது கன்னி உரையை நிகழ்த்துவார். - என்றார். (சி)

# மனித உரிமை ஆணைக் குழுவிடம் அனோமா நேற்று மகஜர் கையளிப்பு

கொழும்பு, ஏப். 06

ஜெனரல் சரத் பொன்சேகாவின் உடல்நிலையைப் பரிசோதிக்க விசேட வைத்திய நிபுணர்களுக்கு அனுமதி வழங்க அரசு மறுப்பதன் மூலம் பொன்சேகாவின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது எனத் தெரிவித்து அவரது பாரியார் அனோமா பொன்சேகா நேற்று மனித உரிமை ஆணைக்குழுவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் கொழும்பு - 07இல் அமைந்துள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் காரியாலயத்துக்குச் சென்று அவர் இந்த மகஜரைக் கையளித்தார்.

இந்த விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட வேண்டும் என்று அனோமா அந்த மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அனோமா ஊடகங்களுக்குக் கூறியவை வருமாறு:-

விசேட வைத்திய நிபுணர்கள் தினமும் பொன்சேகாவைப் பரிசோதித்துப் பார்க்கின்றனர் என்று இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார். அதை நான் முற்றாக ஏற்க மறுக்கின்றேன். நான் தினமும் எனது கணவரைப் பார்த்துவிட்டு வருகிறேன். விசேட வைத்தியர்கள் எவரும் வருவதில்லை. அவர்களை அனுமதிக்குமாறுதான் நாம் அரசிடம் தொடர்ச்சியாகக் கேட்டுக்கொள்கிறோம்.

அதற்கான அனுமதியை அரசு வழங்க மறுத்து வருவதாலேயே நாம் இப்போது மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு வந்துள்ளோம். இந்த விடயத்தில் ஆணைக்குழு தலையிட வேண்டும் - என்றார்.

(சி)

## நாளை

பங்குனி 24 07.04.2010

புதன்கிழமை

திதி : அட்டமி காலை 7.01 வரை

நட்சத்திரம் : உத்தராடம் [illegible] 04.21 வரை

சுபநேரம் : 04.38-06.08 வரை

ராகுகாலம் : 12.08-01.38 வரை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்வனைஸ்ட் குழாய்கள்

(M. S. Black & G. I. Pipes)
½" to 6"
Light, Medium & Heavy




ரொஷ்னி ட்ரேட் இன்டர்நெஷனல் (பி) லிமிட்ட்.
23, அப்துல் ஹமீட் வீதி, கொழும்பு -12
தொ.பே : 011-2451700/ 01
தொ.நகல் : 011-2436638 மின் அஞ்சல் : roshni@slt.lk
இணையத்தளம் : www.roshnitrade.com
RTI
MOODY
ISO 9001:2008 CERTIFIED
Meet us at Stalls B 150 & 151 at the Jaffna Trade Fair


## உடுவில் மகளிர் கல்லூரி விடுமுறைக்காக இன்று மூடப்படும்

யாழ்ப்பாணம், ஏப்.6

உடுவில் மகளிர் கல்லூரி முதலாம் தவணை விடுமுறைக்காக இன்று செவ்வாய்க்கிழமை மூடப்படும் எனவும் மீண்டும் 2 ஆம் தவணை எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கைகள் இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படும் என்றும் அதிபர் தெரிவித்துள்ளார்.

(50-201)





தமிழர் தாயகத்தின்
ஒற்றுமையைக் காத்திட
சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட




உங்கள் வாக்குகள்!
இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
நடேசு இராசேந்திரன்
(Dip. in Accy, APFA, AMA, FMAAT)
அவர்களை வெற்றிபெறச் செய்வோம்



X 4

கோப்பாய் தொகுதி வாக்காளர்கள்


# உங்களின் வாக்களிப்பதற்கான மனித உரிமையை பாதுகாத்துக் கொள்ளுங்கள்

நாடாளுமன்றத் தேர்தலின் போது வாக்காளர் என்ற வகையில் உங்களுக்குரிய மேலான உரிமையை வேறு எவரும் பறித்தெடுக்க இடமளிக்க வேண்டாம்.

✘ நீங்கள் விரும்பும் அரசியல் கட்சியை அல்லது வேட்பாளரை தேர்ந்தெடுப்பதற்குரிய சுதந்திரத்தைத் தடை செய்ய எவருக்கும் இடமளிக்க வேண்டாம்.

✘ குறித்த நேரத்திற்குள் வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லுங்கள்.

✘ வாக்காளர் அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டையை எடுத்துச் செல்லுங்கள். தேசிய அடையாள அட்டை இல்லாவிட்டால்,

- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
- வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம்
- ஓய்வூதிய அடையாள அட்டை
- முதியோருக்கான அடையாள அட்டை
- சட்டரீதியான உங்கள் தற்காலிக அடையாள அட்டை
- மதகுருமாருக்கான அடையாள அட்டை என்பவற்றை எடுத்துச் செல்லலாம்.

*அனுசரணை: சமூக உரிமையை உறுதிப்படுத்தும் கரிட்டாஸ் ஸ்ரீலங்கா செடெக்.*

Caritas Sri Lanka - SEDEC

**கரிட்டாஸ் ஸ்ரீலங்கா - செடெக்**

இல. 133, தின்சி ரோட், கொழும்பு 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் பௌத்த கோயில்கள் அமைப்பது தமிழ் மக்களைப் புண்படுத்தும் செயற்பாடு

## ஜனாதிபதிக்கு சங்கரி கடிதம்



தமிழர்களின் தாயக பூமியாகிய வடக்கில் பௌத்த கோயில்களை அமைப்பதும் பௌத்த சின்னங்களை நிறுவுவதும் தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தும் ஒரு செயலாகும்.

இவ்வாறு தெரிவித்து ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி.

அவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முழுவிவரமும் வருமாறு:-

மேதகு மஹிந்த ராஜபக்ஷ,
ஜனாதிபதி,
அலரி மாளிகை,
கொழும்பு.

04.03.2010

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களே,

தங்களின் கவனத்திற்கு சில விடயங்களைக் கொண்டு வர விரும்புகின்றேன். மகிந்த சிந்தனை வேறு பலரின் சிந்தனையுடன் கலந்து மாசடைந்து அதன் தனித்துவத்தை இழந்துள்ளது என வருத்தத்துடன் தெரிவிக்கின்றேன். யுத்தம் முடிந்ததும் மக்கள் பல மாற்றங்களை எதிர்பார்த்தனர். துரதிஸ்டவசமாக அவர்கள் எதிர்பார்த்தது போல எதுவும் நடக்கவில்லை. அவர்களின் வாழ்க்கை முறை கூட மாறவில்லை. அவர்கள் எதிர்பார்த்த நாட்டைக் காணவில்லை. அதற்கு மாறாக நம்பிக்கையையும் இழந்த நிலையில்தான் இருக்கின்றார்கள்.

தாம் இழந்த அத்தனையையும் மீளப் பெற்றுத்தருவதாக நீங்கள் கூறினீர்கள் என சொல்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. அவர்கள் தம் உடைமைகள் அத்தனையையும் இழந்து தம் அன்புமிக்க உறவுகள் பலரையும் இழந்துள்ளனர். ஆனால் இன்றுவரை அரசு அவர்களின் சொத்து விவரங்கள் அதாவது அவர்களிடம் இருந்தவை, அவர்கள் இழந்தவை போன்ற விவரங்களை திரட்டுவதில் அக்கறையோ ஆர்வமோ காட்டவில்லை. இதுவரை அரசு வன்னியில் இறந்தவர்களின் விவரங்களையோ எப்படி இறந்தார்கள் என்றோ அவர்கள் என்னென்னவற்றை விட்டுச் சென்றார்கள் என்ற விவரங்களையோ தயாரிக்கவில்லை. தடுப்பு முகாம்களில் விடுதலைப் புலிகளிடம் ஒரு நாளேனும் பயிற்சி பெற்றவர்களைத் தெரிவிக்குமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்து விரைவில் அவர்கள் விடுவிக்கப்படுவார்களெனவும் தெரிவித்தாலும் அவர்கள் அனைவரும் நீண்ட நாள்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய பெற்றோர் அரசு தனது வாக்குறுதியை காப்பாற்றத் தவறிவிட்டதாக விரக்தியும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர். விடுதலைப் புலி உறுப்பினர் என தடுத்து வைக்கப்பட்டுள்ள சிலரிலேயே அவர்களின் குடும்பங்கள் தங்கியுள்ளன. சிலர் பல்கலைக்கழகம் மற்றும்கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்ற குறையில் உள்ளனர். சிலர் குடும்பத்தில் ஒரே பிள்ளையாவர். ஆனால் வசதியுடன் வாழ்ந்தவர்கள் இன்று நாடோடிகள் போலும் பிச்சை எடுக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் புறாக்கூடு போன்ற கூடாரங்களில் கொதிக்கும் வெயிலில் பல மாதங்களாத் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அதிகாரத்தில் உள்ள சிலர் பல்வேறு பொது தாபனங்களின் தலைவர்களையும் கோயில் தர்மகர்த்தாக்களையும் வரவழைத்து பெரும் தொகையான பண உதவியை வெளிப்படையாகச் செய்கின்றனர். வரவு செலவுத் திட்டத்தில் எந்த ஒதுக்கீட்டில் இதை செய்ய முடிகிறது என அறிய மக்கள் ஆவலாக உள்ளனர். இத்தகைய நிகழ்வுகள் தங்கள் ஆட்சியில் ஏற்படலாமா?

அடிக்கடி அமைச்சர்களும் அதிகாரிகளும் வடக்கே வந்து போகின்றார்களே தவிர வடக்கில் என்ன அபிவிருத்தி வேலை நடக்கிறது. பிரதானமாகப் புளுகக்கூடிய அபிவிருத்தி எதுவும் என் கண்களுக்குத் தெரியவில்லை. வன்னிப் பகுதியில் ஒன்றரை லட்சம் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. ஆனால் இதுவரை மீளக்கட்டப்பட்டுள்ளனவா? நீண்டநாள்களுக்கு முன் அகதிகளுக்கு சொற்ப பணமேனும் உதவியாக வழங்குமாறு கேட்டிருந்தேன், உப்பு, புளி, மிளகாய் போன்ற பொருள்கள் வாங்கவென அவ்வாறு செய்யத் தவறினால் அகதிகள் தமக்குக் கிடைக்கும் உலர் உணவுப் பொருள்களில் ஒரு பகுதியை விற்றே இவற்றை வாங்க முடிகிறது. விளைவு அவர்கள் சில நேர உணவுகளை தியாகம் செய்ய வேண்டிய நிலை துரதிஸ்டவசமாக இவைகள் தங்களின் கவனத்திற்கு அதிகாரிகள் கொண்டு வரவில்லை. ஆனால் சில அதிகாரிகளும் சில தொண்டர்களும் பல்வேறு வகையில் நிறைய சம்பாதிக்கின்றனர்.

நான் ஒரு பாரதூரமான விடயத்தை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். நிச்சயமாக நீங்கள் அதை அறிந்திருக்கமாட்டீர்கள். ஆயுத முனையில் சமய நம்பிக்கை மக்கள் மீது திணிக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது. 200 ஆண்டு இடைவெளிக்குப்பின் அந்த நிலை மீண்டும் நம் நாட்டில் வேண்டாம். பல்வேறு இடங்களில் பல்வேறு நிலையில் பல்வேறு மக்களின் சில மாறுபட்ட கருத்துக்கள் என் காதில் விழுகின்றன. அவற்றை உங்களுக்குத் தெரியப்படுத்த எனக்கு அனுமதி தரவும். பௌத்த சமயத்தில் எனக்குள்ள நம்பிக்கை விசுவாசம் பற்றி முழு உலகும் அறியும். இது நீங்கள் அறியாததும் அல்ல.

மகியங்கனை, நாகதீபன், களனி ஆகிய ஸ்தலங்களில் நான் எத்தனை தடவை விஜயம் செய்திருப்பேன் என்ற எண்ணிக்கை எனக்குத் தெரியாது. நான் இந்து மதத்தை சேர்ந்தவன். ஆனாலும் பல தடவைகள் தலதா மாளிகைக்கு சென்று புத்த பெருமானின் புனித சின்னத்தை வணங்கியுள்ளேன். மகாநாயக்கர்களின் ஆசியைப் பல தடவை பெற்றுள்ளேன்.

ஆகவே இங்குள்ள மக்கள் என்ன நினைக்கின்றனர்; என்ன பேசுகின்றனர் என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டிய தார்மீகக் கடமை எனக்குண்டு. இங்குள்ள மக்கள் பௌத்த சமயத்திற்கு எதிரானவர்கள் அல்லர். சங்கமித்த பிக்குகள் புனித அரச மரக்கிளையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள காங்கேசன்துறையில் தான் வந்திறங்கினர் எனப் பெருமைகலந்த மகிழ்ச்சியுடன் மக்கள் சிலவேளை பேசிக்கொள்வார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். பெருமளவில் இராணுவ ஆட்சிக்கு உட்பட்டுள்ள பகுதியில் மக்கள் துணிந்து பேச முடியாத நிலையில் உள்ளனர். ஒரு பௌத்த மதத்தவர்கூட வசிக்காத சில இடங்களில் பௌத்தமதம் திணிக்கப்படும் முறையைப் பற்றியே மக்கள் பேசிக் கொள்கின்றனர். நான் ஒரு தடவையல்ல பல தடவைகள் இராணுவத்தினரின் மனிதாபிமான செயற்பாடுகள் பற்றி மிகவும் பெருமையாகப் பாராட்டியுள்ளேன். அவர்களின் நடவடிக்கைகளை நானே நேரிலும் கண்டுள்ளேன். இராணுவத்தினரைப் பாராட்டும் மக்கள் வடக்கே பௌத்தம் திணிக்கப்படும் முறையை வெறுக்கின்றனர். இப்பணியை இராணுவத்திடம் விடாது மதகுருமார்களிடம் விட்டு விடவும். தற்போதைய முறையானது அரசுக்கு எதிராகவே திரும்பும் என்பது மட்டுமல்ல எதிர்பார்த்திருக்கும் பலனையும் தரமாட்டாது. அதற்கு மாறாக அரசு பலாத்காரமாக பௌத்தத்தை திணிக்க முயற்சிக்குமானால் அது ஒரு புத்திசாலித்தனமான செயல் என நான் கருதமாட்டேன். பௌத்தர்கள் எவரும் இல்லாத இடங்களில் புத்தபெருமானின் சிலைகளை அமைப்பது புத்தபெருமானையும் அவரின் புனிதமான போதனைகளையும் அவமானப்படுத்தும் செயலாகவே எவரும் கணிப்பர். மேலும் இச்செயல்களினால் இனவாதிகள் பல சங்கடமான நிலைமைகள் உருவாக்க அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற வாய்ப்பாகவே அமையும்.

இது பற்றிய நன்மை தீமைகள் பற்றி கருத்துக் கூறும் மனநிலையில் நம்மக்கள் இன்று இல்லை. ஆனால் பொதுவான அபிப்பிராயம் என்னவெனில் பல கஷ்டத்தின் மத்தியில் பெற்ற சுகந்திரம் பறிபோய் மீண்டும் ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும். துர்நோக்கோடு இல்லாமல் ஒரு சில அப்பாவிகளின் செயலாக இது இருக்கலாம். இக்கட்டத்தில் ஜனாதிபதி அவர்கள் உடனடியாகத் தலையிட்டு பௌத்த பெருமானை அவமதிக்கும் இந்தச் செயலுக்கு முற்றுப்புள்ளி இடுங்கள். நாட்டின் இப்பகுதியில் அமைதி இல்லாத நிலையில் ஏதாவது புது விடயங்கள் பற்றி ஆராய்வது சிந்தித்தால் சிறப்பு வாழ்க்கை திரும்பும் வரை பொறுத்திருப்பதே பொருத்தமானதாகும். என்று குறிப்பிட்டுள்ளார்.

# தருணங்களைச் சரிவரப் பயன்படுத்தப்படாமையே எமது அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் காரணம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



மூன்று தசாப்தகால இலங்கை ஜனாதிபதிகளுடன் தமிழ் அரசியல் வாதிகள் தருணங்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாத காரணத்தினாலேயே யுத்தங்களும், இழப்புக்களும் எமது மக்களுக்கு எற்பட்டன என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அராலி வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:

இந்தப் பாடசாலை மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு எனது வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பாடசாலை அதிபர், அசிரியர்கள், மாணவர்களின் கல்வி வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருவதையும் உணர முடிகின்றது. அந்த வகையில் பாடசாலையின் தேவைகள், குறைபாடுகள் என்பன நிச்சயம் நிவர்த்தி செய்யப்படும்.

30 ஆண்டுகாலமாக இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக எமது மக்கள் உயிர், உடைமை இழப்புக்களைச் சந்தித்துள்ளதுடன் பல்வேறு பாதிப்புகளுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இந்த உயிரிழப்புகளுக்கும், சொத்தழிவுகளுக்கும் முக்கிய காரணமாகத் திகழ்ந்தவர்கள் எமது முன்னைய அரசியல்வாதிகள் என்ற வரலாறு யதார்த்தமாகியுள்ளது - என்றார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் விக்கினேஸ்வரமூர்த்தி உரையாற்றும்போது இந்தப் பாடசாலைக்கு அமைச்சர் வருகை தந்திருப்பதானது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்துள்ளது. அவர் எமது பாடசாலை வளாகத்தையும், வகுப்பறைகளையும் பார்வையிட்டுள்ளார். எனவே, இங்குள்ள வளப்பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்துதர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்

அங்கு சித்தியடைந்த மாணவர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (50)

# இறையாண்மையை வென்றெடுத்தே பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்

## ஈரோஸ் பிரமுகர் அருளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஏப்.6

தமிழீழம் தமிழ் மக்களுக்குச் சொந்தமா னது சிங்கள நாடு சிங்கள மக்களுக்குச் சொந்தமானது. இலங்கை, இலங்கை மக்கள் அனைவருக்கும் சொந்தமானது என்னும் அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் தமிழீழத் தேசியத்துவ இறையாண் மையை வென்றெடுத்தே இனப்பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் -இவ் வ்வாறு தெரிவித்தார். ஈரோஸ் - ஈழவர் ஜன நாயக முன்னணியின் பிரமுகர் அருளர்.

ஈரோஸ்ஸின் கொள்கைப் பிரகடனம் - 2010ஐ வெளியிடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்.நகரிலுள்ள அவர்களது மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அருளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு,

சுயநிர்ணய உரிமை, தேசியம் என்ற சொற்பதங்கள் கருத்து ரீதியாக பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன. பல மட்டங்களில் பலவிதமான கருத்தில் கொள்ளும் நிலையுள்ளது. தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு இந்த சொற்பதங்கள் தடையாக இருந்துள்ளன. அதன் காரணமாக அந்த சொற்பதங்களை நாம் தவிர்க்க வேண்டும்.

நீண்ட கால - இடைக்கால - மற்றும் உடனடித் திட்டங்களின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் உடனடி, நீண்டகால தேவைகளைப் பூர்த்தி செய்து வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக்குக்குக் கொண்டு வந்து தமிழீழப் பிரதேசத்தின் அபிவிருத்தியை உறுதி செய்வோம்.

அபிவிருத்தி எனப் பலர் கூறித் திரிகின்றனர். அவர்களிடம் காத்திரமான திட்டங்கள் எதுவும் கிடையாது. புனர்வாழ்வு, மீளக்குடியேற்றம், மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்து நீண்டகால அடிப்படையிலான இனப்பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய திட்டங்கள் எதுவும் அரசிடமும் இல்லை.

ஆனால்,ஈரோஸிடம் இத்தகைய அபிவிருத்திக்குரிய திட்டங்கள் உள்ளன. குறிப்பாக, வடக்கு - கிழக்கு அபிவிருத்தி தொடர்பாக உரிய திட்டங்கள் எம்மிடம் உள்ளன.

90, 95ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் துரைராஜா தலைமையில் தீட்டப்பட்ட திட்டங்கள் அவற்றுள் முக்கியமானவையாகும்.அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஈரோஸ் நடவடிக்கைகளை எடுக்கும்.

அத்துடன், வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கில் புதிய கண்டு பிடிப்பு, உற்பத்தி அடிப்படையில் தொழில்துறைகளில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

குறிப்பாக, யாழ்ப்பாண வர்த்தக சமூகத்தின் மத்தியில் 10பேரை தொழிலதிபர்களாக மாற்றும் திட்டம் எம்முன் உள்ளது. அதன் மூலம் அடுத்த 3 ஆண்டுகளில் 30 ஆயிரம் பேருக்கு குடாநாட்டில் வேலைவாய்ப்புக்களை வழங்க எம்மால் முடியும்.

தமிழர் தாயகத்தில் வாழும் மக்களின் அன்றாட அவலங்கள், இன்னல்கள், இழப்புக்களை முடிவுக்குக் கொண்டு வந்து, அவர்களின் பாதுகாப்பையும் அச்சமற்ற வாழ்க்கையையும் கௌரவத்தையும் உறுதி செய்து மனித உரிமைகளைப் பேணுவதும் எமது நோக்கமாகும்.

தற்போது சுமூகநிலை ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.மக்கள் மத்தியில் சுதந்திர வாழ்வு ஏற்பட்டால் மட்டுமே சுமூக நிலை ஏற்படும். இதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்படும்.

அரசியற் காரணங்களுக்காகத் தடுத்து வைத்திருப்போரை விடுவிப்பது, அடுத்து வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோரின் வாழ்வாதாரத்தையும் சமூகப்பாதுகாப்பையும் நிரந்தரமான முறையில் உறுதிசெய்வது, வாழ்வாதாரத்தை உறுதிசெய்வது அரசின் கடமையாகும். அதனை அரசியலுக்காகப் பயன்படுத்தக் கூடாது.தமிழர் தாயகத் தின் கல்வி, சுகாதார சேவைகளை மேம்படுத்தி தேவைகளைப் பூர்த்தி செய்வது, சொத்துரிமையை உறுதி செய்து தனியார் துறையை ஊக்குவித்து கடற்தொழில், விவசாயம், கால் நடைவளர்ப்பு,கைத்தொழில் துறைகளை நவீனப்படுத்தி அவற்றின் விரிவாக்கத்திற்கு வழி ஏற்படுத்துவது.

தமிழர் தாயகத்தில் வாழும் அனைத்து சமூகங்கள் மத்தியிலும் பரஸ்பர நல்லெண்ணத்தையும், இணக்கப்பாட்டையும், சுமூக வாழ்வையும் உறுதி செய்வது காலத்தின் தேவை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித் தேர்தல் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 6

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்றிய வடமராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் வீடமாகாணக் கல்வி அமைச்சின் நிதிப்பிரிவால் நேற்றுத் திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

எனவே மேற்படி கொடுப்பனவுகளை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி வலயக்கல்வி அலுவலக நிதிக்கிளையில் பெற்றுக்கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (50-201)




எனது பேரன்பு மிக்க தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், வடக்கின் வசந்தம் விசேட தொழில் பயிற்சி மாணவர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், பெருமதிப்புக்குரிய பெற்றோர்கள், வர்த்தகப்பெருமக்கள், சமூக நிறுவனங்கள், மீனவ விவசாய நண்பர்கள், தீவக மக்கள் மற்றும் நலன்விரும்பிகள்

**அனைவருக்கும் என் இதயம் கனிந்த அன்பான வேண்டுகோள்**

நான் உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் கஷ்ட காலங்களிலும் முடிந்தவரை சேவையாற்றியுள்ளேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களால் எனக்கு வழங்கப்பட்ட விசேட சந்தர்ப்பத்தை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளின் ஏற்றம் மிகு நல் வாழ்வுக்கு சமூக மேம்பாட்டு திட்டங்களை நடைமுறைபடுத்துவதற்கும் பயன்படுத்த திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

**இளைஞர்கள் யுவதிகள் அனைவருக்கும் தொழிற் பயிற்சியும் உடனடி வேலைவாய்ப்பும்
இடம்பெயர்ந்த மக்கள் உடனடியாக ஊர் திரும்பவும், புதுவீடமைப்பும், புதுவாழ்வும்
தீவக மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தலுடன் வளமான வாழ்வும்
முகாமிலுள்ள, அங்கவீனமான இளைஞர், யுவதிகளுக்கு தொழிற் பயிற்சியும், புனர்வாழ்வும்
சுதந்திரமான வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்தலும், புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தலும்
சர்வ மதத் தலங்களின் புனரமைப்பு, சமூக எழுச்சித் திட்டம், முதியோர் பாதுகாப்புத் திட்டம்
என்பவற்றை மகிந்த சிந்தனையின் கீழ் உடன் நடைமுறைப்படுத்த உள்ளேன்.**

எனது அரசியல் விளம்பரம் போதுமானதாக இல்லை என பலரால் குறிப்பிடப்பட்டபோதும் உங்கள் பிள்ளைகளின் கௌரவத்தையும், ஒழுக்கத்தையும் முன்னிலைப்படுத்தியதால் எனது அரசியல் விளம்பரங்களுக்காக எமது பிள்ளைகளாகிய இளைஞர் சமுதாயத்தை நடுச் சாமத்தில் பசை வாளிகளுடன் திரிய விடவில்லை. கட்சி பணிகளுக்காக கோஷம் போட்டு வீதிகளில் அலைய விடவில்லை. தயவு செய்து எனது உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். நான் அரசியல் செய்வதற்கு அரசியல் வாதியில்லை. உங்கள் நலனில் அக்கறை கொண்ட மக்கள் சேவகன். உங்கள் பிள்ளைகளின் சுதந்தரம் மிக்க வளமான வாழ்வை உறுதிப்படுத்துவதுடன் உங்களின் தேவைகளை தீர்த்து வைப்பதில் எப்போதும் உங்களிடம் துணை நிற்பேன். உங்களின் ஏற்றம் மிகு வாழ்விற்கு நான் சேவை செய்வதற்கு பேராதரவு தாருங்கள்.

**உங்கள் சுக துக்கம் அனைத்திற்கும் எப்போதும் உங்களுடன் துணை நிற்பதுடன் உங்கள் வாழ்வின் உயர்ச்சிக்கு என்றும் ஏணியாக நிற்பேன்**



X

வளமான வாழ்வு

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

என்றும் உங்கள் அன்பு மிக்க தொழில்நுட்பக் கல்லூரி அதிபர்

கலாநிதி.ந.யோகராஜன்

ஜனநாயகம்
மற்றும் தேசிய ஒற்றுமையை
கட்டியெழுப்புவதற்காக மீண்டும்
யாழ் மாவட்டத்தில்
சரத் பொன்சேகாவின்
தலைமையில்



## ஜனநாயக தேசிய கூட்டணி

வெற்றிக்கிண்ணத்தை
வெற்றிபெறச்
செய்வோம்



10
**வீரராஜ்
லலித்குமார்**
யாழ்.மாவட்ட அணித்தலைவர்



11
**சக்திவேல்
தங்கேஸ்வரன்**



6
**பாலசிங்கம் கமலகுமார்**

X

## கண்ணீர் அஞ்சலி

எமது உதவி அரசாங்க அதிபர் மா.சிறீஸ்கந்தகுமார்
அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி நாகம்மா மாணிக்கவாசகர்**

(ஓய்வுபெற்ற மருத்துவ மாது)



அவர்களின் மரணச் செய்திகேட்டு
துயர்கொள்வதுடன் அன்னாரின் பிரிவால்
தவிக்கும் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த
இரங்கலைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அனைத்து உத்தியோகத்தர்கள்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை, வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி.

## நாடாளுமன்றப் பொதுத்தேர்தல்-2010

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



மக்களின் துன்பங்களில் எல்லாம் மக்களோடு மக்களாக நின்று பாடுபட்ட மக்கள் பிரதிநிதி. சிறந்த பேச்சாற்றல், மும்மொழியாற்றல், நிர்வாகத்திறன் செயற்திறன் பெற்ற ஒரே மக்கள் பிரதிநிதி. நாடாளுமன்றம் சென்ற பின்னும் மக்களோடு அதே வீட்டில் வாழப் போகின்றவர் அவரே மக்கள் பிரதிநிதி. 40வருடங்களாக கொள்கையில் உறுதியாக நின்று தமிழ்மக்களுக்காக இரண்டு தடவை சாவின் விளிம்பிற்கு சென்று உயிர் தப்பியவர் இவர்தான் மக்கள் பிரதிநிதி. வன்னிப் பேரழிவின் போது யாழ்.மாவட்டத் திலே நின்று மக்களுக்கு உதவி செய்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள், கல்வி வசதிகள் செய்து கொடுத்தவர் இவர்தான் மக்கள் பிரதிநிதி. இன்று தேர்தல் நேரத்தில் பலர் எதையும் சொல்லட்டும், நாங்கள் நம்பி ஏமாந்தது போதும். முகவரியுடன் யாழ்.மாவட் டத்தில் வாழ்ந்த, வாழப்போகின்ற

**திரு.சீ.வீ.கே.சிவஞானம்** அவர்களே

எங்கள் உங்கள் முதற்தெரிவு. மக்கள் பிரதிநிதியாக அதிகப்படியான விருப்பு வாக்குகளுடன் அவரை நாடாளுமன்றம் அனுப்புவோம். எனவே சித்திரை 8 ஆம் திகதி காலையிலே வாக்குச்சாவடி சென்று வெற்றியின் சின்னம் தமிழ் மக்களின் வீட்டிற்கு நேரே புள்ளடியிட்டு எமது மக்கள் பிரதிநிதி திரு.C.V.K. சிவஞானம் ஐயாவின் விருப்பு இல. 11 இக்கு மேலே புள்ளடியிட்டு அவரை பெரு வெற்றியுடன் நாடாளுமன்றம் அனுப்புவோம்.

X 11

**நல்லூர் வடக்குப்
பகுதி மக்கள்**

## நாடாளுமன்றப் பொதுத்தேர்தல்-2010

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் வெற்றிலைச் சின்னத்தில்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் X



9

டக்ளஸ் தேவானந்தா



6

கந்தசாமி கமலேந்திரன்



12

சில்வேஸ்திரி அலன்ரீன்

இல.9, இல.6, இல.12 வேட்பாளர்கள் எம்மோடு என்றும் ஆதரவாக உள்ள தங்களுக்கே எங்கள் ஆதரவு என்றும். தங்கள் வெற்றிக்கு எங்கள் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்.

சரவணை சின்னமடு வாழ் மக்கள்.

## பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மக்களின் சின்னம் மெழுகுவர்த்தி

தமிழர்கள் சுயாட்சி பெற
பாரம்பரிய நிலத்தைப் பாதுகாக்க
எமது பிரதேசங்கள் வளம் பெற
**தோழர் ஸ்ரீதரன்** வெல்லட்டும்.

X 6

**மெழுகுவர்த்திக்கே
உங்கள் வாக்கு**



**தி.ஸ்ரீதரன்** (தோழர் சுகு)
பொதுச்செயலாளர்,
பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
06.04.2010

# ஓர் அவசரக் கடிதம்

என் அன்புக்குரிய தமிழ் உறவுகளே,
வணக்கம்!

பொன்னுத்துரை ஐங்கரநேசன் ஆகிய நான், நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஒரு வேட்பாளனாக உங்களின் முன்னால் வந்து நிற்கிறேன்.

நான் ஒரு ஆசிரியனாகவும், ஊடகவியலாளனாகவும், சூழலியலாளனாகவும் உங்களுக்கு ஏற்கனவே நன்கு பரிச்சயமானவன். மேலும், பத்திரிகை அச்சுக்குப் போகும் இறுதித்தருணத்தில் இக்கடிதத்தை எழுதுவதால் என்னைப் பற்றிய விரிவான ஓர் அறிமுகத்தை இங்கு தவிர்த்துக் கொள்கிறேன்.

எமது உரிமைகளைப் பேணுவதற்கு மாத்திரம் அல்லாமல், எமது இயற்கை மற்றும் பண்பாட்டு மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும் எமது தாய் நிலத்தை நல்லாட்சி செய்யும் அரசியல் அதிகாரம் எங்களிடமே இருக்கவேண்டும். இதுவே எனது அரசியல் நிலைப்பாடு.

தமிழ்த்தேசியத்தை அடித்தளமாகக் கொண்ட செயற்பாடுகளில் பங்கேற்பதற்கு நான் ஒருபோதும் பின்நிற்பது இல்லை. எமது மக்கள் அரசியல் ரீதியாகத் தன்னாட்சி பெறவும், எமது இயற்கை மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியம் பாதுகாக்கப்படவும், எமது தாயகம் நீடித்த அபிவிருத்தி காணவும் எனது சக்தியையும் மீறி உழைப்பேன் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

எனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல அரசியல் பலமும் அவசியம். எனவே, தமிழரசுக்கட்சியின் சின்னமாகிய வீட்டுக்கு நேரேயும் எனது விருப்பு வாக்கு இலக்கமாகிய 2 க்கு மேலேயும் புள்ளடிகளை இட்டு உங்கள் வாக்குகளால் எனக்குப் பலம் சேர்க்குமாறு வேண்டுகின்றேன்.

உங்கள் எல்லோரையும் நேரில் வந்து சந்தித்தே வாக்குகளைக் கேட்க வேண்டும் என்று பெருவிருப்புக் கொண்டிருந்தேன். ஆனால், நேரம் அனுமதியளிக்காததால் எல்லோரையும் சந்திக்கமுடியவில்லை. மன்னித்து, இக்கடிதத்தை உங்கள் வீட்டுக்கான எனது வருகையாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,
அதிகார பலம், ஆயுத பலம், பணபலம்மிக்க
வேட்பாளர்களுக்கு மத்தியில்
உங்கள் வாக்குப் பலத்தை மாத்திரம் நம்பி நிற்கும்

பொ.ஐங்கரநேசன் M.Sc,PGDJMC
தமிழரசுக் கட்சி
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணி
## நாடாளுமன்றத் தேர்தல் 08.04.2010



வீ.ஆனந்தசங்கரி
இல 01

X

மூத்த தலைவர் ஆனந்தசங்கரி அவர்களையும்
கட்டடப் பொறியியலாளர், ஹாட்லிக்
கல்லூரியின் பழைய மாணவன்,
கரணவாயின் மைந்தன் இளையதம்பி
சாந்தசொரூபன் அவர்களையும்
அமோகவெற்றிபெறச் செய்ய



கு.சாந்தசொரூபன்
(J.P) கட்டடப் பொறியியலாளர் வடமராட்சி
இல 11

உதயசூரியனுக்கும்
இலக்கம் 1க்கும் இலக்கம் 11க்கும் விருப்பு வாக்குகளை அளித்து
வெற்றிபெறச் செய்யுங்கள். கல்வியாளர் சமூகம்

# தமிழர் விடுதலைக் கூட்டணி
## நாடாளுமன்றத் தேர்தல் 08.04.2010



வீ.ஆனந்தசங்கரி
இல 01

X

மூத்த தலைவர் வீ.ஆனந்தசங்கரியையும்
Rtd. அதிபர் பலாலி ஆசிரிய கலாசாலை
கு.சதாசிவமூர்த்தியையும் கல்வியாளர்
சமூகம் வெற்றிபெற வாக்களிக்குமாறு
வேண்டுகின்றது



கு.சதாசிவமூர்த்தி
Rtd அதிபர்
பலாலி ஆசிரிய கலாசாலை
இல 10

உதயசூரியனுக்கு வாக்களித்து
இலக்கம் 1க்கும் இலக்கம் 10க்கும் விருப்பு வாக்குகளை அளித்து
வெற்றிபெறச் செய்யுங்கள். கல்வியாளர் சமூகம்

# தமிழர் விடுதலைக் கூட்டணி
## நாடாளுமன்றத் தேர்தல் 08.04.2010



வீ.ஆனந்தசங்கரி
இல 01

X

பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள்,
வன்னி மக்கள் சிறையிலும்
தடைமுகாம்களிலும் அனுபவிக்கின்ற
துன்ப, துயரங்களுக்கு பரிகாரம் காண
விழைவது தமிழர் விடுதலைக்
கூட்டணியே!



த.தி.சம்பந்தர்JP
ஏழாலை
இல 03

எனவே உதயசூரியனுக்கு வாக்களித்து
இலக்கம் 1 இக்கும் இலக்கம் 3 இக்கும் விருப்பு வாக்குகளை அளித்து
வெற்றிபெறச் செய்யுங்கள்.

(95924)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010



சி.கா.செந்திவேல்
முதன்மை வேட்பாளர்
இல. 06



கா.கதிர்காமநாதன்
(செல்வம்)
இல.03



T.V.கிருஷ்ணசாமி
(ஓய்வுபெற்ற பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
இல.08

அன்பார்ந்த மக்களே!

* தமிழ் மக்களை அழிவுப் பாதையில் அழைத்துச்சென்ற அனைத்துத் தமிழ் தலைமைகளையும் நிராகரியுங்கள்.
* பேரினவாத ஆளும் வர்க்கக் கட்சிகளிடம் மண்டியிட்டு நிற்கும் தலைமைகளை நிராகரியுங்கள்.
* மக்களுக்கான மாற்று அரசியலைப் புதிய பாதையில் முன்னெடுக்க வரலாற்றுப் பட்டறிவோடு கேத்தல் சின்னத்திற்கு வாக்களியுங்கள்!

புதிய ஜனநாயகக் கட்சியின்
சுயேட்சைக்குழு 06

X

(96320)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் -2010

தகைமை உடையவர்களையே எமது பிரதிநிதிகளாக்குவோம்





2

ஓறேற்றர்
சுப்பிரமணியத்தின்
ஸ்கந்தவரோதயா
ஆசிரியர் குழாத்தின்
தலைமகன் முன்னாள் ஆங்கில ஆசிரியர்
A.G.N. விஜயரத்தினம் B.A.(London)
(முன்னாள் ஆங்கில ஆசிரியர்-சுழிபுரம்
விக்ரோறியா, காரை. இந்து)
அவர்களுடைய மகன் கலாநிதி.கென்னடி
விஜயரத்தினம் அவர்களை
முற்போக்கான கல்விச் சமூகத்தைக்
கட்டியெழுப்ப ஆதரிப்போம்.

எளிமை, தகைமை, அர்ப்பணிப்பு.
ஸ்கந்தா பழைய மாணவர்கள், காரைநகர்.

கலாநிதி. கென்னடி விஜயரத்தினம் M.A, Ph.D)
(முன்னாள் ஆங்கில விரிவுரையாளர்-கிழக்குப் பல்கலை)

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
(அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)

X 7

இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010

எங்கள் வெற்றியாளர்

## கா.யோகரட்ணம்

போடுங்கள் புள்ளடி
கலப்பைக்கு நேரே.
போடுங்கள் புள்ளடி
இலக்கம் 4இக்கு மேலே.



X 4

ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்)
(ஐக்கிய ஜனநாயக கோட்பாட்டை வலியுறுத்தும் கட்சி)
வடமராட்சி மக்கள்.

(94542)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2010



தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

## பிரான்ஸிஸ் வின்சென்ட்போல்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர், பருத்தித்துறை நகரசபை
முன்னாள் உப தலைவர், வடமராட்சி வடக்கு கிராம அபிவிருத்திச்
சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர்

## பிரான்ஸிஸ் வின்சென்ட்போல்

அவர்களை பெரு வெற்றி பெறச் செய்வோம்

X 6

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
வடமராட்சி மக்கள்.

(96370)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பே தமிழ் மக்களின் காப்பரண் வீட்டுச் சின்னத்துக்கே அனைவரும் வாக்களிப்போம்!

## வடமாகாண கல்வியியலாளர் ஒன்றியம் அறிக்கை

நாடாளுமன்றத் தேர்தல் 8 ஆம் திகதி நடைபெற இருக்கும் வேளையில் தமிழ் மக்கள் எடுக்க வேண்டிய ஒன்றிணைந்த தீர்மானத்தை சர்வதேசம் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது. அந்தத் தீர்க்கமான முடிவுதான் தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வையும், சுயநிர்ணய போராட்டத்திற்கான தேவையையும் உலகிற்கு எடுத்துச் சொல்லப்போகின்றது.

தேர்தலில் எமது தமிழ் உறவுகள் எத்தகைய முடிவுகளை எடுக்க வேண்டும், எந்தக் கட்சியை ஆதரிக்க வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில், கடந்தகால அனுபவங்களையும், நாளைய எதிர்பார்ப்புக்களையும் மிக ஆழமாக ஆராய்ந்து, தமிழ் உறவுகள் எடுக்க வேண்டிய உறுதியான, தளம்பல் அற்ற ஒரு தீர்மானத்திற்காக இவ்வறிக்கையை வடமாகாண கல்வியியலாளர்களின் சார்பில் கையளிக்கின்றோம்.

* தமிழ்மக்கள் மீது, தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்பட்ட மிலேச்சத்தனமான யுத்தத்திற்கு, அரசில் அங்கம் வகித்துக் கொண்டு, தமிழ் மக்களின் அழிவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் கட்சிகளுக்கு, எமது மக்கள் எவ்வாறு வாக்களிப்பது?

* தமிழர்களின் கலாசாரத்தையும், கல்வி நடவடிக்கைகளையும் சீர் குலைத்து தமிழர்களின் பாரம்பரிய நிலத்தைக் கூறு போட்டு தாயகத்தைச் சிதைக்கின்ற சிங்களப் பேரினவாத அரசுக்குத் துணை போகின்றவர்களுக்கு எமது மக்கள் எவ்வாறு வாக்களிப்பர்?

* விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உறவினர் என்றும், விடுதலைப் புலிகள் தம்முடனேயே தொடர்புகளை ஏற்படுத்துகின்றனர் என்றும் பொய்யான தகவல்களைப் பரப்பிக் கொண்டு, பல வருடங்களாக இந்திய அரசின் பாதுகாப்பில் தமிழகத்திலும், பல வருடங்களாக லண்டனிலும் அஞ்ஞான வாசம் செய்து அரசின் அனுக்கிரகத்துடன் களம் இற[illegible]விடப்பட்டிருக்கும் சந்தர்ப்ப அரசியல்வாதிகளுக்கு எமது மக்கள் எவ்வாறு வாக்களிப்பர்?

* தமிழ்மக்களை வேரோடு பெயர்த்து, எமது தமிழ் உறவுகளை அழிப்பதற்கான யுத்தத்தைத் தொடுத்தபோது, அரச பாதுகாப்பில் கொழும்பில் இருந்து கொண்டு விடுதலைப் புலிகளை விமர்சித்து, தமிழ் மக்களின் அவலங்களையும், படுகொலைகளையும் மௌனமாக இருந்து அரசுக்குப் பச்சைக்கொடி காட்டித் தற்பொழுது தந்தை செல்வாவினதும், உடுப்பிட்டிச் சிங்கம் சிவசிதம்பரம் அவர்களினதும் பெயர்களைத் தனது சுயநல சந்தர்ப்பவாதத்துக்குப் பயன்படும் அரசியல்வாதியின் கூட்டணிக்கு எமது மக்கள் எவ்வாறு வாக்களிப்பர்?

* ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் உறவுகளை அவர்களது பாரம்பரிய வாழ்விடங்களைவிட்டே துரத்தி அடித்து, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று, ஆயிரக்கணக்கானவர்களை ஊனமாக்கி வலுவிழக்க வைத்து எஞ்சியோரை ஏதிலிகளாக்கி, முட்கம்பி வேலிகளுக்குள் அடைத்து வைத்துக் காட்சிப் பொருளாக்கி சிங்களத் தேசத்தில் வெற்றிஷேஷ விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சிக்கு எமது மக்கள் எவ்வாறு வாக்களிப்பர்?

* 'தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் சாத்வீக நிலையில் இருந்து, ஆயுதம் ஏந்திப் போராடப்போகும் இளைஞர்களின் கைகளுக்கு மாறும் பொழுது, சர்வதேசம் எமது பிரச்சினைகளை உணரத் தொடங்கும்'-என்ற தந்தை செல்வாவின் தீர்க்க தரிசன உரைக்கு ஏற்ப தமிழ் மக்களின் வாழ்வுக்கான போராட்டத்தைக் கையில் எடுத்து தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக, தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடுதலைப் புலிகளுடன் பேச்சு மேசையில் பேசிக்கொண்டிருக்கும்பொழுது முதுகில் குத்தித் தமிழர்களின் உரிமைக் குரலை நசுக்கிய ஐக்கிய தேசியக் கட்சிக்கு எமது மக்கள் எவ்வாறு வாக்களிப்பர்?

* தமிழர்களின் வாழ்விடங்களில் சிங்களக் குடியேற்றங்களையும், பௌத்த சிங்களக் கலாசாரத்தையும் வேரூன்ற வைத்து தமிழர்களின் அடையாளத்தையே அழித்து, விடுதலைப் போராளிகளின் நினைவுத் தூபிகளையும், புனித கல்லறை களையும் அடித்து நொருக்கி அவர்களின் எலும்புகளையும், தசைகளையும் உழுது, புதைத்து வெறியாட்டம் ஆடிய சுதந்திரக் கட்சிக் கூட்டமைப்புக்கு எமது மக்கள் எவ்வாறு வாக்களிப்பர்?

* வளமாக வாழ்ந்த எமது உறவுகளை அடைத்து வைத்து, மீளக் குடியமர்த்தல் என்ற போர்வையில் மீண்டும் ஒரு சிறை வாழ்க்கைக்குத்தள்ளி, உலக நாடுகளிடம் இருந்து நிதியைப் பெற்றுத் தமது அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்க முன் வரும் அரசியல் கட்சிகளுக்கு எமது மக்கள் எவ்வாறு வாக்களிப்பர்?

* தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டு, தமிழ் மக்களின் அவலங்களையும், எதிர்பார்க்கைகளையும் சர்வதேச சமூகத்திற்கும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கும் எடுத்துக் கூறி வந்த தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு உறுப்பினர்களுடன் இருந்து கொண்டே, அரசுடன் ரகசிய உடன்படிக்கைகளில் ஈடுபட்டுப் கொண்டிருந்து ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கட்சியின் வேட்பாளர் நியமனத்தில் இடம் கொடுக்காத நிலையில் பிரிந்து சென்று தமிழ் காங்கிரஸ் கட்சியின் நற்பெயரை அவமதிக்கும் வகையில் அதன் சின்னத்தில் போட்டியிடும் சந்தர்ப்பவாதிகளுக்குத் தமிழ் மக்கள் எவ்வாறு வாக்களிப்பர்?

* காலம் காலமாக எமது தமிழ் உறவுகளால் பின்பற்றப்பட்டுவந்த ஒழுக்க விழுமியங்கள், கலாசார வாழ்வு, பணத்திற்கும், பெண்ணுக்கும், பொன்னுக்கும் விலை போகாது, துன்பத்திலும்கூட நேர்மையான வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கும் இனத்தில் இருந்து, பெரும் பணத்திற்காகத் தமது நிலை மறந்து, மனமிழந்து விலையாகிப்போன உதிரிச் சுயேச்சைகளின் அந்தரங்க வாழ்வை அறிந்து மனம் வெதும்பி நிற்கும் எமது மக்கள் அத்தகைய சுயேச்சைக் கும்பல்களுக்கு எவ்வாறு வாக்களிப்பர்?

-இப்படியே பட்டியல் இட்டுக் கொண்டு செல்லும் பொழுது எமது மக்கள் மத்தியில் உலாவந்து கொண்டிருக்கும் நாசகார சக்திகளுக்கு எவ்வாறு வாக்களிக்க எமது இதயம் இடம்கொடுக்கும்? இவற்றை ஆழமாகச் சிந்தித்துச் சிந்தித்து உறுதியாக நாம் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு உள்நாட்டிலும், புலம்பெயர் நாடுகளிலும் ஒரே ஒரு கவசமாகவும், காப்பரணாகவும் உரிமைக்கான குரலாகவும் ஒலித்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ''வீட்டுச்' சின்னதிற்கு வாக்களிப்பதைத் தவிர வேறு ஒரு தீர்வு இருக்க முடியாது என்ற அந்தத் தீர்க்கமான முடிவின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அத்தனை உறுப்பினர்களையும் வெற்றிபெறச் செய்து, 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே'. தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை உணர்த்தும் ஒரு வாய்ப்பாக இத் தேர்தலை எமது தமிழ் உறவுகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவற்றினூடாக எமது இழந்த கல்வியையும், கல்விக் கட்டமைப்பையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்ள முடியும் என்பதை எமது உறவுகள் புரிந்து செயலில் இறங்க வேண்டும்.

தமிழ் மக்களின் உயர்ந்த வாக்களிப்பு வீதம் ஒன்றே உதிரிகளையும், சந்தர்ப்ப அரசியல்வாதிகளையும் ஓரம்கட்ட உதவும் என்பதை நினைவில் நிறுத்தி, ஒவ்வொருவரும் நேரத்துடன் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வீட்டுச் சின்னத்திற்குத் தமது புள்ளடியை இட்டு, தாம் விரும்பும் எவரேனும் மூன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் எண்களுக்கு நேரே, தமது விருப்பு வாக்குகளையும் வழங்கி தமிழ்த் தேசிய உணர்வை உலகறியச் செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*''இது சிந்திக்கும் நேரமல்ல;*
*செயற்படும் நேரம்.''*

வடமாகாண கல்வியியலாளர் ஒன்றியம்.


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும், முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
சித்தாரா பொன்வாங்காணித் தைலம்
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228 (C/564561)
யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567


## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா மாணிக்கவாசகர்

[ஓய்வுபெற்ற மருத்துவமாது, கிராமிய வைத்தியசாலை, வீடத்தல்தீவு, மன்னார்]



தெல்லிப்பழை, மாத்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா மாணிக்கவாசகர் நேற்று (05.04.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-விசாலாட்சி தம்பதியரின் மருமகளும் மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும் இராமச்சந்திரனின் (இ.மி.சபை, யாழ்ப்பாணம்) அன்புச் சகோதரியும் சிறீஸ்கந்தகுமார் (உதவி அரசாங்க அதிபர், வடமராட்சி கிழக்கு), Dr.சிறீலக்ஷாயினி (களுபோவில வைத்தியசாலை), சிறீசுகந்தினி (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சிறீஉஷாந்தினி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சசிதாரணி, Dr.உ.மயூரதன் (உதவி சட்ட வைத்தியஅதிகாரி, தேசிய வைத்தியசாலை, கொழும்பு), ம.கருணாகரன் (வர்த்தகர்-கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தங்கம்மா, சண்முகலிங்கம் மற்றும் நடராசா, காலஞ்சென்றவர்களான கனகம்மா, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் திவீக்ஷனன் (தரம்4, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), ஏகாட்தரி, யதுர்ஷி, சரண், புவிரதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.04.2010) செவ்வாய்க்கிழமை 826/11A, K.K.S வீதி, தட்டாதெரு இல்லத்தில் நடைபெற்று, மு.ப 11 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 826/11A, K.K.S.வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.
021 2229123

தகவல்:
இ.மாணிக்கவாசகர் (கணவர்)
மா.சிறீஸ்கந்தகுமார் (மகன்).

(96543)

## முதியோர் அடையாள அட்டையோடு வாக்களிக்கலாம்

நாவற்குழி, ஏப் 6

தேர்தல் வாக்களிப்பின்போது வாக்காளரை அடையாளம் காணுவதற்குரிய ஆவணங்களில் ஒன்றாக முதியோர் அடையாள அட்டையும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தலின்போது முதியோர் அடையாள அட்டையைப் பெறுவதற்கு 60 வயதைக் கடந்தோர் நூற்றுக் கணக்கில் பிரதேச செயலகங்களில் விண்ணப்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-121)

## 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டம்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதியில் இடம் பெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தங்களது விண்ணப்பப் படிவங்களை இணைப்பாளர், சென்.பற்றிக்ஸ் கல்லூரி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-23)


இன்னும் 12 நாள்களில்
JAFFNA International 2010 TRADE FAIR
2010 ஏப்பிரல் 18 முதல் 20 வரை
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை


## பயணப் பொதி மாறிவிட்டது

நேற்று (05.04.2010)காலை யாழ் - இணுவிலுக்கிடையில் [illegible] பயணப் பொதி (Traveling Bag) மாறிவிட்டது.
தொடர்புகொள்ளவும் T.P: 0773097287

## மாபெரும் மென்பந்து கிரிக்கெற் போட்டி

யாழ்.மண்ணில் பிரபல நாளிதழ் ''உதயன்'' ஊடக அனுசரணையுடன் B.தர்மசேனன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான மூளாய் விக்ரோறி வி.க. நடத்தும் மாபெரும் மென்பந்துக் கிரிக்கெற் சுற்றுப் போட்டி.

போட்டி விதிமுறைகள்


* போட்டியானது 6 பேரைக் கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டது.
* போட்டிகள் யாவும் வட்டு. மத்திய கல்லூரி மைதானத்தில் ( சங்கரத்தை Y.M.H.A.) இல் நடைபெறும்.
* யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றலாம்.
* போட்டிக் கட்டணம் 300/= மட்டும்.( விண்ணப்பப் படிவம் செலுத்தும் போதே போட்டிக்கட்டணம் செலுத்த வேண்டும்.
* விண்ணப்பப்படிவங்களை மூளாய் சிவாஸ் மில், யாழகம் (ஆஸ்பத்திரி வீதி) போன்ற இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
* விண்ணப்ப முடிவு திகதி 15.04.2010
* போட்டிகள் யாவும் 18.04.2010 இல் ஆரம்பமாகும்.

பரிசு விபரம்

* 1ஆம் இடத்தைப்பெறும் அணிக்கு ரூ.10,000 பணப் பரிசுடன் B.தர்மசேனன் ஞாபகார்த்த மாபெரும் வெற்றிக் கேடயம்.
* 2ஆம் இடத்தை பெறும் அணிக்கு ரூ.5000 பணப்பரிசுடன் வெற்றிக்கேடயம்.
* பெறுமதியான தொடர்நாயகன் விருது (Man of the Series)
* இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன் விருது.

மேலதிக விபரங்களுக்கு: போட்டிக்குழு
மூளாய் விக்ரோறி வி.க
.T.P. 0773400918 0772844917
E.mail: victorysportsclub@yahoo. com

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்களின் பணிநயப்பும் நூல்வெளியீடும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற போது...




# நாகமுத்து தணிகாசலம்பிள்ளை

## சுயேச்சைக்குழு 10

(சி-566450)


கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்களின் பணிநயப்பும் நூல்வெளியீடும்

**பேராசிரியர் கா.சிவத்தம்பியின் பார்வையில்...**

"தணிகாசலம்பிள்ளையின் தனித்துவம் அவரது விடாமுயற்சியாகும். முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு தணிகாசலம்பிள்ளை நல்ல உதாரணம் ஆவார். இன்று கல்வி அமைச்சின் ஆலோசகராக விளங்குவது எனக்கும் கிடைத்த ஒரு கணிப்பாகவே என் மனதினுள் நான் நினைத்துக் கொள்கின்றேன்.

*- பேராசிரியர் கா.சிவத்தம்பி 22.10.2009*

**உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வவுனியா முகாம்களிலுள்ள மாணவர்களுக்கு உதவுங்கள்**

**கல்வி அமைச்சினதும் நலன்புரி நிலையங்களினதும் கல்விச் செயற்பாட்டு இணைப்பாளரான கல்வி அமைச்சின் முதுநிலை ஆலோசகர் தணிகாசலம்பிள்ளை வேண்டுகோள்**

"வவுனியா முகாம்களிலுள்ள 1454 மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். இவர்களுக்கு மாதிரி வினாத்தாள்கள், ஏனைய மாணவர்கள் பயன்படுத்திய பாடக்குறிப்புக் கொப்பிகள், மாதிரி வினாத்தாள்கள் போன்றவற்றைப் பொது மக்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படும் பொருள்கள் நேரடியாக முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்படும் எனவும் இணைப்டாளர் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார். இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு உதவி செய்ய விரும்புவோர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும். தொலைபேசி இல 01123108495, 0112785263, 0773077563

*- 14.06.2009 வீரகேசரி பத்திரிகைச் செய்தி*

**செட்டிக்குளம் நலன்புரி நிலைய உயர்தர மாணவர்களின் பரீட்சையும் அவசர உதவியும்.**

முகாம்களிலுள்ள மாணவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட நிலையைப் பெரும் சவாலாக எடுக்கின்றார்கள். எங்களிடம் கதைக்கும் பொழுது நாம் எல்லாவற்றையும் இழந்து விட்டோம். இக்கல்வியை மட்டும் இழக்காமல் காப்பாற்றுங்கள் என்று கண்ணீர் விட்டனர். இக்கல்வி மூலமே தம்மையும் தமது குடும்பத்தையும் பாதுகாக்கலாம் என்று தெளிவாக அந்த மாணவர்கள் தெரிவித்தனர். எனவே இம்மாணவர்களது கல்விக்காக அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்.

*10.06.2009 தினக்குரல் பத்திரிகையில்*
*கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை வெளியிட்ட செய்திக்குறிப்பு.*

**VIRAKESARI ONLINE இணையப் பக்கத்தில் ...**

பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடும் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளையின் நேர்காணலை வீரகேசரி இணையத்தளம் 28.03.2010 இல் பிரசுரித்தது. இதற்கு அபிப்பிராயம் தெரிவித்த வாசகர் ஒருவரின் கருத்து

"கலாநிதி அவர்களின் கருத்தை நான் வரவேற்கிறேன். ஏனெனில் இவர் போன்ற கல்வியியலாளர்களால்தான் பாராளுமன்றத்தில் எம் கல்விக்காக குரல் கொடுத்து எமது பிரதேசத்தை மேம்படுத்த முடியும்."

*- தமிழ்மாறன*

**வன்னி மாணவர்களுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை தொடர்பாக 30.10.2009 வீரகேசரி பத்திரிகையில் வெளிவந்த செய்தி**

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் திட்டங்கள் கல்வி அமைச்சினால் உடனடியாகச் செயற்படுத்தப்படுகின்றன. கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக் குழுவின் தலைவராக தேசியப் பாடசாலைகள் கல்விப் பணிப்பாளர் நூனிஸ், கல்வி அமைச்சினதும் நலன்புரி நிலையங்களதும் கல்விச் செயற்பாட்டு இணைப்பாளராகக் கல்வி அமைச்சின் முதுநிலை ஆலோசகர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை மற்றும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களும் ஒழுங்குபடுத்தும் பொறுப்பாளராக டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி அதிபர் பரமேஸ்வரன் ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

அமைச்சின் இணைப்பாளர் இந்த மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களைப் பொதுமக்கள் பொது அமைப்புக்கள் ஊடாக எதிர்பார்ப்பதாகவும் கடந்த வருடங்களில் பரீட்சை எழுதிய மாணவர்கள் தமது பழைய நோட்ஸ் கொப்பிகள் சிறு சுருக்கக் குறிப்புக்கள் மாதிரி வினாத்தாள் போன்றவற்றைக் கல்வி அமைச்சின் முதுநிலைக் கல்வி ஆலோசகரிடம் கையளிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு அரிய, உரிய வழிகாட்டிய பேராசான்**

"ஆசிரியர்களின் திறன்கள் அர்ப்பணிப்பிலேயே மாணவரின் கற்றல்பேறு தங்கியுள்ளது என்பதை நிலைநிறுத்திக் காட்டியவர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை"

*- பா.தனபாலன் , யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி (உதயன் 15.11.2009 கட்டுரை)*

**வன்னிப் பகுதி உயர்தர மாணவர்களின் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது.**

இடம்பெயர்ந்த வன்னி மக்களின் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மீள் நிர்மாணத்திற்கான அமைப்பின் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தருமான பேராசிரியர் எஸ். மோகனதாஸ், உப தலைவரும் கல்வி அமைச்சின் ஆலோசகருமான கலாநிதி என். துணிகாசலம்பிள்ளை, இணைப்பாளர் சட்டத்தரணி வீ.பரமேஸ்வரன் ஆகியோர் வியாழக்கிழமை பரீட்சை ஆணையாளரைச் சந்தித்து வன்னி மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைத்தனர். இவர்கள் முன்வைத்த பிரச்சினைகள் கணிசமான அளவு தீர்க்கப்பட்டுள்ளதாக இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

*- தினக்குரல் 08.08.2009*

**இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலுள்ள கல்வி பொதுத் தராதர சா/த மாணவர்களுக்கு உதவுங்கள்**

**கல்வி அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை வேண்டுகோள**

*13.09.2009 வீரகேசரி பத்திரிகைச் செய்தி*

**கல்வி உலகில் ஆளுமை, ஆற்றல் மிக்க படைப்பாளி நா.தணிகாசலம்பிள்ளை**

"பல்வகைப் பரிமாணங்களைக் கொண்ட ஒரு ஆளுமையாளரின் பணிநயப்பு நூல்கள் வெளியீடு இடம்பெறவிருப்பதை அறிந்து பெரும் மகிழ்ச்சி கொள்வதுடன் அவர் தொடர்ந்தும் தமிழ் மக்களின் கல்வி மேம்பாட்டுக்கு சேவையாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளையும் முன்வைக்கின்றோம்"

*தம்பு சிவா. 24.10.2009 சுடர் ஒளியில் வெளிவந்த கட்டுரையில்...*

**அன்பான வாக்காளப் பெருமக்களே!**

**இங்கு தேர்தல் களத்தில் நிற்கும் எவராவது கல்விப் புலத்தில் இத்தகைய சேவைகளை வழங்கியுள்ளார்களா?**

**தீர்க்கமாகச் சிந்தியுங்கள். உங்கள் பொன்னான வாக்குகளை பட்டத்திற்கு வழங்குங்கள்.**

*பட்டதாரி ஆசிரியராக (வட்டு., யாழ். இந்து), அதிபராக (பூநகரி, குப்பிளாான்), வட்டாரக் கல்வி அதிகாரியாக (பரந்தன், கிளிநொச்சி), கோட்டக் கல்விப் பணிப்பாளராக (ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு), மாவட்டக் கல்விப் பணிப்பாளராக (முல்லைத்தீவு, யாழ்.), மாகாணக் கல்விப் பணிப்பாளராக (வடக்கு), கல்வி அமைச்சின் முதுநிலை ஆலோசகராக (இலங்கை முழுவதும்), கல்வி நிர்வாக வருகை விரிவுரையாளராக (யாழ்-பல்கலைக் கழகம், தேசியக் கல்வி நிறுவகம், தொழிநுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக் கழகம்) 45 வருடங்கள் அரச சேவையில் பணிபுரிந்து தமிழ்ச் சமூகத்திற்குப் பட்டறிவு கொண்டு அடிமட்டப் பிரச்சினைகளுக்கு களத்தில் இறங்கித் தீர்வு கண்ட ஏழைகளின் கல்வியாளன்.*

# ச.நா.தணிகாசலம்பிள்ளை

**சுயேச்சைக்குழு 10** X 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியப் பாதையில் நிலமும் புலமும்

## தாயகம், தேசியம், சுயநிர்ணயம்
## தமிழ்த்தேச நிலைப்பாடு சமரசத்திற்கு அப்பாற்பட்டது

## தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணியின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களுக்கே எங்கள் ஆதரவு


Dr. கந்தசாமி
திருலோக மூர்த்தி
இல 1


கஜேந்திரகுமார்
காங்கேசர் பொன்னம்பலம்
இல 2


நடேசு
துரைராஜா
இல 3


நாகலிங்கம்
குழந்தைவேலு
இல 4


சின்னத்துரை
வரதராஜன்
(முதன்மை வேட்பாளர்)
இல 10


பத்மினி
சிதம்பரநாதன்
இல 5


பிரான்சிஸ்
வின்சென்ட் டி போல்
இல 6


கலாநிதி கென்னடி
விஜயரட்ணம்
இல 7



விஸ்வலிங்கம்
மணிவண்ணன்
இல 8


சந்தனம்
ஸ்ரீபன்
இல 9


செல்லத்துரை
சுப்பிரமணியம்
இல 11


செல்வராசா
கஜேந்திரன்
இல 12

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்



X

## இலட்சியப் பயணத்தில் நிலமும் புலமும் ஒரே பாதையில் பயணிக்க சைக்கிள் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

சுவீடன் தமிழ்ப் பெண்கள் அமைப்பு
மகளிர் அமைப்பு - யேர்மனி
நெதர்லாந்து தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பு
டென்மார்க் தமிழர் பேரவை
தமிழ் ஒன்றியம் இத்தாலி
தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு - பிரான்ஸ்
ஐக்கிய தமிழர் செயற்பாட்டுக் குழு - பிரித்தானியா
சுவிஸ் தமிழர் பேரவை
தமிழ் இளையோர் அமைப்பு - பெல்ஜியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010

## சுயேச்சைக் குழு - 03 யாழ். மாவட்டம்




பி.ஜே.அன்ரனி (மாஸ்ரர்)
(சட்டத்தரணி)
முதன்மை வேட்பாளர்





செல்லப்பா சதானந்தன் (மாஸ்ரர்)
(ஓய்வு பெற்ற அதிபர்)




நடராசா தமிழ்அழகன்




உருத்திராதேவி சண்முகநாதன்
(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)




காத்தி அதிகாரம்
(அமுதா)
(பிரபல வர்த்தகர்)





கந்தன் இராசரத்தினம் (மாஸ்ரர்)
(ஓய்வு பெற்ற அதிபர்)




குணசிங்கம் கோபிநாத் (வேலணை)
(பல்கலைக்கழக மாணவன்)



**எம்.சி.சுப்பிரமணியம்**
காட்டிய வழியில்...
ஒடுக்கப்பட்ட சமூக மக்களின்
அரசியல் பிரதிநிதித்துவத்தை
வலுப்பெற வைக்க எமக்கு வாக்களியுங்கள்




வயிரவன் மோகநாதன்




தம்பியான் கந்தையா
(இளைப்பாறிய அரச ஊழியர்)




சுப்பிரமணியம் மகேந்திரராஜா
(முன்னாள் பொது முகாமையாளர்
ப.நெ.வ.அ.கூ.ச. பூநகரி)




பிலிப் ஜோன் கபாஸ்
(கலைஞர்)

### அன்பார்ந்த மக்களே.... வேண்டுகோளும் எமது செயற்றிட்டங்களும்

- ★ குடியிருப்பதற்குச் சொந்த நிலமில்லாத மக்களுக்கு நிலத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
- ★ வீடு இல்லாத மக்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்துதல்.
- ★ விவசாய நிலங்களை உரிமையாக்குதல்.
- ★ பனம்பொருள் வல்லுநர்களின் சமூக, பொருளாதாரத்தை மேம்படச்செய்தல்.
- ★ சுரண்டலில் இருந்து விடுவித்து உழைப் புக்குரிய ஊதியத்தைப் பெறச்செய்தல்.
- ★ அதிகார வர்க்கத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்கு நீதியை நிலைநாட்டி நிவாரணம் வழங்குதல்.
- ★ கல்வித்துறையில் ஓரங்கட்டப்படு தலைத் தடுத்தல்.
- ★ கல்விபெற வசதியற்ற மாணவர்களுக்கு அவ்வசதியைப் பெற்றுக்கொடுத்தல்.
- ★ உயர் பதவிகளைப் பெறுவதற்குத் தடையாக இருக்கும் முட்டுக்கட்டைகளைத் தகர்த்தல்.
- ★ நவீன தொழில்நுட்பக் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பினைத் தேடிக் கொடுத்தல்.
- ★ வீதிகள், மின்சார வசதிகள் என்பவற்றை எமது மக்கள் வாழும் பகுதிகளுக்குப் பெற்றுக்கொடுத்தல்.
- ★ தொழில்சார் நெருக்கடிகளுக்குப் பரிகாரம் காணுதல்.
- ★ படித்த வேலைவாய்ப்பற்றிருக்கும் இளைய தலைமுறையினருக்கு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- ★ தாய்மொழியின் வளர்ச்சியிலும் அது சார்ந்த விடயங்களிலும் அக்கறை செலுத்துதல்.
- ★ கலை இலக்கியங்கள் - குறிப்பாக நாட்டார் சார்ந்த கலைகளைத் தொடர்ந்து பேணுதல், வளர்த்தல்.
- ★ வன்னிப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.
- ★ எமது மக்கள் சக்தியை ஒன்று திரட்டி பலத்துடன் மேலும் முன்னேறுதல்.

நீங்கள்தான் நாங்கள்
எங்கள் வெற்றிதான்
உங்கள் வெற்றி
உங்கள் வாக்குகளை
எங்களுக்கு
அளியுங்கள்

'ஹெலிகொப்டர்
சின்னத்தில்
போட்டியிடும்
சுயேச்சைக் குழு (03)
இற்கு வாக்களிக்குமாறு
வேண்டுகின்றோம்.

## அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை

## சுயேச்சைக் குழு - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு



திருமதி புஸ்பவதி முத்துலிங்கம்

33ஆண்டு கள் ஆசிரியர் சேவையைச் செய்து ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்வியையும், ஒழுக்கத்தையும் சிறந்த முறையில் முன்னெடுத்து பாடசாலைக்கு நன்மதிப்பைப் பெற்றுத்தந்த எமது ஆசிரியரை அறுபதாவது அகவையில் பல்லாண்டுகாலம்வாழவாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 ★ 06 ★ 1963



மறைவு 19 ★ 03 ★ 2009

### அமரர் வடிவேலு ரதிகுமார்

திதி: 06.04.2010

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அப்பா என்று அழைக்க நீங்கள் இல்லை
உயிர் காக்க வழியனுப்பினோம், உயிரற்ற உடலைப் பார்க்கவா..
ஊரின்றி, வீடின்றி, உறவின்றி அனாதையாக எங்கு சென்றீர்கள்
தாங்க முடியவில்லை தவிக்கின்றோம் நாம்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எனது கணவரினதும், தம்பி- மு.வசந்தன், மருமகன்- நிவேதியன் ஆகியோரின் மரணச் செய்திகள் கேட்டு ஆறுதல் வழங்கிய அனைத்து உறவுகளுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"திருப்பரம்"
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

மனைவி: ர.கிருஷ்ணவேணி (ஐதி)
மு/மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம்.
பிள்ளைகள்: ர.சாருஷன், ர.ஜானுஷன், ர.மகிழன்.

## தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் தற்செயல் நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பம் செய்த பின்வரும் பெயர், முகவரியுடையவர்களது காசோலைகள் வந்து சேர்ந்துள்ளன.

இவர்களை உடன் பிரதேச செயலகத்துக்கு வந்து காசோலைகளைப் பெற்றுச் செல்லுமாறு சமூகசேவைகள் உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார்.




பி.நவமலர்-வடலியடைப்பு, சி. செபமாலை-பண்டத்தரிப்பு ம.ரவிநாதன்- கல்வளை வீதி, சண்டிலிப்பாய், மா.குணவதனி-காயா வீதி, வடலியடைப்பு, சு.ஜானீஸ்வரன்- மடத்தடி, சண்டிலிப்பாய், கே.சுமதி- சண்டிலிப்பாய், அ.பிறேமறஞ்சினி- சண்டிலிப்பாய்.

(1-100)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில BY: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip IN ENGLISH AND SCIENCE (BTEC, English medium) No.426(302), K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.

தொ.பே 0776751649

## வீடு விற்பனைக்கு

கட்டப்பிராய், வட்டக்குளத்தடியில் 1½ பரப்புக் காணியில் நவீன முறையில் புதிதாகக் கட்டப்பட்ட வீடு விற்பனைக்கு உண்டு.
(முன்பு Dr.அமுதா இருந்த வீடு)
தொடர்புகளுக்கு:
Mrs.x.வாசுகி
0652224410, 0771831276

## புறொயிலர் குஞ்சு விற்பனை

ஒரு நாள் புறொயிலர் குஞ்சு 07.04.2010 இல் விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

விபரங்களுக்கு: கிருஷ்ணா பாம் மானிப்பாய். 0772333084

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 19 ★ 08 ★ 1944



ஆண்டவன் அடியில் 17 ★ 04 ★ 2009

### அமரர் மயில்வாகனம் மகாலிங்கம்
(இளைப்பாறிய மின்சாரசபை உத்தியோகத்தர்)

திதி: 06.04.2010

எங்களை வளர்த்து ஆளாக்கிய எமது தெய்வத்துக்கு எமது பாத காணிக்கை.

195, திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(96211)

மகள்: ம.அபிராமி,
மகன்: ம.அரவிந்தன்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி அன்னலக்சுமி அருணாசலம்

தோற்றம் 06.01.1934

மறைவு 18.03.2009

அன்பும் பாசமும் உள்ள அருமை மனைவியே!
உன்னைவிட்டுப் பிரிந்து ஓராண்டானாலும்,
எமது கண்கள் கலங்கி கண்ணீருடன்
காணிக்கை செலுத்துகின்றன
மோட்சத்தில் நல்வாழ்வு வாழ கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

நி.மு: அம்பனை தெல்லிப்பளை,
மறவன்புலோ,கைதடி,நாவற்குழி.
த.மு: கேணிக்கரை,
அளவெட்டி.

(96014)

செ.அருணாசலம்
(கணவர், இளைப்பாறிய ஆசிரியர்)
கமலம், ஜெயராணி (வளர்ப்பு மக்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 08.04.2010

## யாழ். தேர்தல் மாவட்டம்

## தமிழ்பேசும் வாக்காளப் பெருமக்களே!

### மாவை எங்கள் தெரிவு

★ **தந்தை செல்வாவின் சுவடுகளிலிருந்து.....**

தமிழ்த் தேசிய இனமும், முஸ்லிம் மக்களும் மொழியால் ஒன்றுபட்டவர்கள். இம்மக்கள் தாம் வாழும் இடத்தில், தங்கள் தாயகத்தில், **சுயநிர்ணய உரிமை** அடிப்படையில் தம்மைத் தாமே ஆளும் தன்னாட்சி உரிமையை நிலைநாட்ட **நாற்பது** ஆண்டுகளுக்கும் மேலாக முழுமையாக அர்ப்பணித்தும், குரல் கொடுத்தும் போராடியும் வந்துள்ளவர் மாவை.

★ அவர் வாழ்நாளில் சிங்களச் சிறைகளில் பட்ட கொடுமைகள் சொல்லிமாளாது. **பதினொரு** தடவைகள் கைது செய்யப்பட்டு மொத்தமாக **ஏழு** ஆண்டுகளுக்கும் மேலாகச் சிங்களச் சிறைகளில் இராணுவ முகாம்களில் **நாலாவது மாடியில்** அடைக்கப்பட்டுச் சித்திரவதைகளுக்கு ஆளாகியவர். தன் தாயக மண்ணிலும், சிங்களச் சிறைகளிலும் அவர் இரத்தம் சிந்தப்பட்டுள்ளது. மாவை செத்துவிட்டான் என்று எண்ணி **ஆனையிறவு** இராணுவ முகாமில், தூக்கி வீசப்பட்டவர். பல தடவைகள் சாகடிக்கப்பட்டிருக்கிறார். மரணத்தைப் பல தடவைகள் வென்றிருக்கின்றார். மீண்டும் கைது செய்யப்பட்டுவிடுவோர், மரணம் வந்துவிடும் என்றே, ஒருபொழுதும் எங்கேனும் ஓடிப் போனவனல்ல.

★ அவர் கல்லூரிக் காலங்களில் **திருமலையில்** சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தக் காடுகளுக்குள் ஆண்டுக்கணக்கில், களமாடியிருக்கின்றார். அதனால் நோயில் விழ்ந்து துன்பத்தில் துவண்டவர்.

★1977 இல் **காங்கேசன்துறை** தொகுதியில் வேட்பாளனாக நின்று, வெற்றி பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தை விட்டுவிட்டு, புரட்சிகரப் போராட்டத்திற்குள் புகுந்து, சிங்களச் சிறைகளில், செங்களமாடிய போராளியானதுதான் அவர் வரலாறு.

★"இலங்கை நாட்டின் அரசியலமைப்பை ஏற்கமாட்டோம். தமிழர் தாயகத்தில் சுதந்திர ஆட்சி செய்வோம்" எனத் தொடுத்த போரில், **மட்டக்களப்பில்** கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் நிறுத்தப்பட்டார். கொழும்பு மேல் நீதிமன்றில் **ஓர் ஆண்டுச் சிறைவாசத்தின்** பின், விடுதலை பெற்றார். வெற்றி பெற்றார் மாவை.

★போரின் விளைவால் தன் தாயக மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்ட, லட்சக்கணக்கான மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும்; உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவேண்டும்; குவிக்கப்பட்டுள்ள இராணுவம் வெளியேற்றப்பட வேண்டுமென ஜனாதிபதிக்கு, அரசுக்கு, இராணுவத்திற்கு எதிராக, உச்சநீதிமன்றில், தொடுக்கப்பட்ட அடிப்படை உரிமை வழக்கில், ஓரளவேனும் வெற்றி பெற்றவர். இவையெல்லாம் தேர்தலுக்காக அல்ல!

★ சிங்களச் சிறைகளில், இராணுவங்கூட இவரை அழிக்க முற்பட்டும், **ஊர்காவற்றுறையில்** நம்மவர்களே கொல்ல முயன்றும், உயிர் தப்பியிருக்கிறார். தன் மக்களுடனேயே இருந்திருக்கின்றார்.

★ அவர் உயிர் இன்னும் இருக்கிறதென்றால், தன் தமிழ்பேசும் மக்கள், இத்தனை காலமும் செய்த தியாகங்கள், அவம் போகாமல், அந்த மக்களின் விடிவுக்காகவும், தாயகத்தின் விடுதலைக்காகவும் தொடர்ந்தும் தான் உழைப்பதற்காகவேதான் என வைர நெஞ்சம் கொண்டவர்.

★ இவையெல்லாம் தேர்தல் வெற்றிக்குத் தேவையானவையல்ல. ஆனால், இந்த வரலாற்று நிகழ்வுகளை, இன்றைய இளைய சமுதாயத்திற்காகச் சொல்ல வேண்டுமெனச் சொன்னவர் மாவை.

★ தன் தமிழ் மக்கள் பட்ட இத்தனை கொடிய பேரவலத்தின் முன்னால், போர்க்களத்திடையே தம்மையே அழித்துவிட்டவர்களின் தியாகத்திற்கு முன்னால், தம்மை அர்ப்பணித்து விட்டு, எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு, இன்னும் நம் தாயகத்தின் விடுதலை உணர்வோடு, ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கும் தன் தமிழ்த் தேசமக்களின் தியாகத்திற்கு முன்னால், தன்னை அர்ப்பணித்திருப்பதும் அவலங்களை ஏற்றிருப்பதும் தன் உயிர் இன்னும் எஞ்சியிருப்பதும் அற்பமானதே என நினைப்பவர் மாவை.


**எம் உயிரினும் மேலான தமிழ் மக்களே!**

இத்தகைய வரலாற்றுப் பின்னணியில் "**மூத்த போராளி**" என்று வர்ணிக்கப்பட்ட மாவை சேனாதிராசா தோற்கடிக்கப்பட வேண்டுமென, கங்கணங்கட்டிக் களத்தில் இறங்கியிருக்கிறார்கள் ஒரு சிலர்! தாங்கள் நாடாளுமன்றத்தில் இல்லையென்றால், தமிழ்த் தேசியமே இல்லையென்று, ஒப்பாரி வேறு! மஹிந்த ராஜபக்ஷவுக்கு அல்லவா, வெற்றிவாகை சூடுகிறார்கள்! **வேடந்தாங்கலுக்கு** வந்த '**சைபீரியா**'ப் பறவைகள் போல், தேர்தலுக்கு வந்தவர்கள், "**பீனிக்ஸ்**" பறவைகளாய், எழுந்து நிற்கும் மாவையைத் தோற்கடிப்போம், அழிப்போம் என ஆர்ப்பரிக்கின்றனர். இதனைத் தமிழுலகம் ஏற்குமா? இல்லை, பதிலடி கொடுக்கும்! இந்த உதிரிகளின், சுயேச்சைகளின், கொட்டத்தையெல்லாம் எம் தமிழ் தேச மக்கள் நிராகரிக்கவேண்டும்.


இவர்களுக்கு, மானசீகமாய் பதில் சொல்லக் காத்திருக்கும் கனதிமிக்க எம் கொள்கைவாதிகள், இலட்சியத் தீபங்கள், தமிழ்த் தேச மக்கள் 2010.04.08 ஆம் நாள், சரியான தீர்ப்பை வழங்குவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெரு வெற்றிபெறும்.

தமிழர் தாயகத்தில், உங்கள் **வீட்டுக்குப்** பக்கத்திலே முதலில் புள்ளடியிடுங்கள். அடுத்து தங்களின் விருப்பு வாக்குகளில் ஒன்றை உங்கள் தொண்டனுக்கு **மாவை சேனாதிராசாவின் இலக்கம் - 8** இன் மேலே புள்ளடியிட்டு, வெற்றியீட்டுங்கள்.

எத்தனை சோதனைகள் வந்தபோதும் இத்தனை சாதனைகளும், தியாகத்தழும்புகளும் கொண்ட மறவன் மாவை சேனாதிராசா அமோக வெற்றிபெற வேண்டும். அதுவே தமிழர் வெற்றி.









| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8x |
| | | | | 9 | 10 | 11 | 12 |

**பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இனியவர்களே!

மூன்று தசாப்த யுத்தம் அதன் கடுமையான விளைவுகள், நாம் நாடோடிகளாகத் திரிந்த கதை அனைத்தும் முடிவடைந்த நிலையில் நானும் எனது குடும்பத்தினரும், நீங்களும் சொந்த நிலம், வீடு, சுபீட்சமான வாழ்வு அனைத்தையும் இழந்து ஊரோடிகளான கதை தெரிந்ததே.

வரலாற்று முக்கியத்துவம் மிக்க புதுயுக நுழைவாயிலில் நாம் நின்று கொண்டிருக்கும்போது எனது மக்களுக்கு என்னாலான சகலதையும் பெற்றுத்தர வேண்டும் என்ற அவாவில் இந்தக் கன்னித் தேர்தலை உங்கள் சார்பாக எதிர் கொள்கின்றேன். மேடை போட்டு வீரா வேசமாகப் பேசி, சொன்னதைச் செய்யாமல் விடுபவனல்ல நான். தங்கள் அனைவரையும் தனித்தனியாகச் சந்தித்து உங்களுக்கான எனது திட்டங்களை விளக்குவதும் உங்களின் ஆதரவை திரட்டுவதுமே நோக்கமாகக்கொண்டு செயற்பட்டவன்.



என்னால் இயலுமானவரை என் இனிய மக்களைச் சந்தித்து உங்களின் விருந்தோம்பல் உபசரிப்பில் மெய்மறந்து எனது மக்களின் மனதையும் ஆதரவையும் உணர்ந்திருந்தாலும் மனக்கவலையொன்று உள்ளது. அனைவரையும் சந்திக்க முடியவில்லையே! என்ற ஆதங்கமே அது.

இது வரையிலும் நான் சந்தித்த, என்னைச் சந்தித்த, ஆதரவளித்த அனைத்து உள்ளங்களுக்கும் உளப்பூர்வமான நன்றியை இதய சுத்தியுடன் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன்.

என்னால் சந்திக்க முடியாமல் போன என் இனிய மக்கள் ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட முறையில் மனப்பூர்வமான மன்னிப்பு வேண்டி நிற்கின்றேன்.

நேரத்தின் வேகத்திற்கு ஈடுகொடுத்து ஓடமுடியாமல் சில சந்திப்புக்களைத் தவறவிட்டிருக்கிறேன். தயைகூர்ந்து அதைப் பொருட்படுத்தாமல் எனக்கு ஆதரவு நல்குமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இளம் சமுதாயத்தின் பிரதிநிதியான நான், எனது மக்கள் அனைவரும் அதிக விருப்பு வாக்குகளுடன் என்னைப் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப் போவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். எதிர்காலத்தில் காத்திரமாக, சுபீட்சமான வாழ்வில் எனது மண்ணின் தலைவிதியே மாறப்போகிறது. அடிப்படை அவசரத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு, தொழில் முயற்சிகளும் வளங்களும் பெருகி அன்னியச் செலாவணி வரவு அதிகரித்து, மீளக் குடியமர்ந்து, கலாசார விழுமியங்களையும் பாரம்பரியத்தையும் பேணி தன்நிறைவுடன் நாம் வாழப்போவதைத் தீர்மானிக்கப்போகிறோம். நிச்சயமாக அப்படி வாழப்போகிறோம். அந்த உவகையில் அந்த வாழ்வை எதிர்கொள்ள இருக்கும் என் இனிய மக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்கிறேன்.

செய்ய முடியாததைச் சொல்பவன் அல்ல நான். தேர்தல் தொடர்பான மக்களுடனான கலந்துரையாடலின்போது உங்களுக்குத் தேவையானவற்றைக் கேட்டீர்கள். என்னாலானவற்றிற்கு மறுப்பு ஏதும் சொல்லாமல் வாக்குறுதி அளித்தேன். நான் அதிக விருப்பு வாக்களுடன் நாடாளுமன்றம் சென்று மேன்மை தங்கிய ஜனாதிபதியின் அனுசரணையுடன் சகல வாக்குறுதிகளையும் நிறைவேற்றத் திடசங்கற்பம் பூண்டிருக்கின்றேன்.

எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து வாய்ப்பேச்சு அரசியலால் இழந்தது போதும். இழந்தவற்றை மீட்க இன்னுமின்னும் வளர நமக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை நாம் இழந்துவிடக்கூடாது என்பது எனது தயவான வேண்டுகோள்.

என் இனிய மக்கள் சிந்திக்கத் தெரிந்தவர்கள். பிரித்தறியும் ஆற்றல் படைத்தவர்கள். நல்ல தீர்மானங்களைச் சரியான தருணத்தில் புத்திசாலித்தனமாக எடுப்பவர்கள் என்மீது நம்பிக்கை வையுங்கள் என்பதே எனது வேண்டுகோள்.

'உங்களில் ஒருவன் உங்களைப் போல் ஒருவன்'.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் தேசியத்தினை பாதுகாக்க அனைவரும் வாக்களியுங்கள்

சுயச்சைக்குழுக்களையும் பேரினவாத கட்சிகளையும் தோற்கடியுங்கள்

# கனேடியத் தமிழர் சமூகமும் கனேடிய மாணவர் சமூகமும் கூட்டாக வேண்டுகோள்;


Dr.க.திருலோகமூர்த்தி

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டதின் ஒரு வடிவம் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் பிராந்திய சக்திகளின் முழுமையான அனுசரனையுடன் முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்டுவிட்டது. எனினும் தமிழ் மக்களின் உரிமைகள் பெறப்படும் வரை எமது உரிமைக்கான பயணம் முற்றுப்பெறப் போவதில்லை.


கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

மாறிவரும் சர்வதேச சூழலில் பிராந்திய பூகோள போட்டி காரணமாக இலங்கை அரசுக்கும் மேற்குலகத்துக்கும் இடையேயான இராஜதந்திர இடைவெளி அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் மேற்குலகம் இலங்கை அரசின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தமிழ் மக்களின் உரிமைக்கான கோரிக்கையை கையில் எடுத்துள்ளது.


நடேசு துரைராஜா

இந்த நிலையில் அடிப்படைத் தமிழ் தேசியக் கொள்கைகளில் நாம் உறுதியாக இருந்தால் எமது சுயநிர்ணய உரிமை, தனித்துவமான இறைமையுள்ள தேசம் என்பன அங்கீகரிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகரித்துவருகின்றது.

ஆகவே பல்வேறு தரப்பினரும் தேர்தலுக்காக பேசுகின்ற தேசியத்தை நம்பி வாக்களித்து தமிழ்த் தேசியத்தை படுகுழியில் தள்ளும் நாசகார முயற்சிக்குத் துணைபோகாதீர்கள்.


நாகலிங்கம் குழந்தைவேலு

முள்ளிவாய்க்கால் பேர் அழிவுக்கப் முன்னரும் பின்னரும் தமிழ்த் தேசியக் கொள்கைகளில் உறுதியாக நின்று ஒரு கூட்டாக தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியில் இணைந்து சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு உங்கள் வாக்குகளை அளித்து தமிழ்த் தேசியத்தை சீரழிக்க இடம் அழிக்கமாட்டோம் என்பதனை உங்கள் வாக்குகளால் நிருபியுங்கள்.


திருமதி பத்மினி சிதம்பரநாதன்

தமிழ் மக்களின் அரசியற் பிரச்சனைக்கான அரசியற் தீர்வு எமது அடிப்படை அரசியற் கொள்கைகளான தாயகம் தேசியம், சுயநிர்ணயம், தனித்துவமான இறைமையுள்ள தேசம் எனபவற்றின் அடிப்படையில் அமையவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கின்ற


பிரான்சிஸ் வின்சென்டி போல்


செல்லத்துரை சுப்பிரமணியம்

**தமிழ்த் தேசிய முன்னணிக்கே**

(அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)

**கனேடியத் தமிழர் சமூகமும்**

**கனேடிய மாணவர் சமூகமும்**

முழுமையான ஆதரவை

வழங்குகின்றது.


கலாநிதி கெனடி விஜயரட்ணம்


செல்வராஜா கஜேந்திரன்


விஸ்வலிங்கம் மணிவண்ணன்



சந்தனம் ஸ்ரிபன்


சின்னத்துரை வரதராஜன்

பாராளுமன்றப் பொது தேர்தல் 08.. 04. 2010

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

## அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்



தலைவன் கட்டிவளர்த்த தமிழ்த்தேசியத்தில் உறுதியாக இருக்கின்ற தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி வே[illegible] அனைவரும் ஒன்று திரண்டு ஆதரவளியுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்புக்கும் மதிப்பிற்குரிய தமிழ்மக்களே!

வணக்கம்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் உங்கள் ஆதரவை நாடி நிற்கும் வேட்பாளனாகவும், அண்ணண் மகேஸ்வரனின் மக்களுக்கான பணிகளை தொடர திடசங்கற்பம் பூண்டுள்ள அவரின் அன்புச் சகோதரனாகவும் வாக்காளப் பெருமக்களாகி உங்களை யாழ்மாவட்டத்தின் எல்லாப்பகுதிகளுக்கும் பயணித்து, சந்தித்து உரையாடியபோது உங்களின் எண்ணங்களை, எதிர்பார்ப்புக்களை,கடந்த காலங்களில் நீங்கள் சந்தித்த அவலங்களை, அவமானங்களை இழப்புக்களை, அனுபவித்த துயரங்கள் அனைத்தையும் என்னால் ஆத்மார்த்தமாகப்புரிந்து கொள்ளமுடிந்தது.

கடந்த காலங்களில் அரசியல் நடத்தியோர் உங்களை எவ்வாறு ஏமாற்றி,அச்சுறுத்தி,அவமதித்து தங்கள் பதவி நாற்காலிகளை பாதுகாத்துக் கொண்டார்கள் என்பதையும், அதேசமயம் என் அண்ணன் மகேஸ்வரன் எவ்வாறு தன் செயற்திறன் மூலம் எம் மக்களுக்கான பணிகளை ஒரு தனி மனிதனாக நின்று மனோதர்மத்துடன் மேற் கொண்டும் உங்கள் நம்பிக்கைக்குரிய மனிதனாக ஒளிர்ந்தார் என்பதையும் புரிந்து கொண்டேன்.

அவரைப்போன்று பரபரப்பின்றி மக்கள் சேவக்கு தம்மை அர்ப்பணிக்கும் மனோதர்மமற்றவர்கள் மக்கள் செல் வாக்கு அவர் பக்கம் அணிதிரள்வதை பொறுக்காது தெய்வ சன்னி தானத்தில் வைத்து அவரை கொன்றார் களேயன்றி அவர் விட்டுசென்ற மக்கள் பணிகளை தொடரும் வக்கற்றவர்களாகவே தொடர்ந்தும் ஏமாற்று அரசியலை நடத்திவருகின்றனர் என்பதையும் உளம்நோக அறிந்து கொண்டேன்.

இந்த நாட்களில்
மீனவர் சங்கப் பிரதிநிதிகள்
தொழிற் சங்கப் பிரதிநிதிகள்
விவசாயிகள் சங்க பிரதிநிதிகள்
பனை தென்னை வள அபிவிருத்தி சங்கப்பிரதிநிதிகள்
கூட்டுறவாள் சங்கம் மற்றும் சமாச உறுப்பினர்கள்
பாரஊர்தி உரிமையாளர் சங்க பிரதிநிதிகள்
வர்த்தகர் சங்கத்தவர்கள்.
ஆலய அறங்காவலர் குழுவினர்
மத குருமார்கள்
கல்லூரி அதிபர்கள் ஆசிரியர்கள் சங்கத்தினர்
விளையாட்டுக் கழங்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் நிர்வாகிகள்
நாட்டின் எதிர்கால சந்ததியினரான மாணவர் ஒன்றியத்தினர்

எனப் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களும் என்னை நேரில் சந்தித்து உரையாடியும், தம் பிரச்சினைகள் குறித்து விவாதித்தும் மகஜர்கள் கையளித்தும், தம் எதிர்பார்ப்புகளையும், தாம் கடந்த காலங்கள் வன்முறை அரசியல் வாதிகளால் எவ்வாறு 'பேய்க்காட்டப்" பட்டார்கள் என்பதையும் தெரிவித்ததுடன், மகேஸ்வரன் வழியில் நான் மக்களில் ஒருவனாக நின்று அரசியல் பதவிகப்பால் நின்றும் பணியாற்ற வேண்டும் என்ற தமது எண்ண கிடக்கைகளையும் வெளியிட்டனர்.

எதிர்பார்ப்போடும் நம்பிக்கையோடும் என்னிடம் நீங்கள் கோரியவற்றை என்னால் ஆனவரை அண்ணன் மகேஸ்வரன் வழியில் நின்று நிறைவேற்றுவேன் என நான் உறுதி கூறுகிறேன் கட்சி அரசியலுக்கப்பால் நின்று இன,மத,சாதி மற்றும் மொழி வேறுபாடின்றி மக்களின் தேவையறிந்து சேவையாற்ற உறுதிபூண்டுளேன் என்பதையும் இவை தேர்தலுக்காக நான் ஏனையவர்களைப்போல் வழங்கும் வெற்று வாக்குறுதிகள் அல்ல வென்பதையும் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன் தமிழர்கள், தமிழினத் தனித்துவத்துடன் தலைநிமிர்ந்து வாழ என்னாலான அத்தனையையும் செய்வேன் எனவும் கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.
இது சத்தியம் -இதுஉறுதி!

என்றும் நன்றியுடன்
உங்கள் சேவையில்

தி.துவாரகேஸ்வரன்






மக்கள் துயர் துடைக்க மீண்டும் ஒரு தியாகராஜா மகேஸ்வரன்...

தியாகராஜா துவாரகேஸ்வரன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 01 ★ 07 ★ 1936



உதிர்வு 07 ★ 03 ★ 2010

## அமரர் வேலுப்பிள்ளை நடராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)

கடந்த 07.03.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகளும் தொடர்ந்து சபிண்டீகரணக் கிரியைகளும் இன்று (06.04.2010) செவ்வாய்க் கிழமை அதிகாலை 5மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'குமரகிரி',
ஓடை, அல்வாய் தெற்கு, அல்வாய்.
தொ.பே.இல. 0212264713 (96557) குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 10 ★ 06 ★ 1930



உதிர்வு 07 ★ 03 ★ 2010

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வதிரி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி மகேஸ்வரி தில்லையம்பலம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு திருமதி மகேஸ்வரி தில்லையம்பலம் சிவபதமடைந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவிக்கரம் நீட்டியவர்களுக்கும், பாசமாய் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும், எமது குடும்ப நண்பரும் கௌரவ அமைச்சரும் ஆகிய K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், அவர்தம் தோழர்களுக்கும் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத் தர்களுக்கும், இலங்கை வங்கி உத்தியோகத் தர்களுக்கும், சேவாலங்கா மன்ற உத்தியோகத்தர்களுக்கும், இந்துசமய கலாசார அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும், இலங்கை புகையிரதத் திணைக்கள உத்தியோகத் தர்களுக்கும், தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் நேரிலும் சமுகந்தந்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் தவர்களுக்கும், நினைவஞ்சலிகள், மலர்வளையங்கள் சமர்ப்பித்த வர்களுக்கும், பலவழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசை புரிந்த அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 04.04.2010 அன்று காலை கீரிமலையில் நடைபெற்றன. இன்று (06.04.2010) செவ்வாய்க்கிழமை வீட்டுக்கிரியைகள் முற்பகல் 11மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தங்களை அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'விஜயவாசா',
கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி. தொ.பே.இல. 0212264546 குடும்பத்தினர். (C/566458)


# நாடாளுமன்ற பொதுத் தேர்தல்



சேவையே இவரின் பேச்சு
சேவையே இவரின் மூச்சு
சேவையே இவரின் வாழ்வு
அஞ்சாத நெஞ்சமுடன் தனை
அர்ப்பணித்த
விஞ்சுபுகழ் விநாயகமூர்த்தி ஐயா
தஞ்சமென வந்த தமிழர் தம்
துயர்துடைத்து
நெஞ்சிலே உரமும் நேர்மைத் திறனும்
கொண்ட இவர் வெற்றிக்காய்
உழைத்திடுவோம் வாரீர்.
தளராத்துணிவுள்ள தமிழன்

அப்பாத்துரை விநாயகமூர்த்தி

X 1

(சி/566468)



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 தமிழ்க்காங்கிரஸ்

உயர்திரு
S.வரதராஜன்
- முதன்மை வேட்பாளர் -
(பிரபல பொருளியல் ஆசிரியர், முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்)



X 10

மக்களோடு மக்களாக என்றும் நிலைத்து நிற்கக்கூடிய வேட்பாளரை நீங்கள் தெரிவு செய்யுங்கள்.
தன்னை உயர்த்துவதற்கு அரசியலைப் பயன்படுத்துபவன் அரசியல்வாதி.
மக்களை உயர்த்துவதற்கு அரசியலைப் பயன்படுத்துபவன் அரசியல்ஞானி

அன்பான வாக்காளப் பெருமக்களே! 27வருட காலமாக கல்விப் பணியில் கோபுரமாக உயர்ந்து நிற்கின்ற பொருளியல் ஆசிரியரை யாழ்.மாவட்டத்தில் அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் செல்ல இதுவரை கல்வி கற்ற பல ஆயிரம் ஆயிரம் மாணவக் குடும்பங்கள், அவர்கள் சார்ந்த குடும்பங்கள், அன்பர்கள், ஆதரவாளப் பெருமக்கள், கல்விமான்கள் அனைவரும் உங்கள் வாக்குகளை வழங்கி ஆதரிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசிரியர் சமூகம்,
யாழ்.மாவட்டம். (சி/566459)


## இன்று பஜனை

யாழ்ப்பாணம், ஏப்.06

உடுவில் மகளிர் கல்லூரி வழங்கும் 'அன்பின் ஆட்கொள்ளல்...' பஜனை நிகழ்வு இன்று மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இந்த பஜனை நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## தேர்தலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தும் இதுவரை வாக்களிக்காதவர்கள், தவறாது உடனடியாக வாக்களிக்குமாறும் எதிர்வரும் எட்டாம் திகதி மாலை 4.00 மணிக்கு வாக்குச் சீட்டுகள் யாவும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்குக் கொண்டுசெல்லப்பட வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

19,500 முப்படையினரும், 58,700 பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினரும் இன்றுமுதல் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். நள்ளிரவு 12.00மணிமுதல் வேட்பாளர்கள் அனைவரும் தமது பிரதான தேர்தல் பிரசார அலுவலகம் தவிர்ந்த ஏனையவற்றை மூடிவிட வேண்டுமென அறிவுறுத்தப் பட்டுள்ளது.

வாக்குச்சாவடிகள், வாக்கு எண்ணும் நிலையங்கள், வாக்குப்பெட்டிகள் எடுத்துச் செல்லும் வாகனங்கள் என்பவற்றுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்படுகிறது. வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்காதவர்கள் தபாலகங்களில் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தேர்தல் திணைக்களம் அறிவிக்கிறது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை விட, பொதுத் தேர்தலுக்குப் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 413பொலிஸ் பிரிவுகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர்கள் தாம் வாக்களிக்கும் வாக்குச்சாவடியைத் தவிர வேறு வாக்குச்சாவடிக்குச் செல்வதாயின் வேட்பாளருக்குரிய ஆளடையாள அட்டையுடன் மட்டுமே செல்லமுடியும் என்றும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-சி)

# துயரம் தோய்ந்த ஓராண்டின் பின்...



அன்பால் அரவணைத்து
அறிவூட்டி
எமது வாழ்விற்கு
உரமாகி நின்ற பாசத்திருவுருவே!
ஆண்டு ஒன்று ஓடி
மறைந்தாலும்
உம் நினைவு
என்றென்றும் அழியாது
அகலாது.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## அமரர் சிவஞானவதி வேலாயுதம்

தோற்றம் 12.02.1949 மறைவு 06.04.2009

வீரபத்திராஜன்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர். (96558)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி சாருஜா நந்தகுமார்



பலாலி கிழக்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும், சங்கானை வீதி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நந்தகுமார் (நந்தன்)- சுபதினி (சுபி) தம்பதிகளின் செல்வப் புதல்வி சாருஜா (மாணவி, யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி பாலர் பாடசாலை) ஞாயிற்றுக்கிழமை (04.04.2010) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம்- அன்னப்பிள்ளை மற்றும் சின்னத்துரை-காலஞ்சென்ற விமலாதேவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாரங்கனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி சீத்தாங்குல இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை வீதி,
தென்மூலை, அச்சுவேலி. (சி/566479)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி வைத்திலிங்கம் இராசமணி



புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்திலிங்கம் இராசமணி நேற்று (05.04.2010) திங்கட்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

190, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி/566471)

தகவல்:
வைத்திலிங்கம்.
(கணவர்).

## பொன்னம்பலம் அமிர்தலிங்கம்



நவாலியைப் பிறப்பிடமாகவும், மூளாய் தெற்கு, மூளாயை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அமிர்தலிங்கம் (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் யோகவதியின் அன்பு மகனும், தெய்வநாயகியின் அன்புக் கணவரும், துஷ்யந்தன் (யாழ்.மத்திய கல்லூரி, 2009 கணிதப்பிரிவு மாணவன்), அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மூளாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் தெற்கு,
சுழிபுரம். (96565)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## துரையன் துரைராசா



அச்சுவேலி, நாவற்காட்டைப் பிறப்பிடமாகவும், புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரத்தை வசிப்பிடமாவும் கொண்ட துரையன் துரைராசா நேற்று (05.04.2010) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.04.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காகக் கோப்பாய் கானான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
ஆனந்தபுரம். (96582)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைக் கேள்விகளுக்கான கோருதல் கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்,யாழ்ப்பாணம்.

01. தவிசாளர், மாவட்ட பெறுகைக்குழு அவர்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்காக தகவுடைய மற்றும் தகைமை பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து மூடிக் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகிறார்.
02. கேள்வியானது தேசிய போட்டிக்கேள்வி நடைமுறைப்படி நடத்தப்படும்.
03. ஒப்பந்த வழங்கலுக்கு தகுதி பெறுவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலிடப்படாதவராகவும், நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தில் கட்டட நிர்மாணத் துறையில் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்கான குறித்த பதிவை அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல்வேண்டும்.
04. ஒப்பந்த வழங்கலுக்கான தகைமையைப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள் பற்றி ய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தின் பகுதி 4இலும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வித் தரவிலும் (பகுதி5) கொடுக்கப்பட்டுள்ளன.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை *பிரதம பொறியியலாளர், பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம்(வமா) கடற்கரை வீதி, குரு நகர், யாழ்ப்பாணம்* (தொ.பேசி,தொ.நகல் இல.0212222632) இலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் விலைக்கேள்வி ஆவணங்களை மேற்கூறிய முகவரியில் காலை 9மணியிலிருந்து மாலை 15மணிவரை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1,500.00ஐ *பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம்(வமா) கடற்கரைவீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில்* பணமாகச் செலுத்துவதன் மூலம் 05.04.2010ஆம் திகதியிலிருந்து 23.04.2010ஆம் திகதிவரை காலை 9மணியிலிருந்து மாலை 15மணிவரை ஆங்கில மொழியிலான பூரண தொகுதி கேள்வி ஆவணம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்விகள்இரண்டுபிரதிகளில் *தவிசாளர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் (பிரதம கணக்காளர் அறையில் உள்ள கேள்விப் பெட்டியில்)* 26.04.2010ஆம் திகதியன்று 15 மணி அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படவேண்டும். காலந்தாழ்த்தி சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகவே வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் திறக்கப்படும்.
08. கேள்வி தொடர்பான முன்ஆயத்தக் கூட்டம் 23.04.2010அன்று *பிரதம பொறியியலாளர் அலுவலகம்,கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், யாழ்ப்பாணத்தில்* காலை 10 மணியளவில் நடைபெறும்.
09. கேள்விகள் கீழே உள்ள அட்டவணையில் உள்ளவாறு உரிய செல்லுபடியான கேள்விப் பிணையுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | ஒப்பந்த காலம் | தேவையான ICTAD தரம் (கட்டடங்கள்) | விலைக் கேள்வி பிணைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| JF/BD/GA/DS/01/10 | பிரதேச செயலக கட்டடம், பூரணப்படுத்தல், உடுவில் | 05 மாதங்கள் | M5 / C6 | 250,000.00 | 10.08.2010 |
| JF/BD/GA/DS/02/10 | பிரதேச செயலக கட்டடம் பூரணப்படுத்தல், நல்லூர் | 05 மாதங்கள் | M5 / C6 | 220,000.00 | 10.08.2010 |
| JF/BD/GA/DS/03/10 | பிரதேச செயலக கட்டடம் பூரணப்படுத்தல், சண்டிலிப்பாய் | 04 மாதங்கள் | M6 / C7 | 96,000.00 | 10.08.2010 |
| JF/BD/GA/HS/04/10 | மகப்பேற்று விடுதி புனரமைத்தல் ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை | 04 மாதங்கள் | M5 / C6 | 140,000.00 | 10.08.2010 |
| JF/BD/GA/HS/05/10 | புனரமைப்பு வேலைகள் ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை (சமையலறை, களஞ்சிய அறை, வாகனத் தரிப்பிடம், மனநல சிகிச்சைப் பிரிவு) | 03 மாதங்கள் | M6 / C7 | 82,000.00 | 10.08.2010 |

பிரதம பொறியியலாளர் அலுவலகம் ,
கட்டடங்கள் திணைக்களம்,வடமாகாணம்,
கடற்கரைவீதி,குருநகர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.021 222 2632

க.கணேஷ்
தவிசாளர்,மாவட்ட பெறுகைக்குழு/
மாவட்டச் செயலர்/அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

குறிப்பு: இந்த அறிவித்தல் *05.04.2010* ஆம் திகதியன்று பிரசுரமாகி இருக்க வேண்டும்.

## ஸ்கந்தவரோதயா கல்லூரி - சுன்னாகம், ஆரம்பப்பிரிவு வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி -2010

காலம் : இன்று (06.04.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணி
இடம் : கல்லூரி மைதானம்
தலைவர் : திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் (அதிபர்)
முதன்மை விருந்தினர்: வைத்திய கலாநிதி ஆ. பார்த்தீபன் தம்பதிகள்
(வைத்திய அதிகாரி, யாழ். போதனா வைத்தியசாலை, O.P.D.)
சிறப்பு விருந்தினர்: வைத்திய கலாநிதி தேவரட்ணம் சேத்திரபாலன் தம்பதிகள்
(D.M.O., அளவெட்டி, M.O.H., தெல்லிப்பழை)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை,
சுன்னாகம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(ச/566489)

## நாடாளுமன்றத் தேர்தல் - 2010


### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

★மும்மொழி ஆற்றலும் முடிவெடுக்கும் திறனும்
★நிரூபிக்கப்பட்ட நிர்வாக செயற்திறன்
★நீண்டகாலம் தமிழ் தேசியத்திற்காக தாயக மண்ணில் நின்று குரல் கொடுத்தமை
★அனர்த்தங்களின் போதும் இடப்பெயர்வுகளின் போதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியமை- அவர்களின் புனர்வாழ்வில் அக்கறை
★தாயகத் தன்னாட்சியிலும் சுயநிர்ணய உரிமையிலும் தளர்வில்லாத பற்றுறுதி
★காணாமல் போனோர், கைது செய்யப்பட்டோர், சிறைப்பட்டு இருப்போர் விடயத்தில் தீவிர அக்கறை
★எப்பொழுதும் எம்முடன் நிற்கும் எல்லோர்க்கும் முகம் தெரிந்தவர்

தமிழரசுக் கட்சி சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டும் இவரது விருப்பு வாக்கு இலக்கம் 11 க்கும் மேலே புள்ளடியிட்டும்

திரு.சீ.வீ.கே.சிவஞானம் அவர்களை நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்வோம்.

யாழ்.நல்லூர் மக்கள்



X

11

சீ.வீ.கே.சிவஞானம்

## நாடாளுமன்றத் தேர்தல் – 2010

### எஸ்.எக்ஸ். குலநாயகம்



இவர் எங்கள் வீட்டுப்பிள்ளை.
அவரது எப்பணியிலும் தமிழ்த்தேசியம் முந்தி நிற்கும்.
தந்தை செல்வா முதல் அனைவராலும்
அரவணைத்து வளர்க்கப்பெற்றவர்.

எங்கள் பிரதிநிதியாக

**எஸ். எக்ஸ். குலநாயகம்**

அவர்களை இம்முறை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவோம்.

வட்டுக்கோட்டை, காங்கேசந்துறை,
உடுப்பிட்டி, பருத்தித்துறை வாக்காளர்கள்





இலங்கைத் தமிழரசுக் கட்சி X

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) 12

எஸ். எக்ஸ். குலநாயகம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஷையூரில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் பேச்சைக் குழப்பினர்

பாஷையூரில் நேற்றிரவு நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் வேட்பாளர் ஈ.சரவணபவன் உரையாற்றிக் கொண்டிருந்த போது, அந்தப் பேச்சை ஈ.பி.டி.பி.யின் பிரசாரப் பிரிவினர் குழப்பினர்.

பாஷையூர் விளையாட்டு மைதானத்தில் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட் டம் நேற்றிரவு நடைபெற்றது.

அக்கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப் பின் வேட்பாளரும் உதயன் நிர்வாக இயக்குநருமான ஈ. சரவணபவன் உரையாற்ற எழுந்ததும், ஈ.பி.டி.பி.யின் பிரசாரப் பிரிவினர் ஓட்டோவில் கட்டியிருந்த ஒலி பெருக்கி மூலம் அந்தப் பகுதியில் கோஷங்களை எழுப்பினர். சரவணபவன் பேச்சை சற்று நேரம் நிறுத்தியதும், அவ்விடத்தில் இருந்து அகன்ற பிரசாரப்பகுதியினர் மீண்டும் சரவணபவன் பேச ஆரம்பித்ததும் அங்கு வந்து மீண்டும் கோஷம் எழுப்பினர். அப்போது கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் ஒன்றுசேர்ந்து ஓட்டோவை விரட்ட முயன்றபோது அவர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர். (அ-1)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.03.2010 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் தர்மலிங்கம் கணேசலிங்கம் (தர்மாஸ்)

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (06.04. 2010) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளைமறு நாள் (08.04.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

தொடர்ந்து இடம்பெறும்ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குலனைபூர், அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம். (96575) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகரத்தினசர்மா நாகலட்சுமி அம்மா



கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகரத்தினசர்மா நாகலட்சுமி அம்மா ஞாயிற்றுக்கிழமை காலை 6.30மணிக்கு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கொழும்புத்துறை சோமசுந்தரஐயர்- இராஜலட்சுமிஅம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கோப்பாய் சுப்பிரமணியக் குருக்கள்- இலட்சுமிஅம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் நடராஜசர்மா (கனடா) லோகேஸ்வர சர்மா (கொழும்புத்துறை), வரதராஜசர்மா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), உமா, நிர்மலா,மாலினி, கிரிஜா,றோகினி ஆகியோரின் அன்புத் தாயாரும்,ஹம்சா, பிரேமச்சந்திரக்குருக்கள், உமாசுதசர்மா (இந்தியா), காலஞ்சென்ற வெங்கடகிருஷ்ணசர்மா மற்றும் ஜெகதீஸ்வர சர்மா ஆகியோரின் அன்பு மாமியாரும், கமலாம்பாள் (கனடா), ஸ்ரீதர சர்மா(மலேசியா), புவனேஸ்வரி, லோகேஸ் வரி, திருமதி திருமலை சாமிசர்மா மங்களம்மா, பத்மாவதி ஆகியோரின் மைத்துனியும், கௌதமன், விசாகன், சாயி ஆர்த்தி, நர்த்தன சர்மா, பார்க்கவி, சதீஸ், பிரதீஸ், ஜெகதீஸ், ஜீவிதா, துளசியா, தனுஜா, ஹம்சியா, சபானியா, அஸ்வின் ஆகியோர்ரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12மணிக்கு கோப்பாய் வடக்கில் உள்ள அவரின் உதயகிரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர் க.சண்முகரத்தினசர்மா,
(ஓய்வுபெற்ற ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி).
உதயகிரி,
கோப்பாய் வடக்கு. (96585)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



01.வாதரவத்தை இந்து மயானத்தைப் புனரமைப்பதற்காக ரூபா 150,000 நிதியுதவியளித்தமை.

02.வாதரவத்தை கிராமத்துக்கான பஸ் போக்குவரத்துக்கு நடவடிக்கை எடுத்தமை.

03.பற்றாக் குறையாக இருந்த நீர்விநியோகத்தைச் சீரமைத்தமை.

இவற்றிற்காக **மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கு எமது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கிராம அபிவிருத்திச் சங்கம்,
வாதரவத்தை.
(96574)

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா கந்தசாமி (பெரிய அங்கிள்)



சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கந்தசாமி 04.04.2010 ஞாயிற்றுக் கிழமை அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்கள்ான தம்பையா - பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜயகுமாரி, பத்மநாதன், அருளானந்தன், பரமேஸ்வரன், கணேசமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கமுத்து, காலஞ்சென்றவர்களான சின்னையா, மகேஸ்வரி மற்றும் சுப்பிரமணியம், செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்கினேஸ்வரன், ஞானேஸ்வரி, ஜெயராணி, பிரவீனா, தனுசா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகமணி, துரைராஜா மற்றும் இந்திராணி, சிவமணி, செல்லம்மா, சண்முகம் ஆகியோரின் மைத்துனரும், சாரங்கன், றமேஸ், சங்கீதா, கிரிசாந், அஜந்தன், கவின்யா, அரிசுதன், ஸ்ரீயன், தேஜன், ரஸ்னா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு. (96576) தகவல்: குடும்பத்தினர்.

### கணேசு செல்லத்துரை



புங்குடுதீவு ,4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இல.488, கே.கே.எஸ். வீதி, சிவலிங்கப்புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு செல்லத்துரை (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்,

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசு- சற்குணம் தம்பதிகளின் புதல்வனும், காலஞ் சென்றவர்களான வடிவேலு- பார்வதி தம்பதிகளின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சதுர்சன், தனுசியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பௌசிகா (புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ,நமசிவாயம், ஐயாத்துரை, புண்ணியமூர்த்தி, அருந்தவமணி(சுவிஸ்), அப்புத்துரை, கந்தசாமி (சுவிஸ்), செல்வகுமார் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கருணாநிதி,நல்லதம்பி, சற்குணராசா, வசந்தா, விக்கினேஸ்வரன், சீதாலட்சுமி, நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடன் இன்று (06.04.2010) செய்வாய்க்கிழமை முற்பகல் 10.மணிக்கு தகனக்கரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.488, கே.கே.எஸ்.வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். (96586) தகவல்: குடும்பத்தினர்.


## ஐக்கிய தேசியக் கட்சி
UNP



முபீன் (மெக்ஸா)



திருமதி
வி.மகேஸ்வரன்

5X



X | 5X | 8X

யாழ். மாவட்ட மக்களுக்கு 19.03.2010இல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இருந்து ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணிலின் செய்தி.

★1986இல் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் ஆறுமாத காலத்தினுள் சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்படுவர்.

★மீள்குடியேற்ற அமைச்சின் கிளையை யாழ் நகரில் நிறுவி மீள்குடியேற்றம், வீடமைப்பு, நஷ்டஈடு, நிவாரணம், வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம் உட்பட அனைத்துத் தேவைகளையும் பாரபட்சமின்றி துரிதமாக பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

★கடலிலும் தரையிலும் கட்டுப்பாடு அற்ற போக்குவரத்து, மீன்பிடி நடவடிக்கை சுதந்திரமாக அனுமதிக்கப்படும்.

★ அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு தடுப்புக்காவல் கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கையுடன் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படும்.

★வட கிழக்கில் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு அளிக்கப்படும்.

★ சிதைந்துபோன இன,மத ஒற்றுமைப்பாட்டை மீண்டும் உயிரூட்ட, பன்மைப்படுத்தப்பட்ட கலாசார நிகழ்வுத் திட்டம் தயாரிக்கப்படும்.

★பலாலி விமான நிலையம் சர்வதேச விமானநிலையமாக்கப்பட்டு எமது புலம் பெயர் உறவுகள் வெளிநாடுகளில் இருந்து நேரடியாக பலாலி வர வசதி ஏற்படுத்தப்படும்.

அன்பார்ந்த தமிழ்மக்களே!

இவையனைத்தையும் செயற்படுத்த எமது பிரதிநிதி நாடாளுமன்றத்திற்குச் செல்ல வேண்டும். ஆகவே ஐ.தே.கட்சியின் சின்னமாகிய யானை [X] புள்ளடி இட்டு விருப்பு வாக்குகள் மூன்றி லொன்றை முபீன் (மெக்ஸா) இல் [5X] இடுங்கள். ஏனைய இரண்டை சக வேட்பாளர்களுக்கும் அளித்து வெற்றிபெறச் செய்யுங்கள்.

நன்றி

யாழ்/ஐ.தே.க.ஆதரவாளர்கள்.


### அரச ஆதரவாளர் சுட்டுக் கொலை

கொழு, ஏப். 06

குருநாகல் மாவட்டத்தில் அரசுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட இருபது வயது இளைஞர் ஒருவர் கப் வாகனம் ஒன்றில் வந்த இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்டார். நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.


## நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2010



Dr. பொன்.சிவபாலன்
தலைமையில்
ஆனந்தராஜா அன்புஜன்



அன்று பொன்.சிவகுமாரன்.....
செய் அல்லது செத்துமடி.....!
இன்று பொன்.சிவபாலன்
செய்..... செய்து முடி.....!

2X செய்து முடிப்போம்! இளைஞர்களே, 7X

எம் பின்னால் அணிதிரளுங்கள்.....!

சுயேச்சைக்குழு 07  X

2X 7X 8X

- கல்லூரி நண்பர்கள்.
(96588)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தாயகத்தில் தன்னாட்சி உரிமையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின் றார் தமிழரசுக்கட்சியின் செயலாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர்களில் ஒருவருமான மாவை சேனாதி ராஜா.

நல்லூர் சட்டநாதர் கோவில் வீதியில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இறுதித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசுகையில் மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் தமிழரசு, சிங்கள அரசுகள் என மூன்று தேசங்களும் அரசுகளும் இருந்துள்ளன.

போரினால் மூன்று அரசுகளையும் இணைத்த ஆங்கில அரசு 1948 இல் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கிய பொழுது சிங்களவருடைய இறைமை சிங்களவரிடம் சென்ற பொழுது, தமிழர் இறைமை தமிழ் மக்களிடம் வந்துவிட்டது என்பதே நிலைப்பாடாகும்.

உண்மையில் இறைமை (Sovereignity) மக்களிடமே உள்ளது. இறைமை மக்களின் பிறப்புரிமை. இதுவரை காலமும் இலங்கையில் ஒற்றையாட்சிக்கோ, சிங்கள அரசுக்கோ, இலங்கையில் வரையப்பட்ட எந்த அரசியலமைப்புக்கோ தமிழ் மக்கள் தங்கள் சம்மதத்தைக் கொடுக்கவில்லை. அரசிடம் இறைமையை மக்கள் இதுவரை காலமும் தான் கொடுக்கிறார்கள்.

அதே போன்று தான் தமிழ்த் தேசிய இனத்திற்கு உரித்தான சுயநிர்ணய உரிமைத் தத்துவமும், தமிழ்மக்கள் தங்கள் எதிர்கால அரசியல் ஆட்சி பற்றித் தீர்மானிக்கும் உரிமையை வழங்குகின்றது.

வரலாற்று ரீதியான வளமான தமிழ் மொழி, கலை, கலாசாரம், தனியான பண்பாடு கொண்ட தமிழினம் பாரம்பரியமான நிலத்தொடர்ச்சியுள்ள வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகம் கொண்ட தமிழினம் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டுக்கு உரித்துடையது.

தமிழ் மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய" உரிமை அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் ஆட்சி பற்றிய எதிர்காலத்தைத் தீர்மானிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடனும், இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தத்திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே பேச்சுக்கள் நடத்தப்பட்டுமுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2004 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் தீர்மானமான வாசகம் ''அரசியல் தீர்வு ஏற்படும் வரை காத்திராது, போரினால் சிதைந்து போன தமிழர் தாயகத்தையும் சீரழிந்து போன தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களையும் கட்டியெழுப்பப் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளின் பொருட்டு'' ஒரு இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை நிறுவப்படவேண்டும் என வற்புறுத்தப்பட்டிருந்தது. இப் பிரேரணையை தமிழீழ விடுதலைப் புலிகள் 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன் படிக்கையின் பின் முன் வைத்தனர்.

### ஒஸ்லோ அறிக்கை

அத்துடன் 2003 ஆம் ஆண்டு ஒஸ்லோ உடன்படிக்கையும் ஏற்பட்டது. அந்த ஒஸ்லோ உடன் படிக்கையை வரவேற்ற இந்தியா, ஜப்பான், ஐரோப்பிய யூனியன் நாடுகள், அமெரிக்கா உள்ளிட்ட 51 நாடுகள் தமிழர் தாயகத்தின் (வடக்கு கிழக்கின்) புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக 45,000 கோடி ரூபா (4.5 பில்லியன் டொலர்) உதவ உறுதியளித்தன.

'உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பில் தமிழர் தாயகத்தில் தன்னாட்சி ஏற்படும் வகையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்' என உடன்படிக்கை ஏற்பட்டது. இதனை ஜப்பான் டோக்கியோ பிரகடனமும் வற்புறுத்தியது.

அன்று அரசுக்கு சமமாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்தாயகத்தில் நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருந்தனர். களநிலை பலமான சமமான தளத்தில் இருந்தது.

2009 மே மாதத்தின் பின் களநிலை மாறியுள்ளது. அரசியல் சமநிலை பாதிக்கப் பட்டுள்ளது. தமிழ் மக்கள் வரலாறு காணாத மனிதப் பேரவலத்தில் வீழ்ந்து கிடக்கின்றனர். பல்லாயிரம் தமிழ் உயிர்கள் முள்ளி வாய்காலில் பலியிடப்பட்டுள்ளன. பல லட்சம் மக்கள் குற்றுயிராக்கப்பட்டுள்ளனர். 10 லட்சத்திற்குமதிகமானோர் அனா தரவாய் பிச்சைக்காரர்களாய் விடப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் சிங்கள இராணுவத் தளபதிகளிடம் விடப்பட்டுள்ளன. தமிழர் பிரதிநிதிகளிடம் (தமிழர்) நிபுணத்துவம் வாய்ந்தவர்களிடம் அந்த புனர்வாழ்வுக் கட்டமைப்பு அதிகாரம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஜனாதிபதிக்கு அந்த எண்ணமில்லை.

### பௌத்த சிங்கள தேசத்தை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டம்

ஜனாதிபதி ''ஒரே நாடு ஒரே மக்கள் '' என ஒரு பௌத்த சிங்கள தேசத்தை உரு வாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் செயல்படுகிறார்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை நிராகரித்து, வடக்கையும் கிழக்கையும் பிரித்து கிழக்கைச் சிங்கள மயமாக்கும் திட்டத்தைத் தீவிரப்படுத்தி வரும் அதே நேரம் வடக்கை இராணுவ மயமாக்கிச் சிங்கள மயமாக்கும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துள்ளார்.

தமிழர் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. மீள்குடியேற்றத்திற்கு உயர்பாதுகாப்பு வலயங்களும், பெருந்தொகை இராணுவப் பிரச்சன்னமும் தடையாக உள்ளன.

இதனால் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உயர்பாதுகாப்பு வல்யங்களும், பெருமளவில் குவிக்கப்பட்டுள்ள இராணுவமும் அகற்றப்படவேண்டம் என வற்புறுத் துகின்றது.

தமிழ் மக்களுக்கான அரசியல் வேலைத் திட்டத்தை நாம் மிகுந்த பொறுப் புணர்ச்சி யுடன் முன்வைத்த பொழுது சிங்களத் தீவிர வாதத் தலைவர்கள் எம்மைத் தடைசெய்ய வேண்டுமெனக் கூக்குரலிடுகின்றனர். அதேவேளை ஒற்றையாட்சி அரசியல மைப்புக்கு விசுவாசம் தெரிவித்துவிட்டு வேட்பு மனுத்தாக்கல் செய்த ஜீ.ஜீ.பி. குழு நாம் தேசி யத்தை விட்டு விட்டோமென்று புரட்டுக் களைப் பரப்பி வருகின்றது. எம்மைத் தோற் கடிப்பதே தம் இலக்கு என்கிறது.

அடுத்து ஒஸ்லோ உடன்படிக்கையை பரீட்சித்துக் கூடப்பார்க்க இடமிருக்க வில்லை என்ற கருத்து சர்வதேச இராஜதந்திரிகளிடமிருக்கிறது. அந்த உடன்படிக்கை முன் னெடுக்கப்பட்டிருந்தால் இத்தனை பேரவலம் ஏற்பட்டிருக்காது என்ற கருத்தும் அவர் களிடம் இருந்தது.

இப்பொழுது மிகப் பாரிய மனிதப் பேரவலத்தில் வீழ்ந்து கிடக்கும் தமிழர் தேசம்,தமிழ் மக்கள் இருக்கின்ற நிலையில் ஒஸ்லோ உடன் படிக்கையிலிருந்து அரசியல் தீர்வொன்றைக் காணப் பேச்சுத் தொடங்கினால் என்ன என்ற ஒரு கருத்தும் உண்டு.2003இல் 51 நாடுகள் தமிழர் புனர்வாழ்வுக்கும் , தொழில்துறைகளைக் கட்டியெழுப்பவும், அபிவிருத்திக்குமாகவும் 4.5 பில்லியன் டொலர் வழங்க முன் வந்தன.

### வெளிநாடுகளின் உதவி அதிகம் தேவை

இன்று, 2009 இல் வன்னியில் இடம் பெற்ற பேரவலம் 2004 ஐ விட நூறுமடங்கு பாரியது.இப்போது 51 நாடுகளினதும் இந்தியாவினதும் உதவிகள் பல மடங்கு தேவை. மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இவ்வுதவிகள் அவசியம் தேவை. 2004 தேர்தல் அறிக்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் வரை காத்திராமல் புனர்வாழ்வு நடவடிக்கைகள் உட்பட உடனடி தேவைகளை நிறைவுசெய்ய ஒரு ''இடைக்கால தன்னாட்சி அதிகார சபை'' வேண்டுமென்று விடுதலைப் புலிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு தீர்மானத்தை முன்வைத்தன. அந்தக் கட்டமைப்பு 2009இன்பின் மிகவும் அவசியமாகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வு ஒன்றுக்கான அடிப்படைக் கொள்கைகளைக் கோடிட்டுக் காட்டும் அதேவேளை உடனடிப் பிரச்சினைகளான மீள் குடியேற்றம்,புனர்வாழ்வு நடவடிக்கை அதற்காக உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படுதல் வேண்டும்.பெருமளவில் குவிக்கப்பட்டுள்ள இராணுவம் 1983 இன் நிலைக்குத் திரும்ப வேண்டும் என்றும் வற்புறுத்தியிருக்கின்றது. சரணடைந்ததாகக் கூறப்படும் தமிழ் இளைஞர்கள் மன்னிப்பளித்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்பன போன்ற பல எதிர்கால வேலைத் திட்டங்களையும் அறிவித்துள்ளோம்.

### பரந்துபட்ட முன்னணி தேவை

தேர்தல் முடிவடைந்ததும் 'பரந்துபட்ட முன்னணி' முஸ்லிம் மற்றும் மலையகப் பிரதிநிதிகளை உள்ளடக்கி உருவாக்கப்படுவதன் அவசியத்தை உணர்ந்துள்ளோம்.

ஏனெனில் மஹிந்த சிந்தனையாளர் தமிழ் முஸ்லிம் மக்கள் தாயகத்தில் வாழு மிடங்களில் தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மைக் குடிப்பரம்பலை மாற்றி யமைத்து, சிறுபான்மையினராக்கும் வகையில் சிங்கள இராணுவ,சிங்கள மக்கள் குடி யிருப்புக்களைத் தமிழ் பேசும் மக்கள் பிரதேசங்களில் கட்டமைக்கவுள்ளனர். பௌத்த கலாசார அடையாளங்களைப் பரவலாக்கவுள்ளனர். முதலில் இராணுவ மயமாக்கிப் பின் னர் சிங்கள மயமாக்கி இதுவரை பலமாயிருந்த தமிழ்ப் பேசும் மக்கள் பிரதேசங்களில் தமிழ்பேசும் மக்களின் உரிமை குரல் ஜனநாயக ரீதியிலும் இனிமேல் எழக்கூடாது என்று அரசு திட்டமிட்டுச் செயல்படுகின்றது.

### முறியடிக்கப்பட வேண்டும்

இச் செயற்பாடுகளுக்கும், இதுவரை மஹிந்த ராஜபக்ஷவின் செயல்திட்டங்க ளுக்கும்,போர்க் குற்றங்களுக்கும் ஆதரவளித்து வரும் பிரதிநிதிகளை தமிழ் பேசும் மக்களிடமிருந்து இத் தேர்தலில் தேர்வு செய்து பொம்மை நிர்வாகத்தினை வடக்கிலும் ஏற்படுத்தவும் உதிரிக் கட்சிகளையும், சுயேச்சைகளையும் தாராளமாகத் தேர்தல் களத்தில் இறக்கியுள்ள ஜனாதிபதியின் இத் திட்டம் முறியடிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மக்கள் நன்குணர்ந்துள்ளனர்.

எனவே தான் ஜனாதிபதி ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனையை தமிழர் தேசத்தை இராணுவ மயமாக்கும்,சிங்கள மயமாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை தடுத்து நிறுத்தவும்; தமிழர் தாயகத்தில் தமிழ்பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தன்னாட்சி செய்யும் உரிமையை நிலைநாட்டவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து ஏப்ரல் 8ஆம் திகதி அதன் சின்னம்,தமிழரசுக் கட்சியின் சின்னம் வீட்டிற்குப் பக்கத்திலே உங்கள் வாக்கை, புள்ளடியிட்டு வெற்றிபெறச் செய்யுமாறு அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றோம் .

இலங்கை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் இந்தியாவுக்கும் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையையும், ஒன்றுபட்ட ஜனநாயக பலத்தையும் எடுத்துக்காட்ட வேண்டும். அது தமிழ் பேசும் மக்களின் அரசியற் பலத்தை அதிகரிப்பதாக அமையும்.அரசியல் தீர்வுக்கும்,உடனடித் தேவைகளை நிறைவேற்றவும்,உதவியாய் அமையும் என நம்புகிறோம்.ஒவ்வொரு வாக்கையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வீட்டுச் சின்னத்திற்கும் வழங்குமாறு வேண்டுகின்றோம். இத் தருணத்தில் இது தமிழர்களின் தலையாய கடமையாகும் -என்றார். (அ-6)

---

## ஆயுதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 200 நபர்களை கைது செய்வதற்கு வேட்பாளர்களின் ஒத்துழைப்பு அவசியப்படுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

---

## அருத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர். சாவகச்சேரியில் இடம்பெற்ற மாணவனின் கொலையில் சாட்சியமளித்த தந்தை, பிள்ளைகள், அயலவர்கள், உறவினர்கள் தினம்தினம் செத்துப் பிழைக்கின்றார்கள். இவ்வாறான நிலைமை மாறவேண்டும்.

துப்பாக்கி முனையால் மிரட்டுபவர்களைப் பொதுமக்கள்தான் வாக்குப்பலத்தால் வீட்டுக்கு அனுப்பி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தவேண்டும் - என்றார்.

இங்கு உரையாற்றிய வேட்பாளரான சி.வி.கே. சிவஞானம் கூறுகையில்:-

தேசியம் எங்கள் இரத்தத்தில் ஊறிய விடயம். அதற்காகவே நாம் அரசியலில் போராடுகின்றோம். தேசியத்தை விட்டுக்கொடுக்க மாட்டோம். எமது உணர்வு, உரிமைப் போர் அடுத்த சந்ததிக்கும் தொடரும்.

1976இல் அனைத்துத் தமிழ் மக்களா லும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை நாம் விட்டுவிடவில்லை: விட்டுக்கொடுக்கவும் தயாரில்லை.

இதுவரை எந்த ஒரு அரசும் தமிழ் மக்களின் விடயத்தில் நேர்மையாக நடக்கவில்லை. எம்மவர்களை வைத்து ஆட்சிபீடம் ஏறுவோர் அவர்களுக்குப் பொறுப்பு வாய்ந்த ஒரு அமைச்சையேனும் வழங்குவ தில்லை. ஆரம்பகாலத்தில் அஞ்சல் அமைச்சும், தற்காலத்தில் இந்து சமய கலாசார அமைச்சுமே வழங்கப்பட்டன. இது அரசின் எழுதப்படாத விதியாக அமைந்துள்ளது.

### யாழ்ப்பாணத்தவர்களை அழித்துவிடத் துடிக்கும் அரசு

இன்று சர்வதேச சமூகம் யாழ்ப்பாணத்து மக்களையே உற்றுப் பார்க்கின்றது. காரணம் தமிழ் மக்களின் உரிமைக்காக சாத்வீகப் போராட்டமும், பின்னர் இளைஞர்களின் ஆயுதப் போராட்டமும் தொடர்ந்து அரசியல் போராட்டமும் இங்கிருந்துதான் ஆரம்பித்துள்ளன. இதனாலேயே சிங்கள அரசு யாழ்ப்பாணத்தவர்களையே அழிக்க நினைக்கிறது. அதன் ஒரு கட்டமாக வடமாகாண தலைநகராக மாங்குளத்தைத் தேர்வு செய்துள்ளது.

### கைதிகள் குடியிருப்புத் திட்டம்

மாங்குளம் - கிளிநொச்சிப் பகுதிக்கு இடையில் கைதிகள் குடியிருப்புத் திட்டம் ஒன்று அமைக்கப்படுகின்றது. 10,000 கைதிகளுக்கான அக்குடியிருப்பில் ஆயிரம் பேருக்கும் குறைவான தமிழரே உள்வாங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. இவ்வாறு எம் நிலத்தைச் சிங்கள அரசு படிப்படியாக வேட்டையாடி வருகின்றது - என்றார்.

இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் அனைவரும் உரையாற்றினர்.

(அ-ஒ-6)

---

## அரியநேத்திரனின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிக அருகில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலை2யம் அமைந்துள்ளது.

அந்த நேரம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் கணேசமூர்த்தி தலைமையில் ஊர்வலமாக வந்த குழுவினர் அரியநேத்திரனின் அணியினர் மீது பட்டாசு வெடிகளைக் கொளுத்திப் போட்டனர் என்றும், அரியநேத்திரனின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் கூறப்படுகிறது.

ஆனால், இத் தாக்குதலைத் தடுத்து நிறுத்தக் களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் நிலையப் பொலிஸார் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் உதயனுக்கு நேற்று மாலை தெரிவித்தார்.

(அ-சி)





சுரேஷ் க. பிறேமச்சந்திரன்



எம் மண்ணில் நாம் வாழ,
எம் மண்ணை நாம் ஆள
தளராது குரல் கொடுப்போம்.




இலங்கை தமிழரசுக் கட்சி
தமிழ் தேசியக் கூட்டமைப்பு

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)



பிரபல சட்டத்தரணி S.N.விஸ்வலிங்கம்
திருமதி S.விஸ்வலிங்கம் (முன்னாள் அதிபர். யாழ்.நவாலி மகாவித்தியாலயம், யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி)
ஆகியோரின் மைந்தனும் யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவனும் அகில இலங்கை சட்ட மாணவர்கள் சங்கத்தின் உப தலைவருமான
**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
இத் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி (அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்) சார்பில் இளம் வேட்பாளராக போட்டியிடுகின்றார்.
**இவரைப் பெருவெற்றிபெற வாக்களிப்போம்.**
சட்டத்தரணி நண்பர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.04.2010 நள்ளிரவு 12 மணிக்கு அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அபிவிருத்தியின் பெயரால் தமிழ்த் தேசிய உணர்வை மழுங்கடிக்க மானமுள்ள தமிழன் துணை போகமாட்டான்

தமிழன் தனக்கென் தமிழ் இராட்சியத்தை உருவாக்கி ஆண்ட சரித்திரம் உண்டு. இந்த வகையில் 16ஆம் நூற்றாண்டு காலத்தின் இறுதியில் தமிழ் அரசனான சங்கிலிய மன்னனால் இலங்கையின் வடக்குக் கிழக்கு மகாணமும் வேறு சில பகுதிகளும் உள்ளடங்கலாக தமிழ் இராட்சியம் பரந்து இருந்தமை வரலாற்று ரீதியான உண்மையாகும். இந்த வகையில் தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவற்றை பேசுவதற்கும் அனுபவிப்பதற்கும் ஒவ்வொரு தமிழ் மக்களுக்கும் உரிமை உண்டு என்றும் அந்த உரிமையையும் தமிழர் கொண்டிருந்த இறைமையையும் இன்றுவரை எவரிடமும் தமிழன் ஒப்படைக்கவில்லை என்றும் கொள்வதே சாலச் சிறந்ததும், பொருத்தமானதுமாகும்.

அந்நியராம் ஆங்கிலேயர் தம்மால் கைப்பற்றப்பட்டு ஆளப்பட்ட இராட்சியங்களான கண்டி, கோட்டை, யாழ்ப்பாணம் இராட்சியங்கள் என்பன எந்த இனத்தால் ஆளப்பட்டதோ அவ் இனத்திடம் மீள ஒப்படைக்கப்பட முன்வரும் போது முன்னைய தமிழ்த் தலைவர்கள் முன்பிருந்த சிங்களத் தலைவர்களுடன் ஒன்றாக ஆளுவதற்கு நிபந்தனைகள், புரிந்துணர்வு, நன்நம்பிக்கை அடிப்படையில் இணக்கம் கண்டார்களே தவிர தமிழ்த் தேசிய உணர்வை தமிழர் தாயகமாகிய வடக்குக் கிழக்கு மாகாணத்தை பெரும்பான்மை சமூகத்திடம் தாரைவார்த்துக் கொடுக்கவும் இல்லை. தமிழர்கள் தம்முடைய இறைமையை

## எதிர்வரும் பொதுத் தேர்தலில் அது சரியாக வெளிப்படுத்தப்படும்

யாரிடமும் ஒப்படைக்கவும் இல்லை. இக்கருத்து தமிழ்த் தலைவர்கள் நால்வர்களுக்கு எதிராக யூரலல்லாத விசாரணையில் (Trial-at-Bar) மேல் நீதிமன்ற வழக்கில் ஜி.ஜி.பொன்னம்பலம் (Q.C), முன்னைநாள் சொலிசிற்றர் ஜெனரல் பிள்ளைநாயகம் ( Q.C), மு.திருச்செல்வம் (Q.C) ஆகியோர்களால் முன்வைக்கப்பட்ட வாதமும் கூட.

தமிழ்த் தலைவர்களும் சிங்களத் தலைவர்களும் ஏற்றுக் கொண்ட நியதிகளின்படி தென்னிலங்கை ஆட்சியாளர்கள் நடவாமல் பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மை சமூகத்தை தனித்து ஆளப் புறப்பட்டதனாலேயே தன்னைத்தான் ஆண்ட தன்மானமுள்ள தமிழன் அந்நோக்கத்திற்காக தன்னால் ஒப்படைத்திருக்காத இறைமையைப் பிரயோகிக்கவும் தனது தேசியத்தை, தனது வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகக் கோட்பாட்டை நிலை நிறுத்தவும் பெரும்பான்மைச் சமூகத்தின் நடவடிக்கைகளால் தள்ளப்பட்டனர். எனவே இந் நிலையில் தமிழரின் எதிர்பார்ப்பு தமிழ்த் தேசிய உணர்வே தவிர அபிவிருத்தியல்ல. எனக் கூறுவதே சாலப்பொருத்த மானதாகும்.

தமிழ் மக்கள் அதுவரை காலமும் அனுபவித்துவந்த உரிமைகளை வென்றெடுப்பதற்காக, ஆரம்ப காலத்தில் தமிழர்களுடைய பெரும் கட்சியாகத் திகழ்ந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் மறைந்த தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் பெரும்பான்மை இனத்துடன் சம உரிமையுடன் இணைந்து வாழும் போக்கைக் கைக்கொண்டு பெரும்பான்மை சமூகத்தினருடைய ஆட்சியாளரால் பல கோணத்திலும் ஏமாற்றப்பட்ட நிலையில் அவரால் கைக்கொள்ளப்பட்ட நடைமுறை தோல்வியைத் தழுவியது.

தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்துடன் இணைந்து செயற்படும் போக்கு எந்தக் காலத்திலும் வெற்றிபெறுமா என்பது அரசால் முன்னெடுக்கப்பட்டு நடந்துவந்த செயற்பாடுகளின்படி கேள்விக்குறியாகவே அமைகின்றது. காரணம் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த அரசு காலத்திற்குக் காலம் தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் தாயக நில அபகரிப்பைச் செய்ததுடன் வேலைவாய்ப்பு, அபிவிருத்தி என்பவற்றில் சிறுபான்மையோர் மீது காட்டிய புறக்கணிப்பைப் பற்றி நாடாளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் தமிழ்க் கட்சிகளால் எடுத்துக்கூறியும் இவ் விடயங்களை ஆட்சேபித்தும் பெரும்பான்மையோரின் அரசின் போக்கில் இன்றுவரை எவ்வித மாற்றம் ஏற்படவில்லை. எனவே சிறுபான்மை பெரும்பான்மையுடன் ஒற்றுமையாகச் சேர்ந்து செயற்படும் கோட்பாடு தென்னிலங்கை ஆட்சியாளரது குறுகிய நோக்கால் வெற்றி பெறவில்லை. மற்றுமொரு கட்சியான தமிழரசுக்கட்சியின் தலைவர் தந்தை செல்வாவால் சமஷ்டி ஆட்சி முறை முன்வைக்கப்பட்டது. இதுவரை காலமும் சமஷ்டி ஆட்சிமுறை தென் இலங்கை ஆட்சியாளரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுடன் அமரர் எஸ். டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்காவைப் பிரதமராகக் கொண்ட அரசு சமஷ்டி ஆட்சி முறையை முன்னெடுத்தபோது ஐக்கிய தேசியக் கட்சி அதனை எதிர்த்து அக்கொள்கையும் கைவிடப்பட்டு சமஷ்டி ஆட்சி முறைக் கோட்பாடும் தோல்வியடைந்து விட்டது.

இக்கோட்பாடுகள் ஒரு புறமிருக்க தமிழர்களுடைய தாயகக் கோட்பாடு, தமிழ்த் தேசியம் என்பவற்றை இலங்கையில் இருந்து அகற்றி இலங்கை ஒரு பௌத்த நாடு என்றும் சிங்கள மொழி அரச மொழி என்றும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவின் ஆட்சியில் 19.06.1956ஆம் திகதி முன்வைக்கப்பட்ட கருத்து ஒட்டுமொத்தமாகத் தமிழர் தாயகத்திற்கும் தமிழ்த் தேசியத்திற்கும் இந்த நாட்டில் இடமிருக்கமாட்டாது என்பதற்குப் பச்சைக்கொடி காட்டப்பட்ட செயலாகும். குறித்த சமஷ்டி ஆட்சி முறைச் செயற்பாடுகளுக்கு பெரும்பான்மை சமூகத்தாலும் எதிர்க்கட்சியாலும் காட்டிய எதிர்ப்புக்களால் 1958இல் இனக்கலவரம் ஏற்பட்டதும், பண்டா - செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அது பின் ஐக்கிய தேசியக் கட்சியின் பாதயாத்திரை எதிர்ப்பால் கிழித்தெறியப்பட்டதும் வரலாறாகும்.

நில ஆக்கிரமிப்பு, இன ஒழிப்பு, இன ஒடுக்கல் போன்ற செயல்களைத் தடுத்து நிறுத்த மேற்கொண்ட, சேர்ந்து வாழும் புரிந்துணர்வு கோட்பாடும் ஒரே இலங்கையில் சமஷ்டி முறை ஆட்சிக் கோட்பாடும் தோல்வியைத் தளுவிய அதே நேரம் தமிழர்களுக்கும் தமிழ்த்தாயகத்துக்கும் தேசியத்துக்கும் மாறான அச்சுறுத்தும் செயற்பாடு துரிதமாகச் செயற்பட அதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய நிலையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ, தந்தை செல்வா ஆகியோரால் பல கடையடைப்பு, சட்டமறுப்புப் போராட்டம், சத்தியாக்கிரகம், உண்ணாவிரதப் போராட்டங்கள் எனப் பலவித சாத்வீக முறையிலான போராட்டங்கள் மேற்கொண்டும் பயனளிக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் தீர்வுகள் முன்வைக்கப்படும் பொழுது அதனை ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுத்தாமல் தடுத்ததும் குறிப்பாக முன்னைநாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கவினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டம் ஐக்கிய தேசிய கட்சியால் குழப்பப்பட்டதும் அதேபோல ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த மாவட்ட சபை ஆட்சிமுறைக்கு (D.D.C) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் எதிர்ப்புத் தெரிவித்திருந்தும் [illegible] முறை (D.D.C) [illegible] மான செயற்பாடுகள் அனைத்தும் சமஷ்டி ஆட்சிக்கோ தமிழர் தாயகக் கோட்பாட்டிற்கோ, தமிழ்த் தேசியத்திற்கோ எந்தக் காலத்திலும் இலங்கையில் இடமிருக்காது என்ற தென்னிலங்கை ஆட்சியாளர்களின் தொடர்ச்சியான செயற்பாடுகள் அறைகூவல்களாக அமைகின்றன.

1987இல் இந்தியாவின் தலையீட்டினால் ஐக்கிய தேசியக் கட்சியால் நிறைவேற்றப்பட்ட 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் வாயிலாக உருவாக்கப்பட்ட மாகாணசபை ஆட்சிமுறையில் மாகாணசபைக்குச் சட்டத்தில் கிடைத்த அதிகாரம் கூட பெரும்பான்மை அரசால் மாகாணசபை அமைக்கப்பட்டும் அதிகாரம் வழங்கப்படாமலும் இதுவரை வடகிழக்கு மாகாணங்களுக்கு ஒரு தமிழர் ஆளுநராக நியமிக்கப்படாமலும் இன்றுவரை சாக்குப் போக்குக் காரணங்கள் கூறி தட்டிக்கழிக்கப்பட்டு வருகின்றன என்றால் வடகிழக்கு இணைந்த தமிழ்த் தாயகம், தமிழ்த் தேசியம் என்பது தமிழர்களைப் பொறுத்தவரை சிங்களப் பெரும்பான்மை இன அரசு தானாக முன்வந்து வழங்கும் என்றோ அல்லது பேச்சு மூலம் தீர்க்கப்படும் என்றோ எதிர்பார்க்கக் கூடிய ஒன்றல்ல.

ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தாம் ஆட்சிக்கு வந்தால் சிறுபான்மைத் தமிழர்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தமிழர்கள் திருப்தியடையும் வகையில் அரசியல் தீர்வு வழங்கப்படும் என காலாகாலமாகத் தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளி வழங்கினரே தவிர குறித்த வாக்குறுதிகளை இதுவரை எந்தக் கட்சியும் நிறைவேற்ற முன்வரவுமில்லை, நிறைவேற்றி இருக்கவுமில்லை. இது இவ்வாறிருக்க வழமையான பாணியில் இம்முறையும் இதே கோஷம் தென்னிலங்கைக் கட்சிகளால் முன்வைக்கப்படுகிறது என்பது மட்டுமல்லாமல் தமிழர்களுடைய உரிமைகளை வலியுறுத்த அவர்களுக்கு என ஒரு உறுதியான கட்சியோ அல்லது பிரதிநிதித்துவங்களோ கிடைக்காது போகும் வகையில் பல யுத்திகள் கையாளப்படுகின்றன. தமிழ்த் தேசியம்,தமிழ்த் தாயகக் கோட்பாடு என்பவற்றை மழுங்கடிக்க முனையும் வெளியுலக வலைப்பின்னலில் தமிழ்க் கட்சிகளை சிக்க வைத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குறித்த கொள்கைக்கு மாறான செயற்பாடு நடைபெற்றுக் கொண்டிருப்பது, நடந்து கொண்டிருக்கும் நடவடிக்கைகளை உன்னிப்பாக ஆராயும் பொழுது உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகப் பலரும் பேசிக் கொள்வதில் எந்தவித அர்த்தமும் இல்லையெனக் கொள்வதற்கு இடமில்லை.

உலக நாடுகளிடையே தற்காலத்தில் காணப்படும் மனித சமுதாயத்தின் உரிமை மதிக்கப்பட வேண்டும். அவர்களுடைய ஆட்சி, மொழி, சமயம், அரசியல், பிராந்தியம் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற தற்கால போக்கிற்கு அமைய சர்வதேசங்களின் அழுத்தங்களினாலேயே ஒரே இலங்கைக்குள் தமிழர்களுக்கு ஒரு தன்னாட்சி அமைய வேண்டும் என்ற நிலை இருந்து வருகின்றது. இந்த வகையில் இலங்கை நாடு இந்தியப் பிராந்தியத்திலிருந்து பிரிந்த பகுதி, இந்தியாவில் இருந்து வந்தவர்களே இலங்கை மக்கள் என்கின்ற தன்மையில் இலங்கைப் பிரச்சினையில் தலையிட இந்திய நாட்டுக்கு முதல் உரிமையுண்டு. அதேபோல சங்கிலியன் ஆட்சியைப் பறித்த போர்த்துக்கல், ஒல்லாந்து, ஆங்கில நாடு ஆகியவர்களுக்கும் இலங்கையின் இறைமையைப் பாதிக்காத வகையில் தலையீடு செய்து பிணக்கைத் தீர்த்து வைக்க உரிமையுண்டு. தமிழரது ஆட்சியை 1947 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு மூலம் பிரித்தானிய ஆட்சியாளர் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏற்படுத்தி உரிமையை வழங்கி அப்பாதுகாப்பு ஏற்பாடுகள் 1972ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு யாப்பால் நீக்கப்பட்ட உத்தரவாதம் மீறப்பட்டு குறித்த 1972ஆம் ஆண்டு அரசியல் அமைப்பால் பெரும்பான்மை இனத்திற்கு மட்டும் சிறப்புரிமை வழங்கியமை மற்றும் 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பால் சிங்கள மொழி அரச மொழி என உறுதிபடக் கூறி தமிழ் மொழியும் அரச நிர்வாக மொழியாக அமையும். ஆனால் அதற்கான சட்டங்கள் ஆக்கப்பட வேண்டும் என கண்துடைப்பிற்கான வாசகம் காட்டப்பட்டு அதற்கான சட்டங்களை ஆக்காது தவிர்க்கும் அதே நேரம் தமிழர்கள் விடயத்தில் மென்மைப் போக்கு கடைப்பிடிப்பதாக உலகிற்குக் காட்டி வருவதை மனிதாபிமான தன்மையில் தட்டிக் கேட்பதற்கும் பிரச்சினையில் தலையிடவும் மேற்குறித்த நாடுகளுக்கு உரிமை கிடைக்கிறது எனலாம். தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம் என்பன இல்லை என்றால் அபிவிருத்தி என்பது அர்த்தமற்றது. அபிவிருத்தி என்பது எக்காலத்திலும் மேற்கொள்ளக் கூடிய ஒன்று. ஆனால் அனுபவித்து வந்த தமிழர் தாயகம்,தமிழ்த் தேசியத்தை இழந்தால் அப்பிரதேசத்தில் அபிவிருத்தி மேற்கொண்டாலும் கூட உரிமைப் பாதிப்பால் அங்கு அபிவிருத்தியை அனுபவிக்க முடியாமல் வேதனை நிறைந்த வாழ்க்கையாகத்தான் தமிழர்களுடைய வாழ்க்கை அமையலாம்.

அரசினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் இலங்கை முழுவதும் இருந்து பெறும் வரிகள், வெளிநாட்டு உதவிகள் மூலம் மேற்கொள்ளப்படுவதால் அதே வேளை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தியை மேற்கொண்டு ஓரம்காட்டாது சமநிலையில் அபிவிருத்தி செய்ய வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. எனவே வடக்கு - கிழக்கில் அபிவிருத்திக்காகப் பெரும்பான்மை சமூக கட்சிகளுக்கு சிறுபான்மையோரின் ஆதரவைப் பெற்ற அரசியல் கட்சி துணைபோக வேண்டும் என்பது காரணமாக அமையமாட்டாது. இலங்கை நாட்டின் பாகமாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அமைவதால் அதற்குரிய அபிவிருத்தியை அரசுபுரியவேண்டிய கட்டாயநிலை இருப்பதால் அபிவிருத்திக்காக அரசுடன் நிற்க வேண்டியுள்ளதென அரசுக்கு மறைமுகமாக உதவி நிற்பது அரசையும் அதேவேளை தன் இனத்தையும் ஏமாற்றும் மாபெரும் துரோகமான செயலாகும். அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர், தாயகம், தமிழ்த் தேசியம் என்ற உணர்வை மழுங்கடிக்கும் நோக்கத்துக்கு மானமுள்ள எத்தமிழனும் துணைபோக மாட்டார்கள் என்பதே தமிழ் சமூகத்தின் ஒட்டுமொத்த உணர்வாக அமையுமென்பதில் இருவேறுபட்ட கருத்து இருக்க் முடியாது.

தற்பொழுது எதிர்நோக்கும் நாட்டின் அபிவிருத்தியா? தேசியமா ? என்ற போட்டியில் அபிவிருத்தி அணி வெற்றியீட்டின் தமிழர்களுக்காக அவர்களின் உரிமைக்காக குரல் எழுப்பும் மேலைத்தேய நாடுகளும், இந்திய மாநிலமும் உறங்கிவிடும். அதன் பின் தமிழ்த் தாயகம்,தேசியம் மழுங்கடிக்கப்பட்டு விடும். தட்டிக் கேட்க முடியாத நிலை ஏற்பட்டு விடும். தமிழ்த் தாயகம் ,தேசியம் சார்பான அணி வடக்கிலும் கிழக்கிலும் வெற்றிபெறுமாயின் தமிழனுக்கு ஒரே இலங்கைக்குள் ஆனால் தன்னைத்தான் ஆளும் கௌரவமான பூரண

அருளம்பலம் இராஜரட்ணம் LLB
சிரேஷ்ட சட்டத்தரணி,
சட்டவிரிவுரையாளர்

அதிகார ஆட்சி அமைவதற்கு வெளிநாடுகளின் அழுத்தம் அமைய சாத்தியமுண்டு என்பதுடன் அபிவிருத்தியும் ஏற்பட வாய்ப்பிருக்கும் என்பதில் இருவேறுபட்ட கருத்தும் இருக்க முடியாது. நமது நாட்டு இரு தேசியங்கள் இருதாயகங்கள் இவை இரண்டும் ஒரே நாட்டுக்குள் இணைந்த அலகுகளாக ஒரு இலங்கைக்குள் யாப்பு ரீதியாக அரசியல் தீர்வு அமைவதன் மூலமே நீண்ட, நிரந்தர அமைதியான தீர்வு அமைய முடியும். எதிர்வரும் பொதுத் தேர்தல் முடிவே இதற்குப் பதிலாக அமையப் போகிறது. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன்

நிர்வாக இயக்குநர்

தொழிலதிபர்


# ஈ.சரவணபவன்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – TNA

# ஏப்ரல் 8 ஆம் திகதி

★ துப்பாக்கி அரசியலைத் துடைத்தெறிவோம்!

★ தமிழரின் அபிலாஷையை முரசறைவோம்!!



X

6 X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருபுறம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு; மறுபுறம் தேசியத்துக்கு எதிரான சக்திகள்!

## எந்த அணி தேவை என்பதை மக்கள் தீர்மானிப்பர் என்கிறார் சரா

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர் தலில் இரண்டு கட்சிகள் மட்டுமே போட்டியிடுகின்றன. ஒன்று- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டாவது - தமிழ்த் தேசியத்திற்கு எதிரான தீய சக்திகள் கொண்ட கட்சிகள். இந்த இரண்டாவது அணியில் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களுமாக 27 பிரிவுகள் உள்ளடங்குகின்றன. இந்த இரண்டு அணிகளில் தமது உரிமைகளை மீட்டெடுக்கின்ற - வென்றெடுக்கின்ற - தமக்காகக் குரல் கொடுக்கின்ற தகுதி எந்தக்கட்சியிடம் உண்டு என்பதைத் தமிழ் மக்களாகிய நீங்கள் தான் தீர் மானிக்க வேண்டும்.



- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஈ.சரவணபவன்.

அண்மையில் நவாலி, மற்றும் கொக்குவில் பிரதேசங்களில் நடைபெற்ற தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

### கோத்தபாயவின் பகற்கனவு

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்பதனாலும் - தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக கூட்டமைப் பினர் ஆகிவிடுவார்கள் என்பதனாலுமே கூட்டமைப்பை அரசு தடைசெய்ய வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார். தமிழ் மக்கள் ஜனநாயக நாட்டில் சகல சுதந்திரமும் அற்று பேரினவாதிகளுக்கு அடிமைகளாக வாழவேண்டும் என்பதே அவரது பகற்கனவாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளை மீட்பதற்காக ஆயுதம் தாங்கிப் போராடியவர்கள் விடுதலைப்புலிகளே. ஆனால், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு விடுதலைப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னரே அஹிம்சை ரீதியில் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காலத்தில் போராட்டங்கள் நடந்தன.

### சோரம் போகாத ஒரே கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே!

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக சிங்கள தேசத்திற்கு சோரம்போகாத ஒரே கட்சியாக எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே விளங்கி வருக்கின்றது. மக்கள் மத்தியில் எமக்குள்ள அமோக ஆதரவைச் சிதைப்பதற்காகவே அரசு திட்டமிட்டு பல கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் உருவாக்கியது. ஆயினும், மக்கள் போலி களைக் கண்டு ஏமாறமாட்டார்கள் என உணர்ந்த அரசு, இறுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்தால் தான் தமிழர்கள் ஒடுக்கப்பட்ட இனமாகத் திகழ்வார்கள் என்றும் - சிங்களவர் கூறுகின்ற அனைத்துக் கருத்துக்களுக்கும் தலையசைப்பார்கள் என்றும் எண்ணுகின்றது.

நாம் தமிழர்களின் உரிமைகளை மீட்பதற்கென்றே பிறந்தவர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இவர்கள் தடை செய்வதன் மூலம் மக்களுக்கான எமது குரல்வளையை நசுக்க இயலாது. நாம் பல்வேறு வடிவங்களில் - பல்வேறு கோணங்களில் - மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக - அவர்களின் அவலங்களை எடுத் துரைப்பதற்காக - எமது போராட்டங் களை முன்னெடுப்போம் என்று நான் ஆணித்தரமாகக் கூறுகின் றேன்.

தமிழ்மக்களாகிய நீங்கள் ஒன்றை நன்கு உணரவேண்டும். இன்று உங்களுக்கு, முன்பின் தெரியாத பல கட்சிகளும் பல சுயேச்சைக் குழுக்களும் உங்கள் உரிமைகளை மீட்டுத் தருவதாக வாக்குறுதிகளை அள்ளி வழங்கி தேர்தலில் போட்டியிடுகின்றன. ஆனால் ஏன் அவற்றை அரசு தடை செய்ய முற்படவில்லை? அவை அரச சார்புக் கட்சிகள். அரசு கிள்ளிக் கொடுப்பவையை மட்டுமே எந்தப் பேச்சும் இன்றி அவர்கள் பெறு வார்கள். ஆனால், நாம் அவ்வாறானவர்கள் அல்லர். தமிழர்களுக்கு நியாயமான - நீதியான - நேர்மையான - சுயநிர்ணயத் துடன் கூடிய தீர்வுக்காக என்றுமே நாம் குரல் கொடுப்போம். தமிழர்கள் இரண்டாந் தரப் பிரஜைகள் என்ற பெயர் நீங்கி, தன்மானத் துடன், கௌரவமாக வாழ்கின்ற ஒரு நிலைமை ஏற்படும் வரைக்கும் எமது போராட்டம் ஓயமாட்டாது என்பதை இங்கு உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன்.

### தமிழனைத் தமிழனே மிரட்டும் அராஜக அரசியலே நடக்கிறது!

முன்பு இராணுவத்தினரும் பொலிஸாரும் தமிழ் மக்களைத் துப்பாக்கி முனையில் மிரட்டி வந்தார்கள். தற்போது அந்த நிலை மாறி, தமிழனே தமிழனை துப்பாக்கியால் மிரட்டுகின்ற ஓர் அராஜக அரசியல் இங்கு அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. ஈ.பி.டி.பியினர் தமது கட்சி அலுவலகங்கள் உள்ள ஒவ்வொரு முகாம்களிலும் ஆயுதங்களை வைத்து மக்களை மிரட்டுகின்றனர். இவர்கள் ஒவ்வொரு பிரதேசங்களிலும் நிறுவியிருப்பது அலுவலகங்கள் அல்ல; முகாம்களே என்றுதான் கூறமுடியும்.

யாழ். குடாநாட்டில் தமிழ் மக்களின் பொதுச் சொத்தாக விளங்குகின்ற மண்ணை அதே மக்களின் நிலங்களில் இருந்து கள்ளத்தனமாக அகழ்ந்தெடுத்து அதே மக்களுக்கு 50 ஆயிரம் ரூபாவுக்கு கொள்ளை விலையில் ஈ.பி.டி.பியினர் ஒரு நிறுவனத்தின் பெயரிட்டு விற்கின்றனர். எமது சொத்தை நாமே அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலையில் தமிழர்களாகிய நாம் காணப்படுகின்றோம். இவை அனைத்திற்கும் முடிவுகட்டப்பட வேண்டும். ஈ.பி.டி.பியினரின் இந்தக் கடத்தல்களுக்கும், மிரட்டல்களுக்கும் மக்கள் தேர்தலைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சரியான தீர்வை வழங்குவார்கள். குடாநாட்டில் இருந்து இவர்களை விரட்டியடிப்பதற்கு மக்கள் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும்.

சிங்கள தேசம் எம்மை எந்த வகையில் ஒடுக்க நினைத்தாலும் நாம் ஒடுங்க மாட்டோம். மீண்டும் மீண்டும் எழுவோம் என்று கூறி, தமிழ் மக்களாகிய நீங்கள் உங்கள் வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங் குவதன் மூலம் கோத்தபாய உட்பட்ட 'ராஜபக்ஷ கம்பனிக்கு நல்ல பாடம் புகட்டுவீர்கள் எனவும் நான் நம்பு கின்றேன் - என்றார்.

# ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையிலான தீர்வுக்கு நாம் ஐக்கிய தேசியக் கட்சியை வலிறுத்துவோம்

## தமது நிலைப்பாட்டை விளக்குகிறார் முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன்

கேள்வி: எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தலில் நீங்கள் போட்டி யிடுவதன் நோக்கம் என்ன?

பதில்: எனது கண வர் மகேஸ் வரன் விட்டுச் சென்ற பணிகளை தொடர்வதற்காகவே நான் இந்தத் தேர்தலில் போட்டயிடுகின்றேன். எனது கணவர் தமிழ் மக்களுக்காகவே குரல் கொடுத்தார். குறிப்பாக குடாநாட்டு மக்கள் மீது அளவு கடந்தஅன்பு வைத்திருந்தார். குடாநாட்டு மக்கள் நாள் தோறும் துன்ப துயரங்களை சந்தித்த போது அவர் துடித்துப்போவார். தன்னால் இயன்ற சேவையினை குடாநாட்டு மக்களுக்கு வழங்க வேண்டும் என் பதில் அவர் குறியாக இருந்தார். தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தமையினாலேயே அவர் படுகொலை செய்யப்பட்டார். அவரின் கனவை நனவாக்கி மக்களுக்கு சேவை செய்வதற்காகவே நான் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றேன். எனது கணவர் செய்த சேவைகளை நான் குடாநாட்டு மக்களுக்கு தொடர்ந்து செய்வேன்.



கே: உங்கள் கணவர் மகேஸ்வரன் தமிழ் மக்களின் உரிமைக்காக அரசி யல் ரீதியான போராட்டங்களில் ஈடு பட்டவர். அத்தகைய பணியில் நீங் களும் ஈடுபடுவீர்களா?

ப: ஆம் நிச்சயமாக ஈடுபடுவேன். அவரது சேவைகளைத் தொடர்வேன் என்று முன் னரே நான் கூறியிருந்தேன். தமிழர்கள் பெற்றதைவிட, இழந்தவை தான் அதிகமாகவுள்ளன. இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் அரசியல் உரிமை விடயத்திலும் தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்தவர்களாவுள்ளனர்.

யுத்தத்தின் கொடூரமும் அவர்கள் பட்ட கஸ்ரங்களுமே இதற்கு காரணங்களாகும். பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாடப்பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். அதன் பின்னர் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இதற்காக அரசியல் ரீதியில் போராட்டங்களை நடத்த நானும் தயாராகவுள்ளேன்.

கே: தமிழர்களுடைய உரிமைகளை, அரசியல் அபிலாஷைகளை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுத்தரும் என்று நம்புகின்றீர்களா?

ப: ஆம் நிச்சயமாக பெற்றுத்தர முடியும். யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் தமிழ் மக்களுக்கு எத்தகைய அரசியல் தீர்வினையும் வழங்கும் நிலையில் அரசாங்கம் இல்லை. யுத்தம் முடிவடைந்து விட்டது. இனி என்ன தீர்வு என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளது. எனவே தமிழ் மக்களுடைய உரிமைகளை, அபிலாஷைகளை தரக்கூடிய கட்சியாக இன்று ஐக்கிய தேசியக் கட்சியே திகழ்கின்றது. 'தமிழ் மக்களின் உரிமைகள், அரசியல் அபிலாஷைகள் நிறைவேற்றப்படுமானால் யாழ். குடாநாட்டு மக்கள் எமக்கு உரிய ஆணையை வழங்க வேண்டும்.

கே: ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் தீர்வு இல்லை என்று ரணில் விக்கிரம சிங்க கூறியுள்ளார். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் தீர்வுகாண முடியாது என அவர் கூறவில்லை. ஒஸ்லோ பிரகடனத்தை விடுதலைப் புலிகளே முறித்தனர். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முறியடிக்கவில்லை என்றே அவர் கூறியுள்ளார். யாழ். குடாநாட்டு மக்கள் எதிர்வரும் 8ஆம் திகதி ஐக்கியதேசிய கட்சியின் சார்பில் மகேஸ்வரன் அணியில் போட்டியிடும் எம்மை பெரும்பான்மையாக நாடாளுமன்றம் அனுப்பினால் ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையிலான தீர்வுக்கு நாம் உரிய அழுத்தங்களைக் கொடுப்போம். அதிலிருந்து ஒரு போதும் பின்வாங்கமாட்டோம்.

கே: எதிர்வரும் தேர்தலில் நீங்கள் தெரிவு செய்யப்பட்டால் உங்கள் எதிர்கால நடவடிக்கை எப்படி அமையும்?

ப: நான் தெரிவு செய்யப்பட்டதும் மக்களுக்கான எனது சேவை தொடரும். குடாநாட்டில் வாழும் மக்கள் பெரும் அவலங்களை சந்தித்துள்ளனர். யுத்தத்தில் சிக்கி முகாம்களில் கஷ்டப்பட்டு மீள்குடியேற்றம் என்ற பெயரில் நடுத்தெருவில் விடப்பட்டுள்ள மக்களும் இங்கு வாழ்கின்றனர். எனினும் குடாநாட்டு மக்கள் எம்மை பெரும்பான்மையுடன் வெற்றிபெறச் செய்தால் தென்பகுதியில் ஆட்சி மாற்றம் ஏற்படும் நிச்சயமாகும். புதிய ஆட்சியில் தமிழ். மக்களுக்கு விமோசனத்தை ஏற்படுத்துவோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை சகல வசதிகளுடனும் மீள்குடியேற்றுவோம். மீள்குடியேற்றம் என்ற பெயரில் நடுத்தெருவில் விடப்பட்டுள்ள மக்களுக்கு உரிய வசதிகளை செய்து கொடுப்போம்.

யுத்தத்தின் போதும், பின்னரும் சரணடைந்த மற்றும் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் புனர்வாழ்வு எனும் பெயரில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை உடனடியாக விடுவிக்கப்படும். வலிவடக்கு உட்பட அதிபாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படும்.

கடத்தப்பட்டோர், காணாமல் போனோர் ஆகியோரை கண்டறிய ஆணைக் குழுவினை அமைப்போம். அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் வழிசமைப்போம்.

யாழ். குடாநாட்டில் வேலையற்ற இளைஞர், யுவதிகள், பட்டதாரிகள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்களின் வேலையில்லாப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்படும்.

இதனை விட குடாநாட்டு மக்களின் பிரச் சினைகளை தீர்க்க உடனுக்குடன் நடவடிக்கைகளை எடுப்பேன். அவசர காலச் சட்டமும் நீக்கப்படும். எனவே குடாநாட்டு மக்கள் சிந்தித்து வாக் களித்தால் நன்மையடையலாம்.

செய்தி: யாழ்.வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எம் உயிரைக் காப்பாற்றுங்கள்" என வன்னியிலிருந்து எழும் இடம்பெயர்ந்தோரின் குரல்

மேன்மை தங்கிய
மஹிந்த ராஜபக்ஷ,
ஜனாதிபதி,
அலரிமாளிகை,
கொழும்பு - 03.

02.05.2009

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு,

வன்னியில் எஞ்சியுள்ள இடம் பெயர்ந்த மக்களைக் காப்பாற்றுங்கள் என 01.05.2009 இல் என்னால் தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக மேலும் அறியத் தருவது யாதெனில், கனரக ஆயுதங்களை உபயோகிக்கக் கூடாதெனவும், துப்பாக்கியால் ஒரு பொதுமகனுடைய உயிர்தன்னும் பறிக்க அனுமதிக்கக் கூடாதெனவும் தாங்கள் இராணுவத்தினருக்குக் கொடுத்துள்ள அறிவுரை பாராட்டுக்குரியதாகும். இலங்கை இராணுவத்தினர் தற்போது மிகவும் கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஓர் அமைப்பாகும். போரிடுபவர்களான அவர்கள் ஏன் எதற்காக என்ற கேள்வியை எழுப்பாது கட்டளைக் கேற்ப செயற்பட்டு மாணிக்க வேண்டியவர்களே. மறுபுறம் அவர்கள் காயப்பட்டவர்களுக்கும் பலம் குன்றியவர்களுக்கும் மனிதாபிமான சேவைகளைச் செய்யும் வேறு பணியிலும் ஈடுபட்டுள்ளனர். ஐந்து வயதுப் பிள்ளை ஒன்றைக் காணாது தவித்த ஒரு தாயின் பிள்ளையை தேடிக் கண்டுபிடித்து அப்பிள்ளை அணிந்திருந்த அத்தனை நகைகளுடனும் அதன் தாயிடம் சேர்த்த ஒரு நல்ல போர் வீரனைக் காண்கின்றோம். பெருமளவில் வெளியேறிய மக்களின் துயர் துடைத்த போதே அவர்கள் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றார்கள். அவர்களில் பெண்கள், குழந்தைகளையும், நோயாளிகளையும், முதியோர்களையும் அக்கறையுடனும் மிக்க அன்புடனும் அனுசரித்து நடந்துள்ளனர். அவர்களின் பல தரப்பட்ட செயற்பாடுகளும் மிகவும் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

விடுதலைப் புலிகள் அரச படையினர் போன்று கட்டுப்பாட்டுடன் செயற்படுபவர்கள் அல்லர் என்பதை நீங்களும் ஒத்துக்கொள்வீர்கள். அவர்கள் யுத்த விதிமுறைகளுக்கு அமைவாக நடப்பார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது. இப்பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருப்பதாலும் பொது மக்களுடன் அவர்கள் பெருமளவில் கலந்து செயற்பட பெரும் வாய்ப்பிருப்பதாலும் பொது மக்களைப் பெருமளவில் பாதிக்காது, விடுதலைப் புலிகளை இராணுவத்தால் தாக்க முடியாது. இன்றைய நிலையில் விடுதலைப் புலிகளைத் தாக்குவார்களேயானால் பெருமளவு பொதுமக்கள் இறக்கவும், காயமடைவதற்கும் பெரும் வாய்ப்புண்டு. 27.04.2009 தொடக்கம் 01.05.2009 மாலை 4மணி வரை 170 அப்பாவிகள் கொல்லப்பட்டும், 951 பேர் காயமடைந்தும் உள்ளனர். அவர்களில் 181பேர் சிறு பிள்ளைகளாவர். ஒவ்வொரு தினமும் பாதிப்படைந்தவர்களின் எண்ணிக்கை விவரம் என்னிடம் உண்டு. இந்த எண்ணிக்கை ஆஸ்பத்திரிக்கு அனுமதி பெற்று இறந்த, காயமடைந்தவர்கள் சம்பந்தமானதே. வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முன்பு இறந்தவர்களின் எண்ணிக்கை இதில் அடங்காது. அத்தகையவர்கள் துவாயினால் சுற்றப்பட்டு புதைக்கப்படுகின்றனர்.



ஜனாதிபதி அவர்களே! இக் கொலைகளுக்கு யார் பொறுப்பாளிகள் என்பதல்ல பிரச்சினை. தாங்கள் விரும்புவது போல் துப்பாக்கியால் யாரும் உயிர் துறக்கக் கூடாது. மிகச் சிறிய அளவு பாதிப்போடு போரை நடத்தியவர்கள் என எடுத்த நற்பெயரை அவர்களே தமக்கு அபகீர்த்தி ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாது. விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் அகப்பட்டுள்ள அப்பாவி மக்களை வெளியில் பாதுகாப்பாகக் கொண்டு வர வேண்டுமானால், தங்களுக்குள்ள ஒரே வழி ஐக்கிய நாடுகள் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு ஸ்தாபனம் உள்ளே சென்று விடுதலைப் புலிகளோடு பேசி மக்களைப் பாதுகாப்பாக வெளியேறவும், அவர்கள் தமது ஆயுதங்களுடன் அரச படைகளிடம் சரணடையச் சம்மதிக்க வைப்பதுவுமே. மக்களின் குறைகளை எடுத்துக் கூற வேண்டிய கடமை எனக்கும், ஓர் உயிர்தன்னும் இழக்கப்படக்கூடாது, மக்களைப் பாதுகாப்பாக வெளியில் கொண்டுவர வேண்டியது உங்களின் கடமையுமாகும்.

பி.கு:-

நான் இக்கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கும் வேளை இன்று பகல் 12 மணிக்கு வந்த நம்பத்தகுந்த செய்திகளின்படி 07 ஷெல்கள் காலை 9 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையில் தாக்குதலுக்கு உள்ளான முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில் 64பேர் உயிரிழந்தும் மூன்று ஊழியர்கள் உட்பட 87 பேர் காயமடைந்தும் உள்ளனர். தயவு செய்து உடனடியாக, இலங்கை பிரஜைகள் என்ற காரணத்தால் இத்தகைய ஆபத்துக்களையெல்லாம் எதிர்கொண்டு தவிக்கும் அப்பாவி மக்களை வெளியில் கொண்டு வர வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவும், வெசாக் வாரமாகிய இவ் வாரம் இத்தகைய சம்பவங்கள் சர்வதேச சமூகத்துக்கு எம் நாட்டைப் பிழையாகப் பிரதிபலித்துக்காட்டும்.

நன்றி
வீ.ஆனந்தசங்கரி,
தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.

# பராமரிப்பின்றி தனிமையில் வாடும் முதியோர்கள்

மேன்மை தங்கிய
மஹிந்த ராஜபக்ஷ,
இலங்கை ஜனாதிபதி

29.05.2009

அன்புடையீர்,

நான் முன்னர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இதுவரை பல முதியோர்கள் பராமரிக்கக் கூடியவாறு உறவினர்கள் பொறுப்பேற்பதற்கு வசதி செய்யப்பட்டிருந்தது. இருந்த போதும் இன்னும் பலர் தனிமையில் வாடி வருகின்றனர். தம்மை இன்னார் என்று அறிவிக்க முடியாத வயது கடந்த நிலையும் தாண்டி அங்கு உயிர் வாழ்கின்றனர்.

இந்த நிலையில் அவர்கள் மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருக்கின்றார்கள். வசதி படைத்த அவர்களின் உறவினர்களும், பிள்ளைகளும் வெளிநாடுகளிலும் இலங்கையின் தூர இடங்களிலும் வசித்து வருவதாலும், அவர்களின் உறவினர்கள் இவர்களின் நிலையை அறிந்து கொள்ள இயலாமல் துயரப்பட்டுக் கொண்டுள்ளார்கள். முகாம்களில் ஒலிவாங்கியில் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களும் அவர்கள் செவியில் ஏறுவதில்லை. உணவினைப் பெற வரிசையில் நிற்க இயலாமல் படும் துன்பம் சொல்லில் அடங்காது. எனவே அவர்கள் தொடர்பான பெயர் விவரங்களை உடன் வெளியிடுவதுடன் தயவு செய்து தனியாக விடப்பட்டவர்களை ஒருங்கிணைக்குமாறும், தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தற்போது உங்களுக்கு இந்தக் கடிதத்தினை எழுதிக் கொண்டிருக்கும் போதும் எனக்குக் கிடைத்த தகவலின்படி தனது மைத்துனரை இராமநாதன் முகாமில் சந்திக்க பிரான்ஸில் இருந்து வந்த 55 வயதுடைய வைரமுத்து செல்வராசா என்பவர் 27.05.2009 கொழும்பில் இறந்துவிட்டார் என்பதனையும் தங்களுக்கு வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இது போன்ற சம்பவங்கள் நிறைய நடந்து கொண்டிருக்கின்றன. இவை துயரப்படும் மக்களின் துயரத்தை மேலும் மேலும் அதிகரிப்பனவாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் 66 இனங்காண இயலாத வயோதிபர்களின் சடலங்கள் வவுனியா, பூந்தோட்டம் மயானத்தில் அனாதைப் பிணங்களாகப் புதைக்கப்பட்டன. இது போன்ற சிரமங்களைத் தவிர்ப்பதற்கும் இவ்வாறானவர்களை உடன் அடையாளம் காண ஏற்பாடு செய்யுமாறும், பிரேத அறை ஒன்றை உடன் ஏற்பாடு செய்யுமாறும் நான் உங்களுக்கு முன்னர் விடுத்த வேண்டுகோளையும் தயவு கூர்ந்து கவனத்தில் எடுக்குமாறும் பணிவுடன் வேண்டி நிற்கிறேன்.

நன்றி
வீ.ஆனந்தசங்கரி,
தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி

தமிழர் விடுதலைக் கூட்டணி
(சி/566335)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழர்களின் தீர்ப்பை அனைத்துலகம் அவதானிக்கிறது

நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தல் தமிழர்களின் பல ஆண்டுகால அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வையும் தராது என்பதனாலேயே வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்கள் தேர்தலில் எவ்வித அக்கறையும் செலுத்துவதில்லை. அப்பகுதிகளில் நடைபெறும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்கு - குறிப்பாக வடமாகாணத்தில் - மக்களின் வருகை மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது.

தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு அரசினால் முன்வைக்கப்படும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. வெளிநாடுகள் இவ்விடயத்தில் சிறிலங்கா அரசுக்குப் பல அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன. ஆனால் தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் காட்டப்படும் தீவிரம், அவலத்திற்கு உள்ளான தமிழர்களின் மீள்குடியேற்ற விடயத்திலோ நிரந்தர தீர்வு காண்பதிலோ காட்டப்படுவதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் காரணமாகவே தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியவில்லை என இலங்கை அரசு கூறிவந்தது. ஆனால் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு ஒரு வருடமாகப் போகும் நிலையிலும் அரசின் மௌனம் இன்னமும் கலையவில்லை.

அயர்லாந்து மக்கள் நீதிமன்றத்தில் சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இடம்பெற்ற வழக்கு விசாரணையின் முடிவில் வழங்கப்பட்ட தீர்ப்பில், சமாதான பேச்சுக்கு நடுவன் வகித்த இணைத் தலைமை நாடுகள் தம் கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டன எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச் சாட்டுக்கு எதிராக இணைத் தலைமை நாடுகள் எதிர் கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கவில்லை.

மாறாக சாமாதானப் பேச்சுகளில் நம்பிக்கை வைத்திருந்து, பின்பு பாதிக்கப்பட்ட தாயகத் தமிழர்களுக்கு எவ்வகையில் உதவலாம் என்பது குறித்து அந்த நாடுகள் கவனம் செலுத்தியுள்ளன. இதனால் தமிழர் தொடர்பில் உலகின் நிலையில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன.

தமிழர் தரப்பில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அவை தேர்ந்தெடுத்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனித்துள்ள நிலையில், தமிழீழத் தேசியத் தலைவரால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவே தமிழரின் சுயநிர்ணய உரிமைக்கு அந்நாடுகள் உதவ முன் வந்துள்ளதை தமிழ் மக்கள் மிகக் கூர்மையாக அவதானிக்க வேண்டும்.

தமிழர்களினால் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழர்களினால் - தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர்களின் ஒரே கட்சியாகிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ் வாக்காளர்கள் நிலைநிறுத்த வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் மிகுந்த தூரநோக்கோடு சிந்தித்து தாயக மக்கள் இம்முடிவை எடுத்தேயாக வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மியான்மர் நாட்டு சர்வாதிகார ஆட்சியை நெருங்கிவிட்டது என முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். உலகிலுள்ள சகல மனித உரிமை அமைப்புகளும் அரசின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்துள்ளன. முக்கியமாக நாட்டின் கருத்துச் சுதந்திரத்திற்கே பங்கம் ஏற்பட்டுள்ளதாக பல நாடுகளே சிறிலங்காவை விமர்சனம் செய்துள்ளது.

தமிழர்களின் இருப்பு என்பது சிறிலங்காவில் பலத்த சந்தேகத்திற்கு இலக்காகியுள்ளது. அவர்களை அடிமைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற நடவடிக்கைகளே வெகு வேகமாக எடுக்கப்படுகின்றன. வடக்கையும்

## சுயநிர்ணய் உரிமையை உறுதிப்படுத்துவதே இன்றைய அவசிய - அவசர தேவையாகும்

- கிழக்கையும் முற்று முழுதாக சிங்கள மயமாக்குவதில் மிகத் தீவிர முயற்சிகளை அரச நிர்வாக இயந்திரங்களே நடத்தி வருகின்றன.

தாயகத் தமிழரின் பாரம்பரிய சின்னங்களை அகற்றுவதில் அரசாங்கம் நேரடியாக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தமிழ்க் கிராமங்கள், நகரங்கள்,கலாசார, அரசியல் நினைவுச் சின்னங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. நூற்றுக்கணக்கான சான்றுகளை அதற்கு ஆதாரமாக நாம் இங்கு குறிப்பிட முடியும். உதாரணத்திற்குக் குறிப்பிடுவதாக இருந்தால் திருகோணமலையில் சோழர்களால் நிறுவப்பட்ட கல்வெட்டு இன்று இல்லை. குளக்கோட்டன் கட்டிய குளத்தின் பெயரே மாற்றப்பட்டுள்ளன.

தமிழரின் வீரத்தை பறைசாற்றும் பண்டாரவன்னியனின் சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளது. உண்ணாநோன்பிருந்து தமிழ் மக்கள் நலனுக்காக உயிர்நீத்த மிகப் பெரிய மாவீரன் திலீபனின் நினைவுத் தூபி அழிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் தெருத் தெருவாக சிங்களவர்கள் தற்காலிக கடைகளைக் கட்டி வர்த்தகம் செய்ய ஆரம்பித்துள்ளார்கள்.

நயினாதீவில் நாகபூசனி அம்பாள் ஆலயம் பல நூற்றாண்டுகால சரித்திரம் கொண்டது. ஆனால் அங்குள்ள நாகவிகாரை அமைந்துள்ள பகுதியை புனிதப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது அரசாங்கம். விரைவில் அங்கும் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் தீவிர சிங்கள குடியேற்றங்கள் இப்போதும் நடைபெறுகின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் சிறிலங்காவின் முழுத் தமிழினமும் வளமின்றி வாழ்விழந்து போய் நிற்கையில் தேர்தல் அவசியமா என்ற நிலைஎழுந்துள்ளது. நேர்மையான, நீதியான, ஜனநாயகவாதிகளாக இருந்தால் தமிழரின் அடிப்படை பிரச்சினைகளை நீக்கி, அவர்களின் வாழ்வை வளம் பெறச் செய்து, இழந்த அவர்களின் மகிழ்வான வாழ்வை மீண்டும் கட்டியெழுப்பிவிட்டு தேர்தலை அறிவித்திருக்க வேண்டும்.

அதைவிடுத்து வீதிகளை திறப்பதும், தீவுப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதும் நிதி ஒதுக்கப்படாத கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுவதும் பாலங்களை திறப்பதும் நிச்சயமாக இழக்கப்பட்ட தமிழரின் வாழ்வை மேம்படுத்தாது. தமிழர்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள் என்றும் மூன்று இனமும் மகிழ்வாக உள்ளார்கள் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து தமிழர்கள் மீட்கப்பட்டுள்ளார்கள் என்றும் கொச்சைத் தமிழில் உளறுவதன் மூலம் தமிழர்களை ஏமாற்றிவிடமுடியாது.

சிறிலங்காவில் தமிழர் பிரச்சினையை ஜனநாயகப் போராட்டங்கள் மூலம் முன்னெடுத்துச் செல்ல முடியாது. ஏனெனில் சகல ஜனநாயக நடவடிக்கைகளும் வலுவிழந்து போயுள்ளன. எனவே வெளிநாடுகளின் உதவியுடன் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்துவதே இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களால் எடுக்கப்படவேண்டிய அவசியமும் அவசரமுமான நடவடிக்கையாகும்.

அதற்காகவே தமிழர்கள் ஓரணியில் நின்று தம் நிலைப்பாட்டை உலகுக்கு அறிவிக்கவேண்டியுள்ளது. அந்தவகையில் மாத்திரமே தமிழர்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கக் கடமைப்பட்டுள்ளனர். வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள 22 தமிழ் தொகுதிகளிலும் போட்டியிடும் ஒரே தமிழர்களின் கட்சியாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதின் மூலம் அந்தக்கடமை நிறைவேற்றப்படும் என்பதில் தமிழ் வாக்காளர்கள் நம்பிக்கை கொள்ளலாம்.

வேட்பாளர் பட்டியலில் தம் பெயர் இடம்பெறவில்லை என்ற காரணத்திற்காக திடீரென உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு வாக்களிப்பதனால் எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை. அதேபோன்று சிறிலங்கா அரசினால் போட்டிக்கு நிறுத்தப்பட்டுள்ள சுயேச்சை குழுக்கள் தமிழ் மக்களின் வாக்குகளை பிரிப்பதற்கான நோக்கம் கொண்டவை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் களமிறக்கப்பட்டுள்ள சிறிலங்கா அரசின் வெற்றிலைச் சின்னத்துடனான கூட்டணியை வடக்கில் மாத்திரமல்ல கிழக்கிலுள்ள தமிழர்களும் முற்றாக நிராகரிக்க வேண்டும். விகிதாசார தேர்தல் முறைமை என்பதனால் 5 சதவீத வாக்குகளைப் பெற்றால் அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளர் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகிவிடுவார். எனவே அரசுக்கூட்டணிக்கு மாத்திரமல்ல வேறு எந்தக் கூட்டணிக்கும் அனுதாப ரீதியிலேனும் தமிழர்கள் வாக்களிப்பதை முற்றாகத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பற்றி தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூல் நிலையமாக விளங்கிய யாழ். பொது நூல் நிலையத்தை முற்றாக எரித்து சாம்பலாக்கிய ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ்க் கூறும் நல்லுலகம் என்றும் மறந்துவிடத் தயாராக இல்லை. எனவே அந்தக் கட்சியின் சார்பில் யார் போட்டியிட்டாலும், தமிழர்கள் அதற்கு வாக்களிக்கமாட்டார்கள்.

**வீ.ஆர்.வரதராஜா (ஜேர்மனி)**


யாழ். மாவட்டத்தில் உள்ள ஒன்பது வேட்பாளர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளே தெரிவாகவேண்டும். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில் ஜனநாயக ரீதியான போராட்டம் தொடர்கின்றது. அதனால் தமிழ்மக்கள் வாக்களிப்பை புறக்கணிக்காது ஒட்டுமொத்தமாக வாக்குகளை பயன்படுத்தும் போது இந்த இலக்கை நாம் அடையமுடியும்.

அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை மாவட்டங்களிலும் தமிழ் மக்கள் தம் நிலைப்பாட்டை முழுமையாக உலகத்துக்கு தெரிவிக்க வேண்டும். குறிப்பாக அம்பாறை திருகோணமலை மாவட்டங்கள் மிக முக்கிய கவனத்திற்குரியன. அனைத்து தமிழ் மக்களும் ஒரே அணியில் நின்று தமிழ்த் தேசியகூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் சர்வதேச நாடுகள் தமிழர் பிரச்சினையில் தலையிட உரிமை உண்டு என்பதை வெளிப்படுத்துகிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்-2010

## தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
## (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)



1 Dr.கந்தசாமி திருலோகமூர்த்தி



2 கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்



3 நடேசு துரைராஜா



4 நாகலிங்கம் குழந்தைவேலு



5 பத்மினி சிதம்பரநாதன்



6 பிரான்சிஸ் வின்சென்ற்டீ போல்



7 கலாநிதி கெனடி விஜயரட்ணம்




8 விஸ்வலிங்கம் மணிவண்ணன்



9 சந்தனம் ஸ்ரீபன்



10 சின்னத்துரை வரதராஜன் (முதன்மை வேட்பாளர்)



11 செல்லத்துரை சுப்பிரமணியம்



12 செல்வராஜா கஜேந்திரன்

கொள்கைக்காக
உறுதியான
ஒற்றுமையைக்
கட்டியெழுப்புவோம்!
பாதை மாறிய பயணத்தை
நிராகரிப்போம்.
தமிழ்த் தேசியத்தின்
கொள்கையில்..

# அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்கிறவன் கேணையனாக இருந்தால் கேள்வரகில் நெய்வடியுமென்பார்கள்

- மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை தெரியாதவர்கள், தமிழர் தாயகத்தின், தமிழர் தேசியத்தின் பாதுகாவலர்களாம்.
- அலரி மாளிகையில் ஆளும் கட்சியின் அங்கத்துவ அட்டைகளைப் பெற்றுக்கொண்ட திருகோணமலை வேட்பாளர்களே தமிழ் தேசியத்தின் பாதுகாவலர்களாம்.
- 2009 மே 19 இன் பின்னர் ஜனாதிபதியைப் பார்த்து பாவ மன்னிப்புக் கேட்ட பத்மினிகளும், தனது தம்பிமாரைப் பாதுகாக்க கோத்தபாயவின் காலில் விழுந்து சரணடைந்த கஜேந்திரன்களும் தமிழ் தேசியத்தின் பாதுகாவலர்களாம்.
- மாவிலாறு தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்பட்ட பொழுதும், பாராளுமன்றத்தில் இறுதிவரை வாயே திறக்காத கஜேந்திரகுமார் தமிழ் தேசியத்தின் பாதுகாவலராம்.
- பத்மினிக்கும், கஜேந்திரனுக்கும் இரண்டு பாராளுமன்ற ஆசனங்களைக் கொடுத்தால் கூட்டமைப்பினர் தமிழ் தேசியத்தின் காவலர்களாம், கொடுக்காததால் அவர்கள் தேசியத்தைக் கைவிட்டவர்களாம்.
- கூட்டமைப்பின் ஐந்து தலைமை உறுப்பினர்களில் 4 பேரும் ஐந்தாவது உறுப்பினர் கஜேந்திரகுமாரின் கட்சித் தலைவரும் ஏற்றுக்கொண்ட தீர்வை கஜேந்திரகுமாரை ஏற்றுக்கொள்ளச் சொன்னது சர்வாதிகாரமாம். தான் சொன்ன கருத்தை ஏனைய நால்வரும் அவரது கட்சித் தலைவரும் ஏற்றுக்கொள்ளாதது ஜனநாயகப் பிறழ்வாம்.
- வட - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் அவர்களுக்குரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி அரசியலமைப்பு அடிப்படையிலான சுயாட்சி அரசொன்று நிறுவப்படவேண்டும் என கூட்டமைப்பு சொல்வது பிழையாம். ஆனால் தனிநாடா, இரு நாடுகளின் கூட்டா அல்லது வேறு தீர்வா என்று சிந்திக்க முடியாத தாம் சரியான பாதையில் போகின்றார்களாம்.
- தமிழ் அரசியலில் 50 வருட அனுபவம் கொண்ட சம்பந்தனும், மாவையும், 35 வருட அனுபவம் பெற்ற சுரேசும், மிக நீண்ட கால அனுபவம் பெற்ற செல்வம் அடைக்கலநாதனும் பேசும் தேசியமும், சுயநிர்ணய உரிமையும், பிழையானதாம். நேற்று வந்தவர் வட - கிழக்கை பற்றி தெரியாதவர், அனுபவம் அற்றவர், கொழும்பிலும், இங்கிலாந்திலும் வாழ்ந்தவர், போராளியாகவோ வேறு வகையிலோ அரசியலில் ஈடுபடாதவர், புலிகளின் உதவியால் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார்தான் சரியான பாதையைக் காட்டும் தத்துவார்த்த தலைவராம்.
- 30 வருடங்களாக விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியாக இருந்து பல்வேறு பேச்சுக்களில் கலந்து கொண்டு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி அரசொன்றை உருவாக்கவேண்டுமென்ற சிங்கள அரசாங்கத்துடன் ஒஸ்லோவில் உடன்பாடு ஒன்றைக் கண்ட அன்ரன் பாலசிங்கம் பிழையான தத்துவாசிரியராம், அதே வழியில் பயணம் செய்யும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பிழையானதாம், கஜேந்திரகுமார் மாத்திரமே தமிழ் மக்களுக்கு சரியான வழிகாட்டும் தலைவராம்.

**கேட்கிறவன் கேணையனாக இருந்தால் கேள்வரகில் (குரக்கன்) நெய்வடியுமென்பார்கள்.**
(இது ஓர் தமிழக பழமொழி)

**கஜேந்திரகுமார் குழுவுக்கு தமிழ் மக்கள் எல்லாம் கேணயர் போல்,**

**எனவே எம் இனிய தமிழ் உறவுகளே!**

**மக்களைக் குழப்பி குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயலும் குழுக்களின் சுவடுகளைத் துடைத்தெறிவோம்.**

***தமிழ் மக்களின் உரிமைக்குரலான தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு சிந்தாமல் சிதறாமல் எம் வாக்குகளை அளித்து ஒன்பது ஆசனங்களையும் வெல்ல வைப்போம்.***


1
அப்பாத்துரை விநாயகமூர்த்தி


2
பொ.ஐங்கரநேசன்


3
சுரேஷ் க. பிரேமச்சந்திரன்


4
ஆ.ந.இராசேந்திரன்


5
இரா. சிவச்சந்திரன்


6
ஈ.சரவணபவன்


7
க.அருந்தவபாலன்


8
மாவை. சேனாதிராசா


9
மு.றெமீடியஸ்


10
சி.சிறீதரன்


11
சீ.வீ.கே. சிவஞானம்


12
எஸ்.எக்ஸ். குலநாயகம்

இலங்கை தமழரசு கட்சி

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தல் - 2010

## யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

X 7



பிறந்த திகதி:- 08.11.1947
பிறந்த இடம்:-
மானிப்பாய், கிறீன் வைத்தியசாலை.
கல்வி:- ★ இராமகிருஷ்ணமிசன் சைவ வித்தியாசாலை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
★ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
★ சட்டக் கல்லூரி, கொழும்பு.
E.mail krissaravanan@btinternet.com
தொழில்:- கணித, விஞ்ஞான ஆசிரியர்
★ நாமகள் வித்தியாசாலை, கொக்குவில். (1971&1972)
★ முஸ்லிம் மகா வித்தியாசாலை, குருநாகல்.
★ சட்டத்தரணி - 33 வருடங்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, இங்கிலாந்து.

## கிருஷ்ணபிள்ளை ஸ்ரீ சரவணபவான்

★ அரசியல் கைதிகளை விடுதலை செய்ய...
★ முட்கம்பி வேலிக்குள்ளும், முகவரி தெரியாத சிறைக்குள்ளும் உள்ள இளைஞர்களையும் யுவதிகளையும் விடுதலை செய்ய...
★ அகதிகளைத் துரிதமாக மீள்குடியேற்றி, புனர்வாழ்வு அளித்திட.....
★ இராணுவ உயர் பாதுகாப்பு வலையத்தை அகற்றிட.....
★ நீதியான சமாதானத்தையும் நிரந்தர அரசியல் தீர்வையும் பெற்றிட...

**ஆதரிப்போம் சட்டத்தரணி கி.ஸ்ரீ சரவணபவான் அவர்களை**

மாண்புமிகு ஜனாதிபதியுடன் சட்டக் கல்லூரியில் கல்வி கற்றவர் என்ற ரீதியில், அவருடன் நேரடித் தொடர்பு ஏற்படுத்தி வேலை வாய்ப்பு, தடுப்புக் காவலில் உள்ளோரை விடுதலை செய்தல், பாதுகாப்பு வலையக் காணிகளை மீட்டெடுத்தல் போன்ற விடயங்களையும் நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்வை ஏற்படுத்தலாம்.

## மாண்புமிகு ஜனாதிபதியின் வேட்பாளர்கள்

7 X 5 1

பிரித்தானிய இலங்கைச் சட்டத்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைக் கட்சிகளை இணைத்து விரைவில் பரந்துபட்ட கட்டமைப்பு

## தேர்தலின் பின் முன்னெடுக்கப்படும் என்கிறார் மாவை

**இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப் பகுதியில் தமிழ் மக்களின் பெரும் சக்தி என்று கருதப்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு சவால்களுடன் தேர்தல் போராட்டத்தை எதிர்கொள்கிறது. பேரினவாத அரசாங்கத்தின் தாக்குதல்கள், சூழ்ச்சிகள், தந்திரங்கள் எனப் பல நடவடிக்கைகளை எதிர்கொண்டுவருகிறபோதும்., உள் முரண்பாடுகள், இறுதிநேர தேர்தல் கால வெளியேற்றங்கள், அவைகளினால் ஏற்பட்ட வாதங்கள் எல்லாவற்றையும் எதிர்கொண்டபடி வடக்கு, கிழக்கின் - தமிழ் ஈழமக்களின் ஜனநாயகச் சக்தியாக நிமிர்ந்து நிற்கிறது. இவ்வாறான சூழலில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ்தேசியக் கூட்ட மைப்பின் பொதுச்செயலாளர் மாவை. சேனாதிராஜாவை தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இறுதி நேரத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய வேலைகள் அதற்கு அடுத்த கட்டமாக வரும், எதிர்காலத் திட்டங்கள் என்பன குறித்து சிறிய உரையாடல் ஒன்றை நடத்தினேன்.**



**கேள்வி:** இந்தத் தேர்தலில் என்ன மாதிரியான சவால்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்கொள்ளுகிறது? அவை தமிழ் மக்களின் வாழ்வுப் போராட்டத்தில் எவ்வகையில் மோதுகின்றன?

**பதில்:** நாங்கள் எங்களுடைய தேசிய இனம் என்ற அடையாளத்தை இழப்பதா? சுயநிர்ணய உரிமை என்ற தத்துவத்தை இழப்பதா? என்ற கேள்விகளுடன் சவாலுடன் இருக்கிறோம். மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இன்றுவரை ஒரே நாடு ஒரே மக்கள் என்று சொல்லுவதன் அர்த்தத்தை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதனுடைய மறுபக்கம் சொல்லுவது என்னவெனில் இந்த நாடு ஒற்றை ஆட்சிக்குள் பௌத்த சிங்கள நாடாக ஆக்கப்படும் என்பதுதான் அவருடைய மஹிந்த சிந்தனையாக இருக்கின்றது. மஹிந்த சிந்தனையை அவருடைய நிகழ்ச்சித் திட்டத்தை அவர் இன்று நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறார். இன்று கிழக்கு மாகாணத்தை தனிமைப்படுத்தி தமிழர்களின் தாயகத்தை தனிமைப்படுத்தி கிழக்கை இன்று இராணுவ மயமாக்கி சிங்கள மயமாக்கி தன்னுடைய பொம்மை ஆட்சி ஒன்றை அங்கு அமைத்திருக்கிறார். அதேபோன்ற நிகழ்ச்சித் திட்டத்தைத்தான் வடக்கிலும் அவர் நிலை நாட்ட இந்தத் தேர்தலை பயன்படுத்துகிறார். அப்படி அவர் எடுக்கின்ற முயற்சிகளில் முதலில் புலிகளைதான் தோற்கடித்து விட்டேன் என்று சொல்லிக் கொண்டு அந்தப் பிரேதசத்தை இராணுவ மயப்படுத்தும் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். தமிழர்களின் நிலங்கள் வர்த்தக ரீதியாக விற்கப்படுகின்றன. எங்களுடைய நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இராணுவக் கட்டமைப்புக்களை விரிவடையச் செய்ய சீனா இந்த அரசாங்கத்திற்கு பெரியளவில் உதவி வருகிறது. அதைவிட பொலிஸ் கட்டமைப்புக்களை ஏற்படுத்துவதன் வாயிலாக இராணுவ, பொலிஸ் குடியிருப்புக்களை வடக்கில் குறிப்பாக வன்னியில் ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

அதைவிட தமிழர்களின் கலாசார சின்னங்கள் அழிக்கப்பட்டு வருவதையும் நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது. பௌத்த கலாசாரத்தை திணிப்பதற்கு முயற்சிப்பதையும் நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது. இவைகளால்தான் நாங்கள் ராஜபக்ஷ அரசுமீது குற்றம் சுமத்தக் காரணமாக இருக்கின்றன. வரலாற்று புகழ் பாரம்பரியம் மிக்க தமிழ் தேசிய இனத்தினுடைய அடையாளத்தை அழித்து விட்டு அவர்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தை அழித்துவிட்டு அவர்களை ஒரேமக்கள் ஒரே நாடு என்று சொல்ல வைக்க முயற்சி செய்கிறார். அதற்கும் பலர் இணங்கிப் போக தயராக இருக்கிறார்கள். இதிலிருந்து எம்மை மீட்கப் போகிறோமா இல்லையா? என்பதுதான் எமக்கு உள்ள சவால். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமா இல்லையா? இந்த நிகழ்ச்சித் திட்டத்தை தடுத்தி நிறுத்தி தமிழர்களுடைய தாயகத்தை தமிழர்கள் தங்களை ஆளும் சுயநிர்ணய உரிமையுடைய ஆட்சியை உருவாக்கும் வழியைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோம். அல்லது விரைவில் தமிழர்கள் சிங்களவர்களாகவும் பௌத்தர்களாகவும் எங்களுடைய தேசம் பௌத்த சிங்கள தேசமாகவும் இராணுவ அடித்தளத்தை கொண்டு கட்டப்படுவதற்கான வேலைகள் நிறைவேற்றப்படும். இவைகளை தடுத்துநிறுத்த தமிழர்கள் இந்தத் தேர்தலில் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாக்களிக்க வேண்டும். அதுதான் எமது பலம் மிக்க ஜனநாயக சக்தியாக இன்று இருக்கின்றது. அதன் மூலம் கொள்கைப்பற்றையும் லட்சியப்பற்றையும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துவதன் மூலம்தான் மஹிந்த ராஜபக்ஷவினுடைய மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித் திட்டத்தை நாங்கள் முறியடிக்க முடியும்.

மஹிந்தவினால் ஊக்கப்படுத்தப்பட்ட உதிரிக் கட்சிகள் பெருமளவு உதவி செய்யப்பட்ட சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றை இறக்கி தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தவும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யவும் தான் விரும்பிய பொம்மைகளை உருவாக்கி கிழக்கைப் போன்று வடக்கையும் தான் ஆட்சி செய்ய வேண்டும் என்று தன்னுடைய மஹிந்த சிந்தனையை நிறைவேற்றவேண்டும், திணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு நாங்கள் முடிவு கட்ட வேண்டும். நிராகரிக்க வேண்டும்.

**கேள்வி :** தமிழ் தேசியக் கூட்டமைப்பு அடுத்த கட்டமாக யாருடன் எந்த நிலையிலிருந்து பேச்சுவார்த்தையை நடத்த இருக்கிறது?

**பதில்:** சுயநிர்ணய தத்துவத்தின் அடிப்படையில் எங்களை நாங்களே ஆள விரும்புகின்றோம் என்ற அந்த அடிப்படையில் தான், நாங்கள் சிங்கள தேசத்துடன் பேச்சுவார்த்தை நடத்த ஆயத்தமாக இருக்கின்றோம். விடுதலைப் புலிகளின் போராட்டம் இன்று சர்வதேச ரீதியாகவும் இலங்கையிலும் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. அதிலிருந்து மாறி நாங்கள் ஜனநாக பலத்தை அடையும் பொழுது எங்கள் ஜனநாயக பலத்தை அழிக்க அரசாங்கம் முனைகிறது. விடுதலைப் புலிகளை நாங்கள் அழித்து விட்டோம். தமிழர்களின் குரல் இனி இல்லை. தமிழர்களின் உரிமைக்குரல் இல்லை என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் தோற்றுவிக்கப்பார்க்கிறது. அதை முறியடித்து அரசாங்கத்தை நாங்கள் எதிர்கொண்டு பேச்சு நடத்த வேண்டும்.

ராஜபக்ஷவினுடைய மஹிந்த சிந்தனையை நிராகரித்து தமிழ் மக்கள் தங்களுடைய தனித்துவத்தையும் தங்களுடைய தன்னாட்சித் தத்துவத்தையும் தங்கள் தாயக சுயநிர்ணய உரிமை அடிப்படைக் கோட்பாட்டையும் நிலைநாட்டுவது ஒன்றுதான் அவர்களது இலக்கு என்பதை இந்தத் தேர்தலில் நிரூபிக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் நாங்கள் பேச வேண்டி உள்ளது. அல்லது நாங்கள் தமிழர்கள் என்ற அடையாளத்தை இழந்தவர்களாக தமிழர்களினுடைய தாயகத்தை இழந்தவர்களாக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை இழந்தவர்களாக தன்னாட்சி தத்துவங்களையும் இழந்தவர்களாக மாற்றப்படும் சூழல் உருவாகும் என்பதினால் ஒரு வாக்கையும் சிறதவிடாமல் உதிரிகளையும் இதர சுயேச்சைகளையும் நிராகரித்து விட்டு எங்களுக்கு வாக்களியுங்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துங்கள் என்று கேட்கிறோம். அதன்பின்னர் தமிழ் மக்களுக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பலமிக்க சக்தியாக அரசுடனோ சர்வதேசத்துடனோ பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த முடியும்.

**கேள்வி :** நீங்கள் முன் வைத்திருக்கும் தீர்வு ஒஸ்லோ உடன்படிக்கையின் அடிப்படையிலா தயாரிக்கப்பட்டது? தீர்வுத் திட்டத்தினுடைய அடைவு எதை நோக்கியதாக இருக்கிறது?

**பதில்:** ஒஸ்லோ உடன்படிக்கை என்பது ஒரு தீர்வு அல்ல. அது தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கான ஆரம்பமான வழிகாட்டிதான். தமிழ் மக்களிடம்தான் இறைமை இருக்கிறது. அவர்களிடம்தான் சுயநிர்ணய உரிமை இருக்கிறது. அவர்கள் எதிர்கால அரசியல் தீர்வுத் திட்டத்தை முடிவு செய்வார்கள். அது பேச்சுவார்த்தையின் பொழுது முடிவு எடுக்கப்படும். அப்படி எடுக்கப்படும் முடிவானது மீண்டும் தமிழ் மக்களிடம் முன்வைக்கப்படும். நாங்கள் 1976ஆம் ஆண்டில் ஓர் ஆணையைப் பெற்றிருக்கிறோம். அது வட்டுக்கோட்டை பிரகடனத்திற்காக முன்வைக்கப்பட்டிருந்தது. அந்த ஆணை 77 இல் பெறப்பட்டது. ஒஸ்லோ உடன்படிக்கை அடிப்படையில் தீர்வுத் திட்டம் வருமாக இருந்தால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டால் அதை மக்கள் முன் வைப்போம்.

இதில் இரண்டு தேசம் என்று சொல்லிக் கொண்டு நாங்கள் இதற்குள் ஒரு மறைவை வைக்க விரும்பவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் இரண்டு தேசம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதை இறைமை உள்ள மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். சிலவேளை இரண்டு தனித் தனித் தேசங்களாகவும் இருக்கலாம். அதற்கான சாத்தியங்களை நிராகரிக்கவில்லை. அதனை மக்கள் தீர்மானிப்பர். ஏனென்றால் இறைமை மக்களிடம் தான் இருக்கிறது. அது தேசத்திடம் அல்ல. மக்கள்தான் அரசாங்கத்திற்கு இறைமையை வழங்கலாம். தேசத்துக்கு வழங்கலாம். மக்களின் இறைமையை அரசாங்கத்திடம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. மக்களிடம்தான் இறைமை இருக்கிறது என்று நாங்கள் சொல்லுகிறோம். நாங்கள் அரசியல் தீர்வுக்கான அடிப்படையைத்தான் தோற்றுவித்திருக்கிறோம்.

**கேள்வி :** தேர்தல் சில நாள்களில் முடிவடையப் போகிறது. தேர்தலின் பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ன மாதிரியான வேலைகளை செய்யப் போகிறது? அரசாங்கத்தை அது என்ன வகையில் எதிர்கொள்ளப்போகிறது?

**பதில்:** தமிழ் தேசியக் கூட்மைப்பு தன் எதிர்கால திட்டத்தை தெளிவாக தேர்தல் அறிக்கையில் வரைந்திருக்கிறது. உடனடியாக எமது மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு தேவைப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டு ஓர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான அவசியம் இருந்தது. 2004இல் இருந்த நிலைமையைவிட பல மடங்கு மிக மோசமான நிலையில் இப்பொழுது மக்கள் இருக்கிறார்கள். அதனை யடுத்து சர்வதேச நாடுகளின் உதவிகளின் மூலம் எமது மக்களின் மீள் குடியேற்றம் மற்றும் வாழ்வாதாரத்தினைக் கட்டி எழுப்ப வேண்டியிருக்கின்றது. இதற்கான பேச்சுவார்த்தைகளை ஏற்கனவே ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுடன் நடத்தியிருக்கிறோம். தேர்தலின் பின்னர் மக்களின் ஆதரவைப் பெற்ற வலுவான கட்சியாக இருந்து கொண்டு அரசாங்கத்துடனும் சர்வதேசத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகத்தில் இந்தப் புனர்வாழ்வு புனரமைப்பைச் செய்ய ஓர் இடைக்காலத் தன்னாட்சிக் கட்டமைப்பை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறோம். தமிழ் மக்களின் பெரும்பான்மைத்துவத்தையும் முஸ்லிம்களின் பெரும்பான்மைத்துவத்தையும் சொந்த மண்ணிலேயே சிறுபான்மைகளாக மாற்றுவதற்கான திட்டத்தை தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்த கட்டமாக எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கிற முஸ்லிம் மக்களினுடைய பிரதிநிதித்துவத்தை, மலையக மக்களினுடைய பிரதிநிதித்துவத்தை உள்வாங்கி ஒரு பரந்த கூட்டமைப்பை உருவாக்கி அந்தக் கூட்டமைப்பு ஊடாக அரசிடம் பேரம் பேசவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அதன் வாயிலாக சிறுபான்மை கட்சிகளின் வலு இல்லாமல் அரசாங்கம் இயங்க முடியாது என்ற நிலையை உருவாக்குவோம். இரண்டு அல்லது மூன்று மாதங்களில் இந்தப் பரந்த கட்டமைப்புகள் ஊடாக பெரிய மாநாடு ஒன்றை நாங்கள் நடத்த இருக்கிறோம். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரேரணைகளுடன் பரந்த கூட்டமைப்பு வாயிலாக பெறப்படும் பிரேரணைகள் என்பவற்றுக்கு அங்கு வடிவம் கொடுக்கப்படும். அப்படி வடிவம் கொடுக்கப்படும் பிரேரணைகளை அரசாங்கத்தின் முன்பாகவும் சர்வதேசத்தின் முன்பாகவும் வைப்போம். அப்படி வைக்கும் பொழுது அது பற்றி அரசாங்கத்துடன் சர்வதேச சமூகம் பேச வேண்டிய நிலை ஏற்படும்.

**நேர்காணல் : தீபச்செல்வன்**

அரசாங்கம் மீதான அழுத்தங்கள் இப்பொழுதே ஆரம்பித்து விட்டன. அரசின் போர்க் குற்றங்களுக்காக அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. அரசாங்கத்திற்கு எதிராக பொருளாதார ரீதியான தடைகள் எழுந்து வருகின்றன. பரந்து பட்ட கூட்டமைப்புடன் பேச மகிந்தராஜபஷ தவறுவாராக இருந்தால் மக்களை ஜனநாயக வழிகளில் அணிதிரட்டி சாத்வீக போராட்டங்களை முன்னெடுப்பதற்கான திட்டத்தை மகாநாட்டிலே அறிவிப்போம். எனவே உலகின் கவனத்தை எங்கள் பக்கம் ஈர்க்கவும் அதன் மூலம் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தி தீர்வை பெறவும் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். *

# தமிழர் பிரச்சினை குறித்த நிலைப்பாட்டை தெற்கின் புதிய அரசு மாற்ற வேண்டும்

### கொக்குவில் கூட்டத்தில் சீ.வீ.கே. பேச்சு



ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றம் வேண்டும் என்பதற்குத் தமிழ் மக்கள் வாக்களித்தனர்.

ஆனால் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்படுகிறதோ இல்லையோ புதிதாகத் தெரிவு செய்யப்படும் அரசாங்கத்திடம் எமது உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான அணுகுமுறை மாற்றமும், மனமாற்றமும் ஏற்படவேண்டும் என்பதே எமது செய்தியாகும்.

இவ்வாறு கொக்குவிலில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய முன்னாள் மாநகரசபை ஆணையாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளருமான சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எப்பொழுதும் எதிர் அரசியலிலேயே ஈடுபடுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. உண்மையில் தமிழினம் பலமுறை இணக்கமான அரசியலில் ஈடுபட முயற்சித்திருக்கிறது. பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் மற்றும் ரணில் விக்கிரமசிங்க - பிரபாகரன் ஒப்பந்தம் என்பன இணக்கப்பாட்டு அரசியலின் முயற்சிகளே. ஆனால் இவற்றைச் செயற்படுத்தாது ஒவ்வொரு முறையும் முட்டுக்கட்டை போட்டது தென்னிலங்கை அரசுகளே.

மூவரைத் தோற்கடிக்க வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். குறிப்பாக திருகோணமலையில் சம்பந்தனைத் தோற்கடிக்க வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

தமிழரசுக் கட்சி வரலாற்றில் மட்டக்களப்பு இராசதுரை கட்சியிலிருந்து வெளியேறியமை பலகாலம் என்னுடைய மனதை உறுத்தியது. யாழ்ப்பாணத்தவர்கள் எல்லாவற்றிற்கும் தாமே தலைமை வகிக்க வேண்டும் என எண்ணுவதனாலேயே கிழக்கிலங்கை மக்கள் எம்மை வெறுக்கின்றனர்.

இப்படியான நிலையில் தமிழினத் தலைமை கிழக்கிலிருந்து வரும் தகைமை வாய்ந்த தலைவர் இரா. சம்பந்தனிடம் இருப்பதே பொருத்தம். யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் அனைவரும் திருகோணமலையில் வசிக்கும் தமது நண்பர்களையும், உறவினர்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சம்பந்தனுக்கும் வாக்களிக்கும்படி கோரவேண்டும். யாழ்ப்பாணத்தில் யார் வென்றாலும் அவர்கள் தமிழர்களே. ஆனால் திருகோணமலையில் சம்பந்தன் தோற்றால் தமிழினம் தோற்கும்.- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் -2010

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

- ★அதி உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றிட...
- ★ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலத்தை மீட்டிட...
- ★இடம்பெயர்ந்தோரைத் துரிதமாக மீள்குடியமர்த்தி புனர்வாழ்வு அளித்திட...
- ★நீதியான சமாதானத்தைப் பெற்றிட...
- ★நிரந்தர அரசியற் தீர்வினை வென்றிட...
- ★தமிழ்த் தேசியத்தைத் தக்க வைக்க...
- ★அரசியற் கைதிகளை விடுதலை செய்திட...
- ★இன அடையாளத்தை நிலை நிறுத்திட...



**ஆதரிப்போம்**

**திரு.முடியப்பு றெமிடியஸ் அவர்களை**

இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ் தேசியக் கூட்டமைப்பு)

திருநகர் வாழ் மக்கள்

X 9

---

**வடமராட்சி மண்ணின் மைந்தனின் குரலை ஈழத் தமிழர்களின் உரிமைக் குரலாக தொடர்ந்து ஒலிக்கச் செய்வோம்**



18.12.2008 ஆம் ஆண்டு புதுடில்லியில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி பாராதீய ஜனதாக் கட்சியின் தலைவரும் முன்னாள் துணைப் பிரதமரும் எதிர்க் கட்சித் தலைவருமான மாண்புமிகு **எல்.கே. அத்வானியை** புதுடில்லியில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் **எம்.கே.சிவாஜிலிங்கம்** சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். நாடாளுமன்றத்துக்கு உள்ளும் புறமும் மற்றும் இலங்கையில் வெளிநாடுகளிலும் ஈழத் தமிழர்களின் மீதான இனப்படுகொலையை அம்பலப்படுத்தி போர் நிறுத்தத்தை வலியுறுத்தி உறுதியாகத் தொடர்ந்து பங்குபற்றியவர்.

**வடமராட்சி மக்கள்**

வடமராட்சியின் பிரதிநிதி நாடாளுமன்றத்தில் இருப்பதை உறுதி செய்வோம்.



**எம்.கே.சிவாஜிலிங்கம்**

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு
(இடதுசாரி விடுதலை முன்னணியின் சின்னத்தில்)

X 3

---

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ். மாவட்டம்



சட்டத்துறையிலே சரித்திரம் படைத்த சான்றோர் வரிசையில் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் (Q.C) அவர்களின் பாணியிலே, சட்டத்துறையில் சாதனைகள் படைத்து வரும் அவரது தீவிர ஆதரவாளராகிய இன்றைய சிரேஷ்ட சட்டத்தரணியும், மனித உரிமை ஆர்வலரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய



அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் (Q.C)

**திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி** சட்டப் பட்டதாரி அவர்களைப் பற்றி....

*எமக்குத்தான் தெரியும் எம் கண்ணில் வடிந்த கண்ணீர்! எமக்குத்தான் தெரியும் எம் இதயத்தில் வடிந்த இரத்தம்!*
*எமக்குத்தான் தெரியும் உச்ச நீதிமன்றில் உம் உரத்த வாதங்கள்! எமக்குத்தான் தெரியும் உம்தியாக சிந்தை!*
*எமக்குத்தான் தெரியும் சிறைச்சாலைகளில் உம் விஜயங்கள்!*
*எமக்குத்தான் தெரியும் சிறையில் வாடிய எம் இளம் தலைமுறைக்கு*
*மறுவாழ்வு தந்து சிறை மீட்ட செம்மல் நீர்*
*எமக்குத்தான் தெரியும் நடமாடும் வாழ்வில்*
*நாம் கண்ட தெய்வம் நீர்!*



இல. 1

**எங்கள் வாக்குகள் எம்தந்தை விநாயகமூர்த்தி அவர்களுக்கே!**

வெலிக்கடை சிறையிலிருந்து எம்தந்தை விநாயகமூர்த்தி அவர்களால் விடுவிக்கப்பட்ட விமலராஜனது உரிமைக் கோரிக்கை இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்ப சலுகைகளுக்கு விலைபோவோரை ஒதுக்கிவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவோம்!

## "வீடு" சின்னத்துக்கு வாக்களிக்குமாறு முல்லை இளைஞர்கள் கோரிக்கை

அற்ப சொற்ப சலுகைகளுக்கு விலை போகக்கூடிய சக்திகளை ஒதுக்கித் தள்ளி விட்டு, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை எதிர்வரும் தேர்தலில் தமிழ்மக்கள் பலப் படுத்த வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் அமைப்பு கேட்டுக் கொள்ளு கின்றது. நாளை மறுதினம் நடை பெறவிருக் கும் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் தமது அரசியல் பலத்தை நிரூபிப்பதற்காக 'வீடு' சின்னத்துக்கே வாக்களிக்க வேண் டும் என்று அவர்கள் கேட்டுள்ளனர்.

இதுதொடர்பாக முல்லை, மாவட்ட இளை ஞர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

தமிழர்களின் தலைவிதியைத் தீர்மா னிக்க எதிர்வரும் தேர்தலில் சரியான தலைமையைத் தெரிவுசெய்யவேண்டிய கடமை ஒவ்வொரு தமிழரது வாக்குகளி லும் உள்ளது.

கடந்த 30 வருடகால ஆயுதப் போராட் டம் முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்துடன் மௌனிக்கப்பட்ட வேளையில் எம் முன்னே மிகப்பெரிய அரசியல் போர் கையளிக்கப்பட் டுள்ளது. 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் எவ்வாறு தமிழ் மக்கள் தமது அரசியல் பலத்தை வெளிக்காட்டினார் களோ, அதேபோன்ற தொரு வரலாற்றுக் கடமையைச் செய்யவேண்டி யவர்களாக தமிழர்கள் இருக்க வேண்டும்.

மாவிலாறு தொடக்கம் முள்ளிவாய் கால் வரையும் நடந்த கொடிய யுத்தத்தில் இழக்க முடியாத எல்லாவற்றையும் இழந்து நாதியற்றவர்களாக, நடைப்பிணங்களாக அவலப்பட்டுக் கொண்டிருக்கும் எம்முன்னே வரலாற்றுக் கடமை ஒன்று காத்திருக்கின் றது. எல்லாவற்றையும் இழந்து விட்டோம். யாராவது தருவதை வேண்டிக்கொண்டு இருப்போம் என்ற மனநிலையை மாற்றி, நாங்கள் அனுபவித்த துயரங்களுக்கும், கொடுத்த விலைகளுக்கும் சரியான பதி லைச் சொல்ல வேண்டியவர்களாக இந்தத் தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும்.

அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும், பொய் வாக்குறுதிகளுக்காகவும் எமது இருப்பையும், இதுவரை இழந்த இழப் புக்களையும், சிறைவாசம் அனுபவிக்கும் எமது உடன்பிறப்புக்களின் துயரங்களை யும் விலைபேசி விற்பவர்களாக நாங்கள் மாறாமல், எமக்கு வலியைத்தந்தவர்களை சர்வதேசத்தின் முன் அடையாளப் படுத்து வதற்காக உங்களுடைய வாக்குப் பலத்தை வீட்டுச் சின்னத்திற்குப் போட்டு வடக்குக் கிழக்கில் தமிழரின் ஒற்றுமையையும், பலத்தையும் மீண்டும் ஒருமுறை சிங்களத் திற்கும், சர்வதேசத்திற்கும் பறை சாற்றவேண் டும் என உரிமையுடன் கேட்டு நிற்கின் றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படாமல் அபிவிருத்தி என்பது சாத்தியமேயில்லை

## ஆளுங்கட்சி வேட்பாளர் அங்கஜன்

"எமது பிரேதேசத்துக்கான அபிவிருத்தி தவிர்க்க முடியாத அவசியம் என்பதை சமீ பத்தில் வழங்கிய செவ்வி ஒன்றில் நேரடி யாக ஒத்துக் கொண்டிருக்கிறார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறே மச்சந்திரன். அத்தகைய அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமானால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படுவதே சிறந்த வழியாகும்."

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அவர் மேலும் தெரிவிக்கையில்

"மூன்று இலட்சம் மக்கள் என்பது கிட் டத்தட்ட ஒரு இலட்சம் வரையான வீடு களை உள்ளடக்கியது. இவற்றில் பெரும் பான்மையான வீடுகளுக்கு கூரைகள் மற்றும் கதவுகள் மாற்றினால் போதுமா னது. சில வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டி ருக்கும். ஆகவே இதனைப் பாகுபடுத்தி ஒவ்வொரு வீட்டிற் கும் எவ்வளவு வழங்கு வது என்பதை சொல்வதற்கு எம்மிடம் அந்த அதிகாரம் இருக்க வேண்டும். இந்த அதிகாரம் இப்போது கொழும்பிடம் தான் இருக்கிறது என்று முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கான அதிகாரத்தை பெறவே நான் பொதுத் தேர் தலில் போட்டியிடுகிறேன்.எதிர்க் கட்சியில் உட்காந்திருந்தால் அந்த அதிகாரம் கொழும் பிடமே தொடர்ந்து இருக்கும். இன்றும் ஆறு ஆண்டுகளுக்கு நிறைவேற்று அதிகா ரம்மிக்க ஜனாதிபதியுடன் இணைவதன் மூலம் அந்த அதிகாரத்தை நாமும் பகிர்ந்து கொள்ளலாம். எமது பிரதேசத்தை அபிவி ருத்தி மூலம் வளமாக்கலாம்

எனக்கு நீங்கள் வழங்கப் போகும் அங்கீ காரம் அதிகாரத்தை பகிர்ந்து அபிவிருத் தியை துரிதப்படுத்தும்.

"சுற்றிவர இராணுவம் வெளியில் போவ தற்கும் மலசலம் கழிப்பதற்கும் வழியில் லாமல் வேறு விடயங்களை பேச முடியாது. அந்த மக்களுக்கு பாதுகாப்பான வாழ்வு வேண்டும், அவர்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பவேண்டும், தொழிலைத் தொடங்க வேண்டும், எங்கள் மக்கள் பிச்சைக்கார ராக இருந்த சமூகமல்ல" என்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீளக்குடியேற்றம், மக்கள் தொழில் தொடங்கி சொந்தக் கால்களில் நிற்கும் நிலை இவை இரண்டையும் சாத்தியமாக்க எதிர்க் கட்சி அரசியலில் ஈடுபடமுடியாது.

ஜனாதிபதியுடன் இணைந்து அவரு டைய தோளோடு தோள் நின்று நாம் இழந்த வற்றைப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே இவை இரண்டும் சாத்தியம் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

பாதுகாப்பான வாழ்வு வீடுகளுக்குத் திரும்புதல் முப்பது வருடங்களுக்கு முன் நாமிமிருந்த நிலை என்பவற்றை உருவாக் கித் தரக் கூடியவர் ஜனாதிபதி அவர்கள் மட் டுமே என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

எமது ஜனாதிபதி யுத்தம் நடத்தி மக் களையே மீட்டிருக்கிறார். ஆனால் எமது மணல் வேறு சிலரின் கைகளில் சிக்கியுள் ளது. இதனால் குடாநாட்டு மக்கள் பெரி தும் பாதிக்கப்பட்டுள்ளனர். நான் தெரிவு செய்யப்பட்டால் மக்களின் மணல் பிரச்சி னைக்குத் தீர்வு காண்பேன்.

ஜனாதிபதியின் நேரடி வேட்பாளன் என்ற வகையில் அவருடன் பேசி எனது மக் களின் நிலையை விளக்கி பாதுகாப்பான எமது பழைய வாழ்வை மீட்டு வீடுகளுக் குத் திரும்ப வைக்க என்னால் இயலும் என் பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது வளமான எதிர்காலத்தை அமைத் துக் கொள்ள கடவுளருளிய கடைசிச் சந்தர்ப் பம் இது. தவறவிடாதீர்கள் எமது விதியை நாம் தீர்மானிக்க ஜனாதிபதியுடன் இணைந்து அபிவிருத்தியை முன்னெடுப்பது மாத்தி ரமே சிறந்த வழி என்பதை அன்புடன் தெரி வித்துக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.









வீடு இருப்புக்காய் போராடும் அமைப்பு

எங்கள் அடையாளங்களை சிதைத்து அழிக்க
பெரு அதிகாரமும் ஆயுதங்களும்
அடங்காத பசி கொண்டு நிற்கின்றன !
எங்கள் இறைமை எங்களிடமிருக்கிறது
எங்கள் சுயநிர்ணய உரிமை எங்களிடமிருக்கிறது !
ஆக்கிரமிப்பிலிருந்து
மரபு வழி வாழ்ந்த தாயகத்தை மீட்போம்
உறுதிப்படுத்த அரசியல் தீர்வினை
இனத்தின் விடுதலைப் பெருங்குரலில்
வலியுறுத்துவோம்!
வீடுகளை பறித்து அகதிகளாக்கியவர்களை
முறியடித்து
தமிழின இருப்புக்காய் வீட்டிற்கு வாக்களித்து
தணியாத உயிராக பசிக்கும்
தமிழ் தேசியத்தை வெல்ல வைப்போம்!
சதிகளையும் சூழ்ச்சிகளையும் முறியடித்து
அந்நிய சக்திகளையும்
மறைமுகம் அணிந்து துணைபோகும்
சுயநலக்காரர்களையும்
தாயகத்திலிருந்து அகற்றுவோம்!!!
ஒற்றுமையாய் குரல் கொடுக்க ஒற்றுமையாய்
எங்கள் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்போம்
தமிழ் மக்களுக்காய் துணிச்சலாய் தமிழ்
மக்களின் முகத்துடன் என்றும் போராடும்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு
( இலங்கை தமிழரசுக் கட்சி )









## இராமாவில் முகாம் மக்களின் அவலம்

வன்னி யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து கொடிகாமம் இராமாவில் நலன்புரி முகா மில் தங்கவைக்கப்பட்டிருக்கின்ற மக்களின் பிரச்சினைகளை எவரும் சீராக கவனிக் காமல் இருக்கின்றமையால் இதனை உதயனுக்கு எழுதுகிறோம்.

முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இராமாவில் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளோம். எம்மை இனி யாவது எமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தவேண்டும் என்ற கோரிக்கை நிரா கரிக்கப்படுகிறது.

எம்மைப் பராமரிக்கும் விடயத்தில் அரச அதிகாரிகள் அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருகிறார்கள். வழமையாக வழங்கப்பட்டு வந்த காலை உணவு, சமை யலுக்கான மரக்கறி மற்றும் சில உப உணவுப் பொருள்கள், சமையல் தேவைக்கான விறகு போன்ற அத்தியாவசியப் பொருள்கள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் நாங்கள் பட்டினிக்கு உள்ளாகி வதைபடுகிறார் கள். இதனை அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டு கின்றபோது அவர்கள் ஏனோதானோ என்ற நிலையில் பாராமுகமாக இருக்கிறார்கள்.




ஏற்கனவே சொல்லொணா துயரங்களை அனுபவித்து உயிர் பிழைத்து வந்து அரை குறையாக உயிர்வாழும் நிலையில் இத்தகைய அரச அதிகாரிகள் காட்டும் அசமந்தப் போக்கு எம்மை மேலும் துன்பமடையச் செய்கிறது. இது எந்த விதமான மானிட தர்மத் தில் அடங்கும் என்று சிந்திக்க வேண்டியுள்ளது. எனவே இந்த விடயம் தொடர்பாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் [illegible] எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பணியை உதயன் [illegible] என்று நம்புகிறோம்.

பாதிக்கப்பட்ட மக்கள்


நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்-2010


திரு.அ.வரதராஜப்பெருமாள்
(முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர்)


திரு.தி.ஸ்ரீதரன் (தோழர் சுகு)
(பொதுச் செயலாளர், பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்)

இணைந்த வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரி மைகளை நிலைநாட்ட, அதற்கு இந்தியாவின் அனுசரணையை பெற் றுக் கொள்ள மெழுகுவர்த்தி சின்னத்துக்கு வாக்களித்து தோழர் ஸ்ரீத ரன் அவர்களை வெற்றி பெறச் செய்யுங்கள்.

பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

X 6

நண்பர்கள்.

(96558)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA

### யாழ்.மாவட்டம்



உலகின் மனச்சாட்சியை நோக்கி உரத்த குரல்....

★மீள் குடியேற்றம்
★மீள் அபிவிருத்தி
★திட்டமிடுதல்

எமக்குத் தேவை;
★பசுமைப் புரட்சி
★வெண்மைப் புரட்சி
★நீலப் புரட்சி

இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 5

பேராசிரியர் இரா.சிவசந்திரன்

யாழ்.வாக்காளப் பெருமக்கள்

நாமும் வாக்களிப்போம் நம்மவரையும் வாக்களிக்க வைப்போம்.

---

X 10

## நாடாளுமன்றத்துக்கு நாளேடுகளில் ஒருவன்

### பத்திரிகையாளர் ஸ்ரீகஜனுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்?

* வன்னி பேரவலத்தினை ஊடகத்துறை மூலம் வெளிக்கொண்டு வந்தமைக்காக...
* மீள்குடியேற்றம் என்ற பெயரில் மக்கள் நடுத்தெருவில் விடப்பட்டதை சுட்டிக் காட்டியதற்காக...
* குடாநாடு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற கடத்தல்கள், காணமல்போதல் சம்பவங்களை தடுத்து நிறுத்துமாறு நாள் தோறும் எழுதியமைக்காக....
* குடாநாட்டில் படுகொலைகள் இடம்பெற்றபோது அதற்கு எதிராக ஊடகத்துறை மூலம் குரல் கொடுத்தமைக்காக...
* பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டபோதும் கடத்தப்பட்டபோதும் வெளிநாட்டுக்கு தப்பியோடாது மக்களுடன் மக்களாக நின்று தனது பேனா முனை மூலம் சேவை செய்தமைக்காக....
* அமரர் மகேஸ்வரனுடன் தோளோடு தோள்நின்று குடாநாட்டு மக்களுட்பட தமிழ் மக்களுக்கு சேவை செய்தமைக்காக...
* புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் நிலைகுறித்து ஊடகத்துறை மூலம் சுட்டிக்காட்டியமைக்காக...

**இளமை, துடிப்பு, விவேகம் உள்ளவன் என்பதால்**

வாக்களிப்போம் ! வெல்ல வைப்போம் !
மேலும் மேலும் சேவைகளை
ஸ்ரீகஜனிடமிருந்து பெற்றிடுவோம் !





யானைச் சின்னத்தில்
யாழின் மைந்தன் ஸ்ரீகஜன்

குடாநாட்டு மக்களே ! வாக்குகளை வீணாக்காமல் யானைச் சின்னத்திற்கு நேரே ஒரு புள்ளடியையும் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் இலக்கமான 08 மற்றும் பத்திரிகையாளர் ஸ்ரீகஜனின் இலக்கமான 10 ஆகியவற்றுக்கு மேல் புள்ளடியிட்டு இருவரையும் அமோக வெற்றி பெறச் செய்வோம் !!!

X 08

எஸ்.ஸ்ரீகஜன்
(பத்திரிகையாளர்)

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | X | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு மக்களின் விமோசனத்துக்கு பாடுபடுவதே எனது குறிக்கோளாகும்

## ஐ.தே.கவின் வேட்பாளர் ஸ்ரீகஜன்

குடாநாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் அடிப்படைப் படைப்பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டியது அவசியம். ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்திலேயே இவற்றுக்கு தீர்வுகான முடியும். இதனால் தான் யாழ்.மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மகேஸ்வரனின் அணியில் நான் போட்டியிடுகின்றேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளரும் ஊடகவியலாளருமான எஸ்.ஸ்ரீகஜன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் யுத்தம் முடிவடைந்த நிலையிலும் இன்னமும் துன்பதுயரங்களை அனுபவித்து வருகின்றனர். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நிலையில் அரசாங்கம் இல்லை. எனவே ஆட்சி மாற்றம் ஒன்றுக்கான ஆணையினை குடாநாட்டு மக்கள் வழங்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் மகேஸ்வரனின் அணியின் சார்பில் 6பேரை நாடாளுமன்ற உறுப்பினர்களாக குடாநாட்டு மக்கள் தெரிவுசெய்தால் ஆட்சி மாற்றம் நிச்சயம். எனவே மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தேர்தலில் களமிறங்கியுள்ளமை குறித்து பேட்டி கண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

பேட்டியின் விவரம் வருமாறு:-

**கேள்வி:** தேர்தலில் போட்டியிட முடிவு செய்தமைக்கான காரணம் என்ன?

**பதில்:** நான் அரசியலுக்கு புதியவனல்ல. 2000ஆம் ஆண்டு அமரர் தியாகராஜா மகேஸ்வரன் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டபோது நானும் போட்டியிட்டிருந்தேன். அப்பொழுது அவருக்கு அடுத்த படியான வாக்குகளை நான் பெற்றிருந்தேன். அச்சுறுத்தல் மிகுந்த காலகட்டத்தில் நாம் அன்று போட்டியிட்டிருந்தோம். அன்று நானும் நண்பன் மகேஸ்வரனும் குடாநாட்டில் ஐ.தே.க. வின் சார்பில் போட்டியிட்டபோது பழம்பெரும் அரசியல்வாதிகள் எனக் கூறிக்கொள்பவர்கள் சிலர் எம்மைப்பார்த்து எள்ளிநகையாடினார்கள். இவர்கள் எங்கே வெல்லப் போகின்றார்கள் சில நூறு வாக்குகளை பிரிப்பார்கள் அவ்வளவுதான் எனக் கூறினார்கள். ஆனால் நாம் வெற்றிபெற்றுக் காட்டினோம்.

### தமிழ்மக்கள் பிரச்சினைக்கு அரசு தீர்வு காணாது

தற்போது யுத்தம் முடிவடைந்துள்ள நிலையிலும் தமிழ்மக்கள் சொல்லெணா துயரங்களை அனுபவிக்கின்றனர். அவர்களது அன்றாடப் பிரச்சினைகள் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டிய அவசியம் இன்று எழுந்துள்ளது. ஆனால் தமிழ்மக்களின் பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் முன்வரப்போவதில்லை. அதேபோல் ஏனைய தமிழ்க் கட்சிகளாலும் இதற்கான நடவடிக்கை எடுக்கமுடியாது போயுள்ளது. இதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் மகேஸ்வரன் அணியில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட முன்வந்தேன். தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

**கேள்வி:** ஊடகவியலாளராக கடமையாற்றிய நீங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்தீர்கள். இதன் மூலம் தமிழ் மக்களுக்கு சேவை செய்தீர்கள். அத்தகைய சேவையிலிருந்து விலகி நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது.

### மூன்று மாதங்கள் சிறைவாசம்

**பதில்:** 1996ஆம் ஆண்டு முதல் நான் ஊடகத்துறையில் பணியாற்றி வருகின்றேன். வீரகேசரி பத்திரிகையில் செய்தியாளராக இணைந்து படிப்படியாக வளர்ந்து கடந்த 6 வருடங்களாக செய்தி ஆசிரியராக பணியாற்றினேன். தமிழ் மக்களின் துன்ப துயரங்களை அவலங்களை சந்தித்தபோது அவர்களுக்காக நான் எழுதினேன். தமிழ் மக்களின் அவலங்களை வெளியுலகுக்கு கொண்டு வந்தேன். இதனால் 3 மாதங்கள் சிறையிலும் அடைக்கப்பட்டேன். யுத்த காலத்தின் போது செய்திகளை வெளியிடுவதில் பெரும் அச்சுறுத்தல் நிலவியபோதும் துணிந்து செய்திகளை சர்வதேசத்துக்கு கொண்டு வந்தேன். ஆனால் அன்றைய இக் கட்டான காலகட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ் அரசியல் கட்சிகளை சேர்ந்த எம்.பிக்கள் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கவேயில்லை. இவர்களில் பலர் வெளிநாடுகளில் இருந்தனர். உள்ளூரில் இருந்துவர்களும் வாய் மூடி மௌனியாகவே இருந்தனர்.

தமிழ் மக்கள் அவலங்களை சந்தித்த போது குரல் கொடுக்காதவர்கள் ஜனாதிபதி தேர்தலில் இருந்து பிரிந்து செயற்படத் தொடங்கினர். ஒற்றுமையாக அதுவரை செயற்பட்டவர்கள் பல பிரிவுகளாக பிரிந்தனர். தமிழ் அரசியல் வாதிகளின் ஒற்றுமையின்மையும் தமிழ் மக்கள் துன்பப்படும் போது தமிழ் அரசியல் தலைமைகள் ஓடி ஒழிந்தமையும் எனது மனதில் பெரும்வடுவினை ஏற்படுத்தியது. இனியும் இவர்களை நம்பி பலனில்லை அரசியலில் முழுமையாக இறங்கி தமிழ்மக்களின் விடிவுக்காக பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் எனது மனதில் உருவானது. இதனையடுத்தே நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் மகேஸ்வரனின் அணியில் போட்டியிட முடிவு செய்தேன்.

பத்திரிகையாளராக இருந்து பணியாற்றிய நான் நாடாளுமன்றத்துக்கு தெரிவானால் எனது பத்திரிகைத்துறை அனுபவத்தையும் கொண்டு தமிழ் மக்களின் விமோசனத்துக்காகப் பாடுபடுவேன். தமிழ் மக்களுக்காக துணிந்து நின்று குரல் கொடுத்தமையினாலேயே எனது நண்பன் மகேஸ்வரனின் உயிர் பறிக்கப்பட்டது. அவரது பாரியார் திருமதி விஜயகலா மகேஸ்வரனுடனேயே நான் போட்டியிடுகின்றேன். மகேஸ்வரனைப்போல் நாமும் துணிந்து நின்று சேவையாற்றுவோம்.

**கேள்வி:** ஐ.தே.க.வில் போட்டியிடும் நீங்கள் வெற்றி பெற்றால் சுயாதீனமாக செயற்பட முடியுமா?

### மகேஸ்வரன் வழியில் பணியாற்றுவேன்


**பதில்:** நிச்சயமாக நாம் செயற்படுவோம். எனது நண்பன் மகேஸ்வரன் ஐ.தே.க.வில் எம்.பி.யாக இருந்த போதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களை விடவும் தமிழ்மக்களின் பிரச்சினை விவகாரத்தில் அதிகளவு உணர்வுடன் செயற்பட்டார். அவசரகால சட்டத்தை எதிர்த்தார். வடக்குக்கான எரிபொருள் தடையினை கண்டித்து வதிமறியல் செய்தார். மாட்டுவண்டியில் நாடாளுமன்றம் சென்றார். விடுதிகளிலிருந்து தமிழ் மக்கள் பஸ்களில் பலவந்தமாக ஏற்றப்பட்டு அனுப்பப்பட்டபோது தனது மேலங்கியை கழற்றி எறிந்து போராடினார். பாராளுமன்றத்தை போராட்ட களமாக மாற்றினார். ஐ.தே.க.வின் தலைமப்பீடத்திற்கு எதிராகவே பல தடவைகள் அவர் கருத்துக் கூறினார். இவ்வாறு அவர் சுயாதீனமாகவே செயற்பட்டார். இதேபோல் நாமும் ஐ.தே.க. வில் சுயாதீனமாக செயற்படுவோம்.

**கேள்வி:** யாழ் குடாநாட்டில் ஐ.தே.க. வுகது எத்தனை ஆசனங்கள் கிடைக்குமென நம்புகின்றீர்கள்?

### ஆட்சி மாற்றம் நிச்சயம் நடக்கும்

**பதில்:** குடாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவு குறிப்பாக மகேஸ்வரன் அணிக்கான ஆதரவு அதிகரித்து வருகின்றது. இங்கு 6 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பம் உள்ளது. குடாநாட்டில் 6 உறுப்பினர்கள் எமது அணியில் தெரிவு செய்யப்பட்டால் ஆட்சிமாற்றம் என்பது நிச்சயம் ஏற்படும். குடாநாட்டின் பலபகுதிகளிலும் நாம் கடந்த 3வாரங்களாக தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளோம். இதன்போது மக்களின் பெரும் ஆதரவை மக்களின் மனங்களில் இடம்பிடித்துள்ளமை பரகசியமாகத் தெரிகின்றது. அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இன்று பல பிரிவுகளாக மாறியுள்ளனர். இதனால் மக்கள் வெறுப்படைந்துள்ளனர். எனவே நிச்சயமாக 6 உறுப்பினர்களை பெறும் நிலை காணப்படுகின்றது.

**கேள்வி:** குடாநாட்டில் பல சுயேச்சைக் குழுக்களும் பல கட்சிகளும் இம் முறை தேர்தலில் போட்டியிடுகின்றன. இதன் மூலம்



பாதிப்பு ஏற்படாதா?

**பதில்:** நிச்சயம் ஏற்படும். குடாநாட்டில் வாக்குகளை பிரிப்பதற்காக இம்முறை திட்டமிட்டு சுயேச்சைக் குழுக்கள் களமிறங்கியுள்ளன. தென்பகுதியை சேர்ந்த சிங்களவர்கள் சிலரும் சுயேச்சை குழுவுக்கு தலைமை தாங்கி போட்டியிடுகின்றனர். இவற்றில் குடாநாட்டின் முக்கியஸ்தர்களும் போட்டியிடுவதுதான் வேடிக்கையாகும். அரசாங்க சார்பு சுயேட்சைக் குழுக்களில் போட்டியிடுபவர்கள் சிலநூறு வாக்குகளை பெற்றுக் கொடுத்து ஏதேனும் சலுகைகளைப் பெறலாமே தவிர வேறொன்றையும் இவர்கள் செய்ய முடியாது.

**கேள்வி:** ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையிலான சமஷ்டி தீர்வு வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. ஐ.தே.க. இதுகுறித்து என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. ?

**பதில்:** ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதோ ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையிலான தீர்வுக்கு இணக்கம் காணப்பட்டது. இத்தகைய தீர்வினை வழங்க வேண்டும் என்பதே குடாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் மகேஸ்வரன் அணியின் விருப்பமாகும். அதற்கான அழுத்தங்களை நாம் நிச்சயம் கொடுப்போம்.

**கேள்வி:** இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பில் எத்தகைய நடவடிக்கைகளை எடுப்பீர்கள்?

**பதில்:** யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் தொடர்ந்தும் முகாம்களில் உள்ளனர். மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்களுக்குரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டம். அதேபோல் முகாம்களில் உள்ள மக்களும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம். இடம்பெயர்ந்த மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களை நான் நன்கு அறிவேன். அவர்களின் அவலங்களை ஊடகவியலாளன் என்ற முறையில் வெளிக்கொணர்ந்தவன் என்ற வகையில் நானும் அவர்களில் ஒருவனேயாவேன்.

**கேள்வி:** கைதுசெய்யப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள் புனர்வாழ்வு பெற்றுவரும் இளைஞர் யுவதிகள் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். குடாநாட்டு மக்கள் எமது அணியினரில் 6 பேரை பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்வதால் ஆட்சி மாற்றம் நிச்சயம் ஏற்படும். ஐ.தே.க. ஆட்சி அமைத்ததும் அவசரகால சட்டம் பயங்கரவாத தடைச்சட்டம் என்பன நீக்கப்படுவதுடன் தமிழ் அரசியல் கைதிகளும் புனர்வாழ்வு பெற்று வருவோரும் விடுவிக்கப்படுவர். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதே அவசரகாலச் சட்டம் நீக்கப்படும் என்று எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். ஆனால் இன்றைய அரசாங்கமே அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10ஆயிரம் தமிழ் இளைஞர், யுவதிகளை விடுவிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனக் கூறுகிறது. எனவே மக்கள் சிந்திக்க வேண்டும்.

**கேள்வி:** கிளிநொச்சிப் பகுதியில் கட்சிகள் பிரசாரம் செய்யமுடியாத நிலை காணப்படுவதாக கூறப்படுகிறதே. இதுகுறித்து உங்கள் கருத்து என்ன?

**பதில்:** கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் மக்கள் மீளக்குடியேறியுள்ளனர். எனவே இங்கு பிரசாரத்தில் ஈடுபட அனுமதிப்பது அரசாங்கத்தின் கடமையாகும். கிளிநொச்சி தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கு எனக்கு பெரும் ஆதரவு உள்ளது. ஏனெனில் எனது தயார் பேராலை பளையினை பிறப்பிடமாகக் கொண்டவர். எனது பூட்டனார் கந்தர் விசுவநாதன் கிளிநொச்சி தொகுதி மக்கள் நன்கறிவர். கடந்த 2000ஆம் ஆண்டு தேர்தலில் கிளிநொச்சி தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி.ஆனந்த சங்கரியைவிட கூடுதலான வாக்குகளைப் நானே பெற்றிருந்தேன். இம்முறையும் கிளிநொச்சி தொகுதியில் கூடுதல் வாக்குகள் எனக்கு கிடைக்கும் என நம்புகின்றேன்.

**கேள்வி:** யாழ்.குடாநாட்டு மக்களுக்கு உங்கள் சேவை எந்த வகையில் அமையும்?

### குடாநாட்டு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு

**பதில்:** குடாநாட்டில் வர்த்தகர்கள் விவசாயிகள் மீனவர் சமூகம் சிறுகைத் தொழிலாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் தனியார் துறை ஊழியர்கள் அரசாங்கத்துறை ஊழியர்கள் ஓய்வூதியர்கள் என பலரும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே இவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டியது அவசியம். இதனைவிட குடாநாட்டில் வேலையற்றுள்ள இளைஞர், யுவதிகள் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். இதற்காகவும் திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.

**கேள்வி:** கடந்த சில வருங்களில் பெருமளவான தமிழ்கள் காணாமல் போனதுடன் கடத்தப்பட்டனர். இவர்களின் நிலை அறியாது பெற்றோர் உறவினர்கள் கவலை கொண்டுள்ளனர். இத்தகையவர்கள் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?

**பதில்:** யுத்தத்தின்போதும் அதற்கு முன்னரும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றன. கடத்தப்பட்டவர்கள் காணமல் போனவர்களது பெற்றோர் உறவினர்களின் வேதனைகள் எனக்குத் தெரியும். ஏனெனில் பல தடவைகள் அவர்களின் போராட்டங்களை நடத்தயபோது அதனை வெளிக் கொணர்ந்தவன் நான். எனவே ஐ.தே.க. ஆட்சி அமைத்ததும் கடத்தப்பட்டோர் காணமல் போனோரின் நிலை குறித்து கண்டறிய ஆணைக்குழு அமைக்கப்படும். காணாமல் போனோர் கடத்தப்பட்டோரின் அழுகுரல்கள் எனது காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

**செவ்வி - யாழ்வாணன்**

**கேள்வி:** குடாநாட்டு மக்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில்:** மாற்றம் ஒன்று அவசியம். அதற்கேற்ற வகையில் குடாநாட்டு மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று பல பிரிவுகளாக மாறியுள்ளது. கூட்டமைப்பில் இருந்தவர்களே அதிலிருந்து பிரிந்து தமக்குள் சண்டை இட்டுக் கொள்கின்றனர். இதனால் மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். எனவே குடாநாட்டு மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் மகேஸ்வரன் அணியில் போட்டியிடும் எம்மை ஆதரிக்க வேண்டும். திருமதி விஜயகலா மகேஸ்வரன் கணவனின் சேவையைத் தொடர்வதற்காக களமிறங்கியுள்ளார். அவரின் தலைமையில் போட்டியிடும் எமது வெற்றி உங்கள் அனைவரது வெற்றியுமாகும். எனவே சிந்தியுங்கள் செயற்படுங்கள். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் விட்ட தவறினை இனிமேல் விடக்கூடாது. நேரகாலத்துடன் சென்று அனைவரும் வாக்களிக்க வேண்டும். இதன் மூலமே மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★பணத்தின் துணையுடன் பலரும் கடை விரித்திருக்கும் அவலம்....
★அரசியலையும் தொழிலாக்க அப்பட்டமான முயற்சிகள்...
★அராஜகத்தின் நிழலில் துரோகம் பயமுறுத்தும் சூழ்நிலை....
★கொள்கையும் குறிக்கோளும் மறக்கப்பட்டு சமரசம் பேசும் சரணாகதித் தலைவர்கள்...

இத்தனைக்கும் மத்தியில் இலட்சிய வைராக்கியம் நடைமுறை சாத்தியமான அணுகு முறை....
நீண்ட அரசியல் அனுபவம் தந்திருக்கும் நிதானம்....
கொடுமை கண்டு சீறும் நேர்மை...
இத்தனையும் இணைந்து இலங்கை ஒன்றியத்துக்குள் (Union of Ceylon)
எமது தாயகத்தில் தமிழ் ஈழ தேசம் காண புதிய கொடியின் கீழ் புறப்பட்டிருக்கும் போர்ப் பாசறை
'தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பு'
குடை சின்னத்தில் வடகீழ் மாநிலத்தின்
ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடுகிறது.





2 X

3 X

ஆதரவு வழங்குங்கள்:
தமிழர்களின் தாகம்
தமிழ் ஈழத் தாயகம்






இவரோடு சேர்ந்து பணிபுரியும் ஒரு அணி உள்ளது.
நாம் கடந்த காலத்தில் மக்கள் மத்தியில் நேர்மையோடு செயற்பட்டோம்.
எதிர்காலத்திலும் அவ்வாறு செயற்படும் கற்பனையோடும் விருப்பத்தோடும் உள்ளோம்.

சாதிக்க விரும்புபவை.

மக்கள் ஜனநாயக அரங்கம் ஒன்று அமைக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் மக்கள் ஜனநாயக அரங்கம் ஒன்று அமைக்கப்படும். மாதமொருமுறை மக்கள் ஜனநாயக அரங்கத்தில் மக்கள் கூடுவார்கள். அவ்வாறு மக்கள் கூடி வெளிப்படுத்தும் வெளிப்பாடுகளை அடிப்படையாக வைத்துதான் இவரது நடவடிக்கைகள் பாராளுமன்றத்திலும்,சர்வதேச சமூகத்திலும், புலம்பெயர்ந்த மக்களோடும் மேற்கொள்ளப்படும்.

யுத்தத்தின் நேரடிப்பாதிப்புக்குட்பட்டோர் வாழ்க்கையை மீட்டெடுத்தல். குறிப்பாக, பல பெண்கள் குழந்தைகளோடு தனியே விடப்பட்டுள்ளார்கள். இவர்களின் வாழ்க்கையை மீட்டெடுத்தல். இதற்காக ஆற்றுப்படுத்தல் நிலையம் அமைக்கப்படும்.

பொதுவாகப் பெண்கள், சிறப்பாக இளம்பெண்கள் வாழ்வில் ஒரு பெரும் முன்னேற்றத்தைக் காண்பது. குறிப்பாகக் கல்வியை இடையில் விட்டு விலகிய அல்லது தம்மால் முடியாது என நினைத்து மூலையில் முடங்கிக் கிடக்கும் பெண்களின் ஆற்றலை வெளிக்கொணர்ந்து அவர்களை தொழில் முயற்சியாளர்கள் ஆக்குதல்.

பாலர்வகுப்பு ஆசிரியர்கள் வாழ்வில் மேம்பாடு கொண்டு வருதல்.

பெண்களுக்கான சிறப்புத்திட்டங்களாகப் பெண்கள் மேம்பாட்டு நிறுவனம், பெண்கள் ஆய்வுநிறுவனம், பெண்கள் வெளிநாடுகளில் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்களை அடையாளம் காட்டும் உதவிமையம் என்பன அமைக்கப்படும்.

கிராமத்து பாடசாலைகளில் முன்னேற்றம், கிராம மக்களிடை ஒற்றுமை, கிராமங்களில் மக்கள் பங்களிப்புடன் செழிப்பான, நிலைத்த அபிவிருத்தி என்பவற்றை அடைதல்.

பண்பாட்டுச் சீரழிவைத் தடுக்கப் பண்பாட்டு நிலையங்கள் அமைக்கப்படும்.

தமிழ் மக்களின் மீட்சி. மேற்படி வேலைகளினூடு அணிதிரளும் மக்கள் தங்கள் அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தி தமிழ் மக்களின் தனித்துவமான இறைமை, தனித்துவமான தேசம் என்பவற்றின் அடிப்படையில் இருதேசம் ஒருநாடு என்ற சமாதானமானத் தீர்வு காண்பது.

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்


**பத்மினி சிதம்பரநாதன்**
http://spathmini.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் வாக்குகளால் தமிழ் மக்களின் ஒற்றுமையை இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் இடித்துரையுங்கள்!

## யாழ்ப்பாண மக்களிடம் கேட்கிறார் விநாயகமூர்த்தி

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளரும் மூத்த அரசியல்வாதியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி உதயனுக்கு வழங்கிய செவ்வி இது.**



கேள்வி : தாங்கள் தலைமை வகித்த அகில இலங்கைத் தமிழ்க் காங் கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் இருந்து வெளியேறியுள்ள நிலை யில் நீங்கள் கூட்டமைப்பிலேயே போட்டியிடுவதற்கான காரணம் என்ன?

பதில் : அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவராக நான் இருந்த போதும் அக்கட்சி எதற்காக விலகியது என்பதைப் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் இன்று வரை எனக்கு அறிவிக்கவில்லை. அதேநேரம் எனக் குக் கூட அறிவிக்காது என்னைத் தலை வர் பதவியிலிருந்தும் விலக்கியுள்ளார்.

ஆனால் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் - 2 வாரங்களுக்கு பின்னர் கஜேந்திரகுமார், சம்பந்தன் ஆகியோரி டம் ஒரு சில மனஸ்தாபங்கள் ஏற்பட் டன. பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் சம்பந்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராஜா ஆகியோர் கஜேந்திர குமாரின் சந்தேகங்களுக்கு விடைய ளித்தனர். இதன் பின்னர் இவர் ஐயுறு வதற்கு காரணம் இல்லை. இவ்விளக் கமளிப்பின் போது நானும் அங்கு இருந்தேன்.

இதன்பின்னர் வழக்கறிஞர் கந் தையா நீலகண்டன் முன் ஆவணம் எழுதப்பட்டது. கஜேந்திரகுமார் யாழ்ப் பாணத்தில் 3 ஆசனங்களும் ஏனைய இடங்களில் ஒரு ஆசனமும் கேட்டி ருந்தார். ஆனால் யாழ்ப்பாணத்தில் 3 ஆசனங்களுக்குச் சம்மதம் அளிக்கப் பட்டுள்ளது.

பின்னர் அவருடன் தொலைபேசி யில் நான் தொடர்பு கொண்ட போதும் அவர் என்னுடன் உரையாட மறுத்து விட்டார். மறுநாள் அவரின் செயலாளர் கிருஷ்ணதாஸ் ,'எல்லாம் முடிந்து விட்டது' என்று கூறினார்.

அவர் கூட்டமைப்பில் இருந்து விலகியதற்கான காரணம் கஜேந்தி ரன், பத்மினி ஆகியோர்களுக்கு இட மில்லை என்பதற்காகவே.... அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருட னான ஒற்றுமையைச் சிதைத்துச் செயற்படலாமா?

நாம் ஆவணம் எழுதியிருந்தோம். அரசியலில் 55 வருடமாக இருக்கும் நான் ஒரு முதிர்ச்சி அடைந்தவன். இத னைச் செய்யலாமா?

2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத் தில் நடைபெற்ற தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வெற்றி பெற்றது. அன்று தமிழரசுக்கட்சி, விடு தலைப்புலிகள், ஈ.பி.டி.பி. என்பவற் றின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நான் வெற்றிபெற்றிருந்தேன். அதன் பின் னர் தான் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு உருவாக்கப்பட்டது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் இணைத்துக் கொள்ளப்பட்டது. அன்று நாம் வெற்றி பெறாவிட்டால் கஜேந் திரகுமாரின் கதி என்ன?

இன்று நான் கட்சித் தலைவர் பத வியிலிருந்து மட்டுமல்ல அங்கத்துவ நிலையில் இருந்தும் விலக்கப்பட் டுள்ளேன். எனக்கு வேறு கட்சி தெரி யாது. நான் இனி சாகும் வரையும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் இருப்பேன். எக்கட்சியிலும் சேர மாட்டேன். எமது கட்சியின் 99 வீதமா னோர் என்னுடனேயே நிற்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டடைப்பை ஆத ரிக்கிறார்கள்.

ஆனால் இன்றுவரை கஜேந்திர குமார் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியதாக அறிவிக்கவில்லை. என்னுடன் கலந்து ஆலோசிக்கவும் இல்லை. இவ்வாறு இருக்கையில் அவர் வெளியேறியதற்கான ஒரே கார ணம் கஜேந்திரன், பத்மினி ஆகியோ ருக்கு இடம் ஒதுக்கப்படாமையே.

இவர்கள் இருவரும் 3 வருடத்திற் கும் மேலாக வெளிநாட்டில் தங்கியி ருந்தனர். இவர்களுக்கு எதிராக வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் பாது காப்பு அமைச்சின் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷவின் ஆதரவுடனேயே அவர்கள் இங்கு வந்தனர். இவர்களுக் காகவே கஜேந்திரகுமார் விலகினார்.

விலகியும் கூட கட்சியில் போட்டி யிடாது தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியை அமைத்து கட்சியின் சின் னத்தைப் பயன் படுத்துகிறார்களே தவிர, கட்சியில் போட்டியிடவில்லை. வெளிநாடுகளில் தங்கியிருந்து கோத்த பாய ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்துடன் வந்த இவர்கள் தான் எமக்குத் தமிழ்த் தேசியம் கற்பிப்பதா?

கேள்வி : தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பினைத் தடைசெய்ய வேண்டும் என கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள் ளாரே....?

பதில் : கோத்தபாய ராஜபக்ஷ அரச உத்தியோகத்தர். இவருக்கு அரசியல் பற்றிப் பேச அருகதையில்லை. உண் மையான அரசாங்கமாக இருந்தால் அரசாங்க ஊழியரான கோத்தபாய ராஜ பக்ஷ அரசியல் பேசியதற்காக அவரை தூக்கி வெளியில் போடவேண்டும்.

ஆனால் இவர் பேசியதற்கு அமைச் சர் சிறிசேன ஆதரவு தெரிவிக்கும் வகையில் பேசியுள்ளார். இதைப்பற்றி அச்சமில்லை. எம்மைத் தடைசெய்ய முடியாது. மீறித்தடை செய்தால் சத்தி யாக்கிரகம் செய்து எம் தடையை வெல் வோம்.

மஹிந்த ராஜபக்ஷ இன்று ஜனாதி பதியாக இருக்கின்றார் என்றால் அது எம்மால்தான். 2005 இல் நாம் வேறு விதமாக முடிவு எடுத்திருந்தால் நிலைமை மாறி இருக்கும்.

இன்று இலங்கையில் இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது. அதன் தலைவர் கோத்தபாய ராஜபக்ஷ. தமி ழர் தாயகத்தில் அமைக்கப்பட்ட தற்கா லிக இராணுவ முகாம்கள் அனைத்தும் நிரந்தரமாக்கப்படுகின்றன.

எம் தேசம் சகஜ நிலைக்கு திரும்ப வேண்டும். தமிழ்த் தேசத்தில் படை கள் அகற்றப்பட வேண்டும். அதற்காக அரசியல் ரீதியாகப் போராடும் அமைப்பே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என் பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

கேள்வி : தமிழரின் தாயகத்தில் சிங் களக் குடியேற்றம் அதிகரித்து வருகி றதே...?

பதில் : மஹிந்த ராஜபக்ஷ விடு தலைப்புலிகளை என்னமாதிரி நோக்கி னாரோ அதே போன்றே தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பையும் நோக்குகின் றார். இந்த ஆறு வருடங்களிலும் கூட் டமைப்பினரை தமிழ் மக்களின் பிரதி நிதிகளாக ஏற்கவில்லை.

வடக்கு, கிழக்கில் பெரும்பான் மையினராக இருக்கும் தமிழ் மக்களை சிறுபான்மையினராக்கும் எண்ணமே அவரிடம் உண்டு. அப்போதுதான் நாம் தேசியம்-சுயநிர்ணய உரிமை யைக் கேட்கமாட்டோம் என அவர் எண்ணுகிறார். அவருடன் இருக்கும் டக்களஸ் தேவானந்தாவுக்கும், கரு ணாவுக்கும் இவை தெரியும். இவற் றைத் தடுக்கஅவர்கள் முன்வரவேண் டும். வருவார்களா? ஏனைய மாகாணங் களில் பெரும்பான்மையினராக வாழும் சிங்கள மக்களுக்குக் கிடைக்கும் உரி மைகள் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வில்லை. எமது மண்ணில் ஆயுதக் கலா சாரம் இன்னும் விட்டுப்போக வில்லை.

கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் இளம் தலைமுறைகளைக் காணமுடியவில்லையே?

பதில்: கடந்த காலத்தில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக இளைஞர் கள் நாட்டை விட்டு வெளியேற வேண் டிய சூழ்நிலை உருவாகியது. தற் போதுள்ள இளைஞர்கள் பெரியளவில் அரசிய லுக்கு வரவிரும்பவில்லை. ஏனெனில் இன்னமும் இங்கு ஆயுதக் கலாசாரம் காணப்படுவதே. அந்தக் கலாசாரம் மறைந்தபின் இளம் தலை முறையி னரே அதிகம் இடம்பெறுவர். ஆனால் அவர்களுக்கான கதவு என்றும் திறந் தேயுள்ளது.

**சந்திப்பு : தமிழரசன்.**

கேள்வி: உதயன் ஊடாக மக்க ளுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில்: தயவுசெய்து உங்கள் வாக்கு களை சிதறடிக்காது உதிரிக்கட்சிகளை யும் சுயேச்சைக் குழுக்களையும் நிராக ரித்து தமிழ்த்தேசியக் கூட்ட மைப்புக்கு வழங்குங்கள்.

உங்கள் வாக்குகளால் தமிழ் மக்க ளின் முடிவையும் ஒற்றுமையையும் இலங்கை அரசுக்கும், சர்வதேசத்திற் கும் இடித்து உரையுங்கள்.

## வாசகர் திருமுகம்

### அள்ளி வீசப்படும் வாக்குறுதிகள்!

நாடாளுமன்ற பொதுத்தேர்தல் பிர்கடனப்படுத்தபட்ட நாளில் இருந்து சுயேச் சைக்குழுக்களும் அதிகாரத்தில் இருக்கும் அரசியல் கட்சிகளும் அபிவிருத்தியின் பேரால் பல வாக்குறுதிகளை அள்ளி வீசி வருகின்றன. ஆத்மீகம் பற்றியே சிறிதும் சிந்திக்காதவர்களைக் கொண்டு தேர் முட்டிகான அத்திபாரங்கள் நடப்படுகின்றன. சமயநிகழ்ச்சிகளில் ஆரம்பநிகழ்வுக்கான முதன்மை விருந்தினர்களாக அவர்கள் கலந்துகொள்கிறார்கள். உத்தரவாதங்கள் வழங்கப்படுகின்றன. தூசுதட்டப்படாமல் இருக்கும் கடிதத் தலைப்புக்களைக் கொண்ட கிராம அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், தொழிற் சங்கங்கள் ஏன எண்ணிலடங்காத அமைப்புக்கள் திடீர்திடீர் என அழைக்கப்பட்டு மாலைகளும் போடப்பட்டு, தொழில் வாய்ப் புகள், நியமனங் கள், நிதி வழங்கல் எனப் பலதரப்பட்ட வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இரணைமடுக் குளத்தின் நீர் யாழ்.மாவட்டத்துக்கான குடிதண்ணீர் பிரச்சினைத் தீர்வு, மகாவலிகங்கை நீர் யாழ்.மாவட்டத்துக்கு என மக்களுக்கான வாக்குறுதிகள் ஏராளம். வர்த்தகக் கண்காட்சியும் ஓர் அரசியல் விளையாட்டு.

தென்னிலங்கைக்கான சந்தைவாய்ப்பு. யாழ்.மாவட்ட மக்களின் பணத்தை வாரிக் கொள்வதற்கான வங்கிகள் என பல நிகழ்ச்சித்திட்டங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்படுகின்றன. இவற்றுக்கும் தலைகாட்ட வேண்டிய நிலைமை வேட்பா ளர்களுக்கு உண்டு. மேலும் மக்களுக்கான வாழ்வாதாரத்துக்கான உறுதி மொழி களும் வழங்கப்படுகின்றன.

சொந்த மண்ணில் இருந்து விரட்டப்பட்ட மக்களை இன்று ஒரு பெரிய அரசியல் பலமாக வேட்பாளர்கள் பயன்படுத்துகின்றார்கள். இடப்பெயர்வு என்பது பெரிய மனிதாபிமானப் பிரச்சினை. இதற்கு சர்வதேச அரசசார்பு நிறுவனங்களின் பங்களிப்பைச் செய்கின்றன. ஆனால் இது அரசியலுக்கு அப்பாற்பட்ட செயலாகும். இதனையும் உள்ளூர் அரச அதிகாரிகளின் தயவில் வழங்குவதற்கு காட்டி மக்களை ஏமாற்று வதும் அரசியல் விளையாட்டாகும்.

இடம்பெயர்ந்த மக்களை சகல இடங்களிலும் மிக விரைவில் மீள்குடியேற்றப் பாடுபடுவோம் என கடந்த ஜனாதிபதித் தேர்தல் தொடக்கம் தற்போதைய நாடாளுமன்றத் தேர்தல் வரை மிகப்பலமாகக் கூறி இடம்பெயர்ந்த மக்களை ஏமாற் றுகிறார்கள். உதாரணமாக வலிகாமம் வடக்கு மக்கள் அங்கிருந்து விரட்டப்பட்டு சுமார் 25 வருடங்களுக்கு மேலாகியும் இதுவரைக்கும் உருப்படியான எதுவித நட வடிக்கையும் எடுக்கப்படாது மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்டலாம் என்பதற்கு அமைய இதுவரைக்கும் தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் வாழ்வதற்கான உத்தரவாதம் பற்றி சுயேச்சைக் குழுக்களோ அல்லது அதிகாரத்தில் இருந்துகொண்டு போட்டியிடும் அரசியல் கட்சிகளோ உறுதியான கருத்துக் கூறவில்லை. எவ்வாறாயினும் தமிழ் நாட்டு அரசியல் போன்று மக்களை ஏமாற்றலாம் என நினைக்கிறார்கள். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. தமிழ் மக்கள் ஓரளவு அரசியல் நிலைப்பாட்டை தெரிந்த வர்கள் என்பதால் ஏமாறப்போது சுயேச்சைக் குழுக்களும் ஆட்சிப் பீடத்தின் அங்கீ காரத்துடன் களம் இறங்கிய அரசியல் கட்சிகளுமே. காலம்பதில் சொல்லும்!

-மா.ராசன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதத்துக்கு துணைபோகும் வன்முறைக் கட்சிகளுக்கு வாக்குப்பலத்தைப் பயன்படுத்திப் பாடம் புகட்ட வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சியின் துவாரகேஸ்வரன் அழைப்பு

தமிழ் மக்கள் ஒற்றுமையாக நின்று தமது வாக்குப் பலத்தை பயன்படுத்தி பேரினவாத அரசுக்குத் துணைபோகும் வன்முறை அரசியல் கட்சிகளுக்கு ஒரு வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்க வேண்டும். நாற்காலிப் போட்டிக்காக தங்களுக்குள்ளேயே முரண்பட்டு மோதிக்கொள்ளும் அடாவடித்தன ஜனநாயக வாதிகளின் மேலாதிக்க வெறித்தனத்திற்கு இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் தியாகராசா துவாரகேஸ்வரன். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு

ஒருபுறம் முள்ளிவாய்க்காலில் - போரின் இறுதிக் கட்டத்தில் மக்கள் பேரவலத்தை சந்தித்துக் கொண்டிருந்த போது,சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காதவராய் வெடி கொளுத்திக் கொண்டாடிய மானுடநேயமற்ற பதவிப் பதர்களை ஏப்ரல் 8 இல் தமிழ் மக்கள் முற்றாகப் புறக்கணிக்கவேண்டும்.

தமிழ்மக்களின் வாக்குப் பலத்தை சிதைக்கும் மூலோபாயத்தை பயன்படுத்தி, பணத்திற்கு விலைபோகும் மனிதர்களின் அற்பத்தனத்தை இனங்கண்டு, அவர்களை சுயேச்சைக் குழுக்களாக்கிய பேரினவாத சக்திக்கு பின்னால் பல்லிளித்துப் பின் சென்றுள்ளோரை தலைகுனியச் செய்ய தமிழ் மக்கள் தமது வாக்குகளை முற்றாகப் பயன்படுத்த வேண்டிய நாள் ஏப்ரல் 8 ஆம் திகதியாகும்.

சுயநல மற்றும் அடிமைத்தன அரசியலுக்கு அடிமையாகி தென்பகுதி மற்றும் அயலக அரசியல் சூழ்ச்சிக்குப் பலியாகி தமிழ்மக்களின் இன்றைய அவலங்களுக்கு எல்லாம் காரணமாகி நிற்கும் பாரம்பரிய தமிழ் கட்சிகளின் உள்ளக முரண்பாடுகளால் தொடர்ந்தும் தமிழினம் பலவீனமாகி அவலங்களைச் சந்திப்பதை தவிர்க்க, அவர்களுக்கு ஒற்றுமையின் அவசியத்தையும் பலத்தையும் உணர்த்த வேண்டிய நாளும் எதிர்வரும் தேர்தல் தினமேயாகும்.

ஒட்டுமொத்தமாக - முழுமையாக - தமிழ் பேசும் மக்களின் தேசிய தனித்துவம், கலை கலாசார - பண்பாட்டு விழுமியங்களின் மகத்துவம், அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைத்துவம் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும்.

அவசர காலச் சட்டம் - பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழ் பேசும் மக்களை தசாப்த காலத்திற்கும் மேலாக அச்சுறுத்தவும் அடக்கவுமே பயன்படுத்தப்படும். ஏதேச்சதிகாரச் சட்டங்கள் முழுமையாக நீக்கப்பட வேண்டும். மேற்படி சட்டங்களின் கீழ் கைதாகி - விசாரணைகளின்றி பல வருடங்களாக சிறைவாசம் அனுபவித்து வரும் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும். அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான நீதியான - நேர்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட மக்களுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்கப்படுவதுடன், இக்குற்றங்களுக்கு காரணமானவர்கள் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள மக்கள் வாழ் நிலங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். மக்களின் இயல்பு வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

முகாம்களில் உள்ள மக்கள் அனைவரும் தங்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவதுடன் அரசின் வசமுள்ள அவர்களின் அசையும் - அசையாச் சொத்துக்கள் அனைத்தும் கையளிக்கப்பட வேண்டும் - அழிந்து போன அல்லது அழிக்கப்பட்ட அனைத்துக்கும் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.

ஆட்சித் தலைமைகளின் நியாயமற்ற நடவடிக்கைகளால் அரசியல் கைதிகளானவர்கள் - போராளிகள் உட்பட அனைவரும் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்படவேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நியாயமாகவும் - நீதியாகவும் - நிரந்தரமாகவும் தீர்க்கவல்ல அரசியல் யாப்பு ஒன்றை சர்வதேச அங்கீகாரத்துடன் உருவாக்க வேண்டும்.



இவையனைத்தும் அவசியமாகவும் அவசரமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். இவற்றை அடாவடித்தன அராஜக அரசியல்வாதிகளாகவோ உள்முரண்பாடுகள் கொண்ட தமிழ்த் தேசியம் பேசும் உடைந்த கூட்டமைப்புக்களாகவோ, சுயநல சுயேச்சை குழுக்களாகவோ சாதிக்க இயலாது.

சாதிக்கவும் மாட்டார்கள். இதுவே இன்றைய யதார்த்தம். சாதாரண மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளைக் கூட அர்ப்பணிப்புடன் செய்யும் மனோ பாவமும் இவர்களிடம் இல்லை என்பதை இவர்களின் கடந்த காலங்கள் உணர்த்தி நிற்கின்றன.

எனவே தமிழ் மக்கள் தீர்க்கமாகச் சிந்தித்து செயற்பட வேண்டிய கட்டம் இதுவாகும்.

மக்களை அறிந்தவர் மக்களோடு வாழ்பவர்
மக்களுக்காக சிந்தித்து பணியாற்றக்
கூடியவர்
எவரோ...அவருக்கே வாக்களியுங்கள்..
ஆட்சி மாற்றமின்றி...
அரசியல் மாற்றமின்றி..அமைதியில்லை!
ஏப்ரல் 8
ஆட்சிமாற்றத்துக்கான நாளாகட்டும்
அமைதிக்கான உதய நாளாகட்டும். *

# கொள்கையில் உறுதியாகவும் நேர்மையாகவும் செயற்படக் கூடிய அரசியற் தலைமையே வேண்டும்

## முதன்மை வேட்பாளர் வரதராஜன் கூறுகிறார்



**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதன் நோக்கம் யாது?**

தமிழ்மக்களின் விடிவிற்கான ஆயுதப் போராட்டம் ஓர் முடிவிற்கு வந்தநிலையில், நாடாளுமன்ற அரசியலினூடாகவே தமது அரசியல் உரிமைக்காகத் தமிழ்மக்கள் போராட வேண்டி நிலையில் இன்றுள்ளனர். கொள்கையில் உறுதியாகவும், நேர்மையாகவும் செயற்படக்கூடிய ஓர் அரசியற் தலைமை மக்களுக்குத் தேவையாக உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் இவ்வாறானதல்ல. ''நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை செய்வாரடி கிளியே, வாய்ச் சொல்லில் வீரரடி' என்ற பாரதியாரின் வரிகளே இவர்களுக்குப் பொருந்தும்.

கூட்டமைப்பு மக்களை தவறான பாதைக்கு அழைத்துச் செல்லப் போகின்றது. எனவே கூட்டமைப்பின் தவறுகளைச் சுட்டிக்காட்டி, தமிழ்மக்களின் உண்மையான அரசியல் அபிலாசைகள் என்ன என்பதை வெளிப்படுத்துவதற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றோம். இதில் முதற் கட்ட வெற்றியை நாம் அடைந்திருக்கின்றோம். கடந்த மாதம் வரை கூட்டமைப்பினர் கூறிவந்த கருத்துக்களுக்கு, தற்போது கூறிவரும் கருத்துக்களுக்குமிடையில் காணப்படும் முரண்பாடுகளை அவதானிக்கும்போது இது தெளிவாகின்றது. தமிழ்த்தேசியம், தமிழ்த் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பன வெறும் கோஷங்கள். யதார்த்தமானவற்றை நாம் கேட்டுப் பெறவேண்டும். இந்தியாவின் மனம் நோகக் கூடாது. இந்தியா தருவதை நாம் வாங்கிக் கொள்ள வேண்டும். 2004ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அது எங்கள் மீது திணிக்கப்பட்டது என்றெல்லாம் கடந்த ஒரு மாதம்வரை கூறிவந்தவர்கள் இன்று என்ன கூறுகிறார்கள்? நாங்கள் தமிழ்த் தேசியம், தமிழ்த் தாயக, சுயநிர்ணய உரிமை என்பனவற்றை கைவிடவில்லை. நாங்களும் அவற்றைத்தான் கூறுகின்றோம். இந்தியாவை எங்களுடைய நிகழ்ச்சி நிரல்களுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றோம் என்றெல்லாம் கூறுகின்றார்கள். ஏன் இந்த திடீர்மாற்றம்? தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி தனது கொள்கையின் உறுதிப்பாட்டினை வெளிப்படுத்தியதன் விளைவே இதுவாகும். இப்போதும் கூட அவர்கள் இவற்றை வெறுமனே தேர்தல் கோஷங்களாக வைத்து மக்களை ஏமாற்ற முற்படுகின்றனர் என்ற உண்மை ஒருபுறம் இருக்க, போலியாகவேனும் அவர்களை இவ்வாறு கூறவைத்தது, தேர்தலுக்கு முன்பாகவே எமக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும். மக்கள் அவர்களின் போலித்தனத்தை விளங்கி, தேசியத்தின் பால் உண்மையான பற்றுதியோடு செயற்படுகின்ற எங்களை ஏப்ரல் 8ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் தங்களின் பிரநிதிகளாக ஏற்றுக் கொள்வார்கள் என்பது எமக்குக் கிடைக்கும் அடுத்த வெற்றியாகும்.

**ஆசிரியத் துறையில் நன்கு அறிமுகமான நீங்கள் அரசியலில் புதுமுகமாய் களம் இறங்கியிருக்கிறீர்கள். அந்த வகையில் இன்றைய சூழலில் தேர்தல் கள நிலைமைகள் எவ்வாறிருக்கின்றன?**

'மனிதன் ஒரு அரசியற் பிராணி. யாருமே அரசியலுக்குப் புதுமுகமல்ல. எல்லோரும் அரசியல் பேசுகிறார்கள். ஆனால் எங்கு பேசுகின்றார்கள் என்பதுதான் பிரச்சினை. சிலர் தனக்குள்ளே அரசியல் பேசுகின்றார்கள், வேறு சிலர் நான்கு சுவர்களுக்குள் அரசியல் பேசுகின்றார்கள். எனவே நான் அரசியலுக்குப் புதுமுகமல்ல. தேர்தலுக்குத்தான் புதுமுகம். தேர்தலில் வெற்றி பெறுவதற்கு உறுதியான கொள்கை, நேர்மை, ஒழுக்கம் என்பன முக்கியமல்ல. பொய்களும் தந்திரங்களும்தான் முக்கியம் என்பது புலனாகின்றது. தங்களிடம் இல்லாததொன்றை இருப்பதுபோலக் காட்டிக் கொள்வது முக்கியம். ஆனால் நான் இதிலிருந்து வேறுபட்டிருக்கவே விரும்புகின்றேன்.

''தன்னை உயர்த்துவதற்கு அரசியலைப் பயன்படுத்துபவன் அரசியல்வாதி. ''மக்களை உயர்த்துவதற்கு அரசியலைப் பயன்படுத்துபவன் அரசியல்ஞானி'' நான் அரசியல்வாதியல்ல.

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் வருடாந்தம் 50லட்சம் ரூபா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மாவட்ட அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுகின்றது. கடந்த ஆறு வருட காலங்களுக்கும் மொத்தம் 3 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவுக் கணக்கினை எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினராவது மக்களுக்கு தெரியப் படுத்தியுள்ளார்களா? எந்தெந்தத் திட்டங்களுக்கு எவ்வெப்போது எந்தளவு நிதி ஒதுக்கப்பட்டது? அத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டனவா? இன்று அத்திட்டங்கள் என்ன நிலையில் உள்ளன? என்ற விவரங்களை எந்தவோர் உறுப்பினராவது இன்றுவரை வெளிப்படுத்தியுள்ளாரா? இன்று தேர்தலுக்காக லட்சக்கணக்கில் பணத்தைச் செலவழித்து பத்திரிகையில் விளம்பரம் செய்பவர்கள், ஒவ்வொரு வருட முடிவிலும் தனக்கு ஒதுக்கப்பட்ட 50 லட்சம் ரூபா எவ்வாறு செலவிடப்பட்டது என்ற விவரங்களை பத்திரிகை மூலம் வெளிப்படுத்தியிருக்கலாம்தானே. செய்ததைச் சொல்லிக்காட்டக் கூடாது என்றோ அல்லது வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது என்றோ கூறுவதற்கு இது அவர்களின் சொந்தப் பணம் இல்லையே. நான் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தால் செலவிடப்படும் ஒவ் வொரு ரூபாவிற்குமான கணக்கு மக்களுக்குக் காட்டப்படும். நான் இதனைச் செய்யும் போது மற்ற உறுப்பினர்களும் இதனைச் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இணைந்து போட்டியிடுவதன் நோக்கம்?**

தவறு. நான் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இணைந்து போட்டியிடவில்லை. தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியின் சார்பில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சின்னமாகிய சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்றேன். தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இணைந்திருக்கின்றனர்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுபற்றி உங்கள் கருத்து யாது?**

இது அவர்களுக்கே தெரியாது. வானிலை அறிக்கை போல அவர்களது நிலைப்பாடு அன்றாடம் மாறிக்கொண்டிருக்கும். சாப்பாட்டுக் கடைகளுக்கு முன்னால் 'இன்றைய ஸ்பெஷல்' என்றொரு விளம்பரப் பலகை வைத்து அன்றாடம் அழித்தழித்து எழுதுவதை அவதானித்திருப்பீர்கள். அதே போல கூட்டமைப்பும் தனது அலுவலகங்களுக்கு முன்னால் இன்றைய எமது கொள்கை என்ற ஒரு விளம்பரப் பலகையை வைத்து அன்றாடம் அழித்தழித்து எழுதிக் கொண்டிருந்தால் மக்களுக்குக் குழப்பம் இருக்காதா? உங்களுடைய வினாவிற்கு விடை கூறுவதற்கு எனக்கும் இலகுவாக இருந்திருக்கும்.

**தேர்தலில் வெற்றி பெறுவீர்கள் என்ற நம்பிக்கை உள்ளதா?**

நிச்சயமாக. ஏனெனில் தமிழ் மக்கள் என்றும் கொள்கைப் பற்றுள்ளவர்கள் பக்கம் இருப்பவர்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. எமது கொள்கை சத்தியமானது. எமது கொள்கை வெல்லும். எனவே அக்கொள்கையின் பின்னாலுள்ள நாமும் வெல்வோம்.

**யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகின்ற சுயேச்சைக் குழுக்கள் பற்றி?**

அவர்கள் கழிவுகள். தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 5 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெறும் குழுக்களின் வாக்குகளைக் கழிவு வாக்குகள் என அழைப்பர். அதைத்தான் அவர்கள் பெறப் போகின்றார்கள். இவர்கள் நாடாளுமன்ற ஆசனங்களைப் பெறப்போவதில்லை. இது அவர்களுக்கும் தெரியும். ஆனால் இவர்களின் போட்டியினால் 5 சதவீதத்திற்கும் சற்றுக் கூடுதலான வாக்குகளைப் பெறுகின்ற ஒரு சிறிய கட்சியும் ஓர் ஆசனத்தைப் பெறும் வாய்ப்பும் ஏற்படலாம். இந்நோக்கத்திற்காகவே ஏராளமான சுயேச்சைக் குழுக்கள் தேர்தல் களத்தில் இறக்கப்பட்டுள்ளன. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org